Sangathamil
# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 39 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 டிசம்பர் 2022




தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING
PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
வீடுகள், கொண்டோக்கள், வாடகை வசிபபிடங்கள், வீட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

RAMACHANDRAN LAW
Professional Corporation
Family Law
Real Estate
Civil Litigation
Wills & Estates
Corporate Law
BARRISTER & SOLICITOR
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours) | LSO 70103E
416.902.8225
Vithu@Ramachandran.Law
WWW.RAMACHANDRAN.LAW
908-305 Milner Ave. Toronto ON M1B 3V4

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

We print all kind of products
GRAND OFFER
this Offer Only November 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copys
Inside 52 Pages, B&W 20lb
with colour glossy cover
c $ 710.00
Banners
Large Format Digital Printing
Design Only
c $ 49.99 / Hour
1000
Business Cards
with out design c $ 99.99
One Side - 16pt Card Stock
with out design c $ 49.99
One Side, 12pt Card Stock
Call Me: Silver Print House - 437 423 5460

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc. Brokerage
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

JRS AUTO TECH
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
OPEN FROM 9 AM - 9PM
AC $99.99 +
OIL CHANGE $39.99 +
USED TIRE $49.99 +
BRAKES JOB $249.99 +
Subas: 416-206-9489 Office: 416-628-4399
2655 Lawrence Ave., E, Unit 05, Scarborough ON M1P 2S2
JRSAUTOTECH@HOTMAIL.CA

2023
விளம்பரத்துக்கு
அழையுங்கள்
437.345.4203

Annai's PRAGATI
SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1 647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

அறிவித்தல்
Scarborough
Home Renovaiton
நிறுவனத்தில் பணிபுரிய
அனுபவம் உள்ள பணியாளர்கள்
தேவை
அழையுங்கள்: 647.218.7157

Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்
www.sangathamil.ca

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**சுதந்திரம் வேண்டிக் கிளர்ந்தெழும் ஓர் இனம், பொருளாதார வாழ்வில் தன் சொந்தக் கால்களில் நிற்க வேண்டும். அத்தகைய இனத்தால்தான் சுதந்திரத்தை அனுபவிக்க இயலுமென்பது நியதியாகும்.**






# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# மரணத்தின் பின்பும் வாழும் தேசத்தின் குரல்




தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பம் முதல் இன்று வரை ஒரே இலக்கை மையமாகக் கொண்டே நகர்ந்து செல்கின்ற போதிலும் அதன் செல்நெறியைத் தீர்மானிப்பதில் பலரும் பங்களிப்புச் செய்துள்ளார்கள்.

உலகில் இதுவரை நடைபெற்ற அனைத்துப் போராட்டங்களையும் போன்று போராட்ட வரலாறானது போராட்ட அமைப்பின் தலைமையைச் சார்ந்தே இருந்து வந்துள்ளது. எமது விடுதலைப் போராட்டமும் அதற்கு விதி விலக்கல்ல.

எனினும், எமது விடுதலைப் போராட்ட வரலாற்றை ஆய்வு செய்யப் முனைவோர், போராட்டத்தின் - மிகக் குறிப்பாகச் சொல்வதானால் போராட்ட வழிமுறையின் - செல்நெறியைத் தீர்மானிப்பதில் தேசியத் தலைவருக்கு அடுத்ததாக அதிகம் செல்வாக்குச் செலுத்திய ஒரு தனிநபரைக் கண்டறிவராகில் அது 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தைத் தவிர வேறு யாருமாக இருக்க முடியாது.

ஆயுதப் போராட்டங்கள் பெரும்பாலும் உருவாக்கப் படுவதில்லை. உண்மையான நேர்மையான விடுதலைப் போராட்டங்கள் சூழ்நிலையின் குழந்தையாகவே பிரசவிக்கின்றன. இத்தகைய வேளையில் பெரும்பாலும் உணர்ச்சியால் - மிக அரிதாக - உணர்வால் உந்தப்பட்ட தனிநபர்கள் போராட்டத்தின் முன்னணிப் பாத்திரத்தை ஏற்றுக் கொள்கின்றனர். இது தவிர்க்க முடியாத ஒரு நியதியாக உள்ளது.



இத்தகைய போராட்டங்களை புத்திஜீவிகள் மிகவும் கவனத்துடன், தள்ளியிருந்து அவதானிப்பார்கள். அவர்களைப் பொறுத்தவரை இத்தகைய விடயங்கள் வாலிபப் பருவத்துச் சாகச விளையாட்டுக்களாவே தெரியும். எனவே ஆரம்பத்தில் இத்தகைய நடவடிக்கைகளை விமர்சிக்க முனைவர். முடிந்தால் முளையிலேயே கிள்ளிவிடத் துணிவர்.

ஆனால், இது முடியாமற் போகும் போதும், சமூகத்திலே ஏற்பட்டு வரும் மாற்றங்களை அவர்கள் உணரத் தொடங்கும் போதும், அவர்களுடைய முன்னைய அபிப்பிராயம் மாறும். இந்நிலையில் அவர்கள் தாமாகவே போராட்டங்களில் இணைந்து கொள்வர். அதற்கு வலுச் சேர்ப்பர். அத்தகையோரின் தேவையை உணர்ந்து அவர்களை நாடிச் சென்ற நிலைமை மாறி, அவர்களாகவே போராளிக் குழுக்களை நாடிச் செல்வர்.

அன்ரன் பாலசிங்கம் விடயத்திலேயும் இதுவே நடந்தது. லண்டனில் வாழ்ந்து கொண்டிருந்த அவர் சென்னைக்கு வந்து தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார். நட்பை ஏற்படுத்திக் கொணடார் இந்த நட்பு எத்தகைய ஆழமானது என்பதைத் தொடர்ந்து வந்த காலங்களில் பல தடவைகளில் நாம் காணக் கூடியதாக இருந்தது.

அன்ரன் பாலசிங்கம் போராட்ட அரசியலில் பிரவேசித்த காலகட்டத்தில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட அரங்கில் பல போராட்ட இயக்கங்கள் இருந்தன. ஓடிக் கொண்டிருக்கிற குதிரைகளில் தொடர்ந்து ஓடக்கூடிய குதிரை அல்லது தொடர்ந்தும் ஓடப் போகின்ற குதிரை எது என்பதைத் தீர்மானிப்பதற்கு அவருடைய மதிநுட்பம் உதவியது. 'இறந்த காலத் தெளிவும், நிகழ்கால நிதானமும் இருந்தால் எதிர்காலத் தீர்க்க தரிசனம் இயல்பாகவே உதயமாகும்" என்ற கூற்றுக்கு ஒப்ப அன்ரன் பாலசிங்கத்தின் தீர்க்க தரிசனம், அவரின் முடிவு சரியானது என்பதை நிரூபித்து நிற்கிறது.

அதேவேளை, தலைவர் பிரபாகரன் கூட 'தான் தேடிக் கொண்டிருந்த நபர்" கிடைத்து விட்டார் என மகிழ்ந்தார். சரியாகச் சொல்வதானால் விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றை அன்ரன் பாலசிங்கத்துக்கு முந்திய காலம், அன்ரன் பாலசிங்கத்துக்குப் பிந்திய காலம் என இரண்டாக வகைப்படுத்தலாம்.

விடுதலைப் புலிகள் பத்தோடு பதினொன்றாக இருந்த காலங்களில், சித்தாந்த அடிப்படையில் செயற்பட்ட இயக்கங்கள் எனத் தம்மை அழைத்துக்கொண்ட ஏனைய இயக்கங்கள் அவர்கள் மீது வைத்த விமர்சனம், 'விடுதலைப் புலிகள் இராணுவ சாகசங்களில் நம்பிக்கை கொண்ட தத்துவ வறுமையுடன் கூடிய சுத்த இராணுவக் கண்ணோட்டத்துடன் செயற்படும் இயக்கம்" என்பதே.

இந்த விமர்சனம் ஓரளவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும், தாமும் ஏதொவொரு தத்துவத்தின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என்ற உந்துதல் புலிகளின் தலைமைப் பீடத்திடம் இருந்தமையை மறுக்க முடியாது. தேசியத் தலைவரே ஒத்துக்கொண்ட விடயம், தன்னைப் பெரிதும் கவர்ந்த நூல்கள் தமிழர்களின் பண்டைய பெருமையைக் கூறும் சரித்திர நவீனங்களே என்பதாகும். அதே வேளை, மார்க்சிய நூல்களை அவர் முற்றாகப் புறந்தள்ளி விடவில்லை.

இந்த வேளையில்தான் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் வரவு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச்சியைப் புதிய பாதைக்குத் திசை திருப்பியது. இராணுவ ரீதியாக, சரியான திசையில் புலிகள் காய்களை நகர்த்திச் சென்ற போது, இராஜதந்திர ரீதியிலும் காய் நகர்த்த வேண்டிய தேவையை உணர்த்தி அதற்குச் செயல்வடிவம் தந்தவர் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் என்றால் அது மிகையாகாது.



எதிரியின் கோட்டைக்குள்ளேயே பிரவேசித்து அதிரடித் தாக்குதல்களை நடாத்தி எதிரியைப் பிரமிப்பில் ஆழ்ந்த போராளிகளால் முடிந்ததென்றால், 'சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது, வீரம் மட்டுமல்ல, விவேகமும் தேவை" என்பன போன்ற ஏளனப் பேச்சுக்களைப் புறந்தள்ளி நாங்களும் கைதேர்ந்த இராசதந்திரிகளே என்பதை நிரூபிக்க அன்ரன் பாலசிங்கத்தின் வழி நடத்தல் உதவியது.







இந்திய இராணுவம் தமிழர் தாயகத்தில் நிலை கொண்டிருந்த காலத்தில் 1989 இல் கொழும்புக்குச் சென்று மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுடன் பேச்சு நடாத்தி தமிழ் மக்களையும், சிங்கள மக்களையும் ஒரு சேரப் பிரமிப்பில் ஆழ்த்தியதில் அன்ரன் பாலசிங்கத்தின் பங்கு அளப்பரியது. எந்த எதிரியுடன் போர் புரிந்து கொண்டிருக்கிறார்களோ அந்த எதிரியின் தலை நகருக்கு சொந்த ஆயுதங்களுடன் சென்று பேச்சு நடாத்திய இயக்கம் என்ற பெருமையைப் பெற்றுத் தந்தவரும் அவரே.

அன்ரன் பாலசிங்கத்தின் வகிபாகம், தனியே விடுதலைப் புலிகளுக்கு இராஜதந்திர முகவரியைத் தேடித் தந்தவர் என்பதோடு மட்டும் முடிந்து வில்லை. மாறாக, போராட்டத்திலிருந்து ஒதுங்கியிருந்த புத்திஜீவிகள் சமூகம் கூட அன்ரன் பாலசிங்கத்தின் போராட்ட ஆதரவு காரணமாக ஈர்க்கப்பட்டு போராட்டத்தோடு தம்மைப் பிணைத்துக் கொண்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத இயக்கம் எனக் கூறப்பட்டுத் தடை செய்யப்பட்ட போதிலும்கூட அன்ரன் பாலசிங்கத்தால் லண்டன் இருந்து கொண்டே விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் என்றும், உத்தியோக பூர்வ பேச்சாளர் என்றும் செயற்பட முடிந்தது என்றால் இராஜதந்திர வட்டாரத்தில் அவர் தனக்கெனத் தேடி வைத்திருந்த தனியிடமே அதற்குக் காரணம். துரதிஷ்டவசமாக, மிகவும் தேவைப் படுகின்ற இன்றைய தருணத்தில் அவர் எம்மத்தியிலே இல்லாது போய் விட்டார்.

ஒரு மனிதரின் வாழ்வு என்பது அவன் வாழுகின்ற போதிலும், மறைந்த பின்பும் அதே கனதியுடன் நினைவு கூரப்படுகின்றதென்றால் அது அர்த்தமான வாழ்வாகின்றது. அந்த வகையில் தனக்கும் தான் சார்ந்த சமூகத்துக்கும் அர்த்தம் தரும் வாழ்வை வாழ்ந்த எமது தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் ஈழத் தமிழர் மனதைவிட்டு என்றும் அகலமாட்டார் என்பது சத்தியமான உண்மை.

– சண்.தவராஜா. தமிழ்நாதம் (12.12.2008)



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*




# யாழ். தீவகத்தில் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு கௌரவிப்பு!

நவம்பர் 27, 2022

யாழ். தீவக மாவீரர் நாள் ஏற்பாட்டு குழுவின் ஏற்பாட்டில் புங்குடுதீவு பகுதி மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று (27) புங்குடுதீவு பகுதியில் இடம பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, ஈகைச்சுடர்கள் ஏற்றப்பட்டு மௌன வணக்கம் செலுத்தப்பட்டு மாவீரர்களின் பெற்றோர்களால் மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

தீவக ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.





நிகழ்வில் தீவக மாவீரர் நினைவேந்தல் ஏற்பாட்டு குழுவினர், மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள், தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நந்திக்கடலில் மாவீரர்களுக்க மலர்தூவி வணக்கம் தெரிவிப்பு!

நவம்பர் 27, 2022

உயிர்நீத்த மாவீரர்களுக்காக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் இன்று (27) நந்திக்கடலில் மலர்தூவி வணக்கம் செலுத்தியுள்ளார்.

இவ்வாறு மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்திய பின்னர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

எங்கள் பெருமைமிகு வரலாறின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல். ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும், செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, தாயக விடுதலைக்காக உயிர்நீத்த எங்கள் மாவீரச் செல்வங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதாக அவர் தெரிவித்தார்.





# முல்லைத்தீவு முள்ளியவளை மாவீரர் துயிலுமில்ல வளைவுகள் உடைப்பு!

நவம்பர் 27, 2022

மாவீரர் நாள் நினைவு நிகழ்வுகள் இன்று (27) மாலை இடம்பெறவுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சில துயிலும் இல்லங்களுக்கு சென்றவர்கள் ஏற்பாட்டாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதோடு நினைவு வளைவுகளையும் கொடிகளையும் அறுத்தெறிந்து அட்டாகாசம் புரிந்துள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளது.

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் ஏற்பாடுகளை செய்துகொண்டு மக்கள் நின்றவேளை அவ்விடத்துக்கு வருகை தந்த பொலிஸார் நுழைவாயில் வளைவு மற்றும் கொடிகள் என்பனவற்றை அறுத்தெறிந்து அட்டகாசம் புரிந்துள்ளதோடு கைதுப்பாக்கியையும் எடுத்து ஏற்பாடுகளை செய்தவர்களை சுடுவோம் எனவும் அச்சுறுத்தியுள்ளனர் மேலும் அனைத்து பொருட்களையும் ஏற்றி சென்றுள்ளனர்.

அத்தோடு அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு நேற்று (26) இரவு சென்ற பொலிஸார் வாயிலில் கட்டியிருந்த பதாதைகளை கழற்டிச் சென்றுள்ளதோடு எற்பாடுகளை செய்தவர்களை பயங்கரவாத தடை சட்டத்தில் கைது செய்வோம் எனவும் முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால், மற்றும் முல்லைத்தீவு நகர கடற்கரை துயிலும் இல்லங்களுக்கு சென்ற முல்லைத்தீவு பொலிஸார் நினைவு நிகழ்வில் மாவீரர் நாள் என எழுதிய பதாதையோ நினைவு வளைவோ அல்லது பாடல்களோ ஒலிபரப்பினால் கைது செய்வோம் எனவும் அச்சுறுத்தியுள்ளனர்.














# மாவீரர் லெப். சங்கரின் இல்லத்தில் விளக்கேற்றி வணக்கம் செலுத்தப்பட்டது!

நவம்பர் 27, 2022



தமிழீழப் போரில் முதல் வித்தாகிய வீரமரணமடைந்த மாவீரர் லெப். சங்கரின் இல்லத்தில் சுடரேற்றி வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

கம்பர்மலையில் அமைந்துள்ள சங்கரின் இல்லத்தில் சிவாஜிலிங்கம் தலைமையில் விளக்கேற்றி மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாவீரர் லெப்.பண்டிதரின் தாயாரும் கலந்துகொண்டார்.



# யாழ். கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை விடுவிக்க வேண்டும்!

## வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

நவம்பர் 27, 2022

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தினை குறித்த பிரதேசத்தின் ஆட்சிக்குரிய உள்ளூராட்சி மன்றமான வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையிடம் ஒப்படைப்பதன் வாயிலாக எமது மக்களின் நினைவேந்தும் உரிமைக்கு அரசாங்கம் இடமளிக்க வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் போரில் ஆகுதியாகிய மறவர்களுக்கு நினைவஞ்சலிச் சுடரினை ஏற்றிய பின் கருத்துரைக்கும் போதே அவர் இந்தக் கோரிக்கையினை முன்வைத்தார்.

சேமக்காலைகளை இலங்கையின் சட்ட திட்டங்களின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்களே முகாமை செய்கின்றன. போரில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளின் வித்துடல்கள் விதைக்கப்பட்ட இடங்களை போருக்குப் பின் அரச படைகள் கிளறி எறிந்து மானிட தர்மத்திற்கும் போரியல் விதிமுறைகளுக்கும் மனித உரிமைகளுக்கும் களங்கம் ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஒரு தாய் இறந்த தன் பிள்ளையை நினைவு கொள்ள முடியாது என்று அரசு கருதுமாக இருந்தால் அதையொத்த அரச அடக்குமுறையும் அரச பயங்கரவாதம் வேறு என்னவாக இருக்க முடியும் என்று கேள்வி எழுப்புகின்றோம். உண்மையில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்ட சடலங்களைக்கூட கிளறி எறிந்து இன வெறியைத் தீர்க்கவேண்டும் என்ற எண்ணம் இலங்கையின் அரச கட்டமைப்பில் வேறுண்டி இருக்கையில் நாடு முன்னேறிச் செல்வதற்கே இடமில்லை. மனித நேயமுள்ள சிங்கள தாய்மாரிடமும் சகோதரர்களிடமும் எமது மக்கள் மீது இளைக்கப்பட்ட அநீதிகளை கலந்துரயாட அழைப்பு விடுக்கின்றோம்.

உலக அளவில் எதிரியாக இருந்த போதும் போரில் கொல்லப்பட்டவர்களுக்கு கௌரவமளித்து தூபிகளைக் கூட உலக அளவில் அமைத்துள்ளார்கள். ஆனால், இன்றும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் உள்ளட்ட பல துயிலும் இல்லங்கள் இராணுவ முகாம்களாக உள்ளன. அங்கு இருந்த கல்லறைகள் சிதைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இவ்வாறான மிக அருவருக்கத் தக்க மானிட கௌரவத்திற்கு கிஞ்சித்தும் ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகளை நிறுத்தி கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தினை உள்ளராட்சி மன்றத்திடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

தற்போது அந் நிலம் அரச திணைக்களமென்றிற்குச் சொந்தமான நிலமாக இராணுவ முகாமாக உள்ளது. இந்த இடத்தில் அரசாங்கம் இராணுவ ஒழுக்கத்தினை



பின்பற்றி அந் நிலத்தில் இருந்து இராணுவத்தினை வெளியேற்றுவதுடன் அந் நிலத்தினை உள்ளூாராட்சி மன்றமான வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையிடம் ஒப்படைப்பதன் வாயிலாக உரிய வகையில் மக்களின் நினைவேந்தல் உரிமையினை நிலைநாட்ட முடியும். அதற்கான கோரிக்கையினை முன்வைப்பதுடன் உத்தியோகபூர்வ நடவடிக்ககளயும் முன்னெடுக்கவுள்ளதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# யாழ். கோப்பாய் துயிலுமில்லத்திற்கு முன்பாக மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தப்பட்டது!

நவம்பர் 27, 2022

மாவீரர் நாளில் கோப்பாய் துயிலுமில்லத்தின் நுழைவாயில் முன்பாக மாவீரர்களுக்கு சிவாஜிலிங்கம் தலைமையில் விளக்கேற்றி வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

கோப்பாய் துயிலுமில்லம் சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு 51வது படைப்பிரிவின் தலைமையகமாகக் பயன்படுத்தப்படுகிறது.





# கரும்புலி கப்டன் மில்லரின் நினைவிடத்தில் மாவீரர்களுக்கு வீரவணக்கம்!

நவம்பர் 27, 2022

மாவீர்நாளில் வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தி யாலயத்தில் வீரச்சாவடைந்த முதல் கரும்புலி மாவீரர் கப்டன் மில்லரின் நினைவிடத்தில் மாவீரர்களுக்கு விளக்கேற்றி வீரவணக்கம் செலுத்தப்பட்டது. சிவாஜி லிங்கம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.



# வன்னிவிளாங்குளம் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு!

நவம்பர் 27, 2022

மல்லாவி வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம் வளாகத்தின், உணர்வெளுச்சியுடன் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வெளுச்சியுடன் இடம்பெற்றன.

மேலும் சரியாக மாலை 06.05 மணிக்கு முதன்மைச் சுடறினை இரு மாவீரர்களின் தாயார் நாகேஸ்வரி அவர்களால் ஏற்றப்பட, ஏனைய மாவீரர்களின் உறவு களால் சமநேரத்திலேயே ஏனைய சுடர்களும் ஏற்றப் பட்டன.

அத்துடன் மாவீரர்களின் உறவுகள் பூத்தூவி, கண்ணீர் சொரிந்து தமது உறவுகளான மாவீரச் செல்வங்களை உணர்வெளுச்சியுடன் நினைவேந்தினர்.

இதே வேளை குறித்த மாவீரர் துயிலுமில்லத்தில் இருந்த மாவீரர்களின் கல்லறைகள் இராணுவத்தினரால் இடித் தழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# யாழ் பல்கலைகழகத்திலும், வல்வெட்டித்துறையிலும் தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்தநாள் கொண்டாட்டம்!

நவம்பர் 26, 2022

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் 68வது பிறந்தநாள் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலை மாணவர்களால் கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உள்ள பிரத்தியேக இடமொன்றில் ஒன்றுகூடிய மாணவர்கள் தலைவர் பிரபாகரனின் உருவப்படத்தினை வைத்து கேக் வெட்டி கொண்டாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநாள் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனது 68 வது பிறந்த தின நிகழ்வுகளால் வடமராட்சி நேற்றிரவு முதல் வெடிச்சத்தத்தினால் அதிர்ந்தவண்ணமிருந்தது.

இதனிடைய வல்வெட்டித்துறை ஆலடியில் உள்ள அவரது பூர்வீக இல்லத்தில் முன்னைநாள் நாடாளுமன்ற உறுப் பினர் சிவாஜிலிங்கம் மற்றும் வல்வெட்டித்துறை நகரசபை உபதவிசாளர் சதீஸ் என பலரும் திரண்டு பிறந்த தினக் கொண்டாட்டத்தில் பங்கெடுத்திருந்தனர்.



இலங்கை படைகள் வீதியெங்கும் குவிந்திருக்க இளை ஞர்கள் திரண்டு வெடிகளை வெடிக்க வைத்தும் சிற்றுண் டிகளை வழங்கியும் பிறந்த தின நிகழ்வில் பங்கெடுத் திருந்தனர்.










# கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம் முன்னால் மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தப்பட்டது!

நவம்பர் 27, 2022

மாவீரர் நாளாகிய இன்றுகொடிகாமத்தில் அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்லம் முன்பாக மாவீரர்களுக்கு விளக்கேற்றி வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம் 522வது பிரிகேட் படைப்பிரிவின் தலைமையகமாக இயங்கி வருகிறது. இந்நிலையில் அங்கு சிவாஜிலிங்கம் தலைமையில் விளக்கேற்றி மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தப்பட்டது.



# சிங்கள இராணுவத்தினருக்கான காணி சுவீகரிப்பதற்கு காரைநகரில் முயற்சி !

நவம்பர் 28, 2022

வடக்கில் முப்படைகளிற்கான காணிகளை சுவீகரிப்பது தொடர்பில் எழுந்து சர்ச்சைகளையடுத்து தனது யாழ்ப் பாண பயணத்தின் போது ஆராயவுள்ளதாக இலங்கை ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்நிலையில் சிங்கள இராணுவத்தினருக்கான காணி சுவீகரிப்பதற்கு காரைநகரில் முன்னெடுக்கப்பட்ட முயற் சிகளிற்கு கடுமையான எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இன்றையதினம் காரைநகர் பகுதியில் 44 தமிழ் குடும்பங் களுக்கு சொந்தமான 11 ஏக்கர் காணிகளை இராணுவத் திற்கு அளவிடுவதற்கு உள்ளூர் மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதனையடுத்து காணியை அளவிடுவதற்கு வருகை தந்திருந்த நில அளவை திணைக்களத்தினர் மக்களின் எதிர்ப்பையடுத்து அங்கிருந்து திரும்பிச் சென்றுள்ளனர்.

நாங்கள் சொந்த காணிகள் இல்லாமல் வாடகை வீடு களிலும் முகாம்களிலிருந்தும் மழையிலும் வெள்ளத் திலும் அல்லலப்படுகின்றோம். எங்களது அவல நிலையை கருத்தில் கொள்ளாது ஆக்கிரமித்துள்ள இராணுவத் தினருக்கு காணிகளை அளவிடுவதற்கு முயற்சிக் கின்றனர். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக் கிறோம் என போராட்டத்தில் திரண்டிருந்தவர்கள் குரல் எழுப்பியிருந்தனர்.



# யாழ். அராலியில் கடல் அட்டை பண்ணை அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு!

நவம்பர் 28, 2022

யாழ்ப்பாணம், அராலி பகுதி கடலில் கடல் அட்டைப் பண்ணை அமைப்பதற்கு அங்கிருக்கும் மீனவர்கள் கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் ஏனைய பகுதிகளில் அட்டைப் பண்ணைகளால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஆதரவாக அவர்கள் குரல் கொடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மீனவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் கடற்றொழிலினையே வாழ்வாதாரமாக கொண்டு வாழ்க்கையை நடாத்தி வருகின்றோம். தற்கால பொருளாதார நெருக்கடியால் நாங்கள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளோம்.

இவ்வாறு நாங்கள் பாதிக்கப்பட்டு இருக்கும்போது எமது கடலில் அட்டைப் பண்ணை அமைப்பது என்பது "பனையால் வீழ்ந்தவனை மாடேறி மிதிப்பது" போலாகும்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இங்கே வருகை தந்த சிலர் எமது கடலில் அட்டைப் பண்ணை அமைப்பதற்கு பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள்.

எமது கடலில் இவ்வாறு அட்டைப் பண்ணை அமைக்கும் முயற்சியினை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அத்துடன் இவ்வாறான செயற்பாட்டிற்கு இடமளிக்கவும் மாட்டோம்.

எங்களது கடல் சிறிய கடல். இந்தக் கடலில் பருவகாலத் திற்கு தான் நாங்கள் சிறப்பான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம். மற்றைய வேளைகளில் சாதா ரண அளவிலேயே எமது மீன்பிடி நடவடிக்கைகள் அமை கின்றன.

இது இவ்வாறு இருக்கையில் அட்டைப் பண்ணைகள் இங்கே அமைத்தால் கடலில் உள்ள வளங்கள் அழியும் சந்தர்ப்பம் உள்ளது.

இறால், நண்டு, மீன் இனங்கள் போன்றன கடற்கரை யோரங்களில் தான் இனப்பெருக்கம் செய்கின்றன. இந் நிலையில் கரையோரங்களில் அட்டைப் பண்ணைகளை நிறுவுவதால் கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கம் பாதிக்கப்படும். கடல்வாழ் உயிரினங்கள் நீரோட்டத்தில் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. கடல்வாழ் உயிரினங்கள் அழிந்தால் எமது வாழ்வாதாரம் பாதிக் கப்படும். எனவே தயவுசெய்து எங்களது வயிற்றில் அடிக் காதீர்கள். மீனவர்களை வாழ விடுங்கள்.

தம்பாட்டி, பூநகரி போன்ற கடல்கள் உட்பட பல கடற் பகுதிகளில் அட்டைப் பண்ணைகள் அமைத்ததனால் அப் பகுதி மக்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் அவர்கள் பல நாட்களாக போராட்டம் செய்து வருகின்றனர். ஆனால் அவர்களது குரல்களுக்கு செவி சாய்ப்பவர்கள் யாருமில்லை. அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்நிலையை எண்ணி வருந்துகின்றோம். அவர்களுக்கு எங்களது ஆதரவுகளை தெரிவிக்கின்றோம்.

எரிபொருள் பிரச்சினை எமக்கு பாரியதொரு பிரச்சினை யாக காணப்படுகின்ற நிலையில் இவ்வாறான அட்டைப் பண்ணைகள் எமக்கு புதிய ஒரு தலையிடியாக மாறி யுள்ளது. எனவே உரிய தரப்பினர் மீனவர்களது நிலையை கருத்தில் கொண்டு மிக விரைவில் இதற்கு ஒரு தீர்வினை வழங்க வேண்டும் என்றனர்.

# மாவீரர் நாளை முன்னிட்டு யாழில் சுவரொட்டிகள்!

நவம்பர் 28, 2022

மாவீரர்களை கௌரவிக்கும் விதத்தில் மாவீரர் வாரத்தின் இறுதிநாள நேற்று ஞாயிற்றுக்கிழமை தமிழ்த்தேசியப் பண்பாட்டுப் பேரவையினரால் யாழ்.மாநகரம் முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

'கொண்ட இலட்சியம் குன்றிடா எங்கள் வீரமறவர்களின் மாவீரரர் நாள்' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட சுவரொட் டிகள் யாழ் நகர் எங்கும் ஒட்டப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.




# பிரிகேடியர் தீபன் மற்றும் லெப். கேணல் கில்மனின் தந்தையர் இயற்கை எய்தினார்

டிசம்பர் 09, 2022



தமிழீழ விடுதலைக் காக களம் நின்று போராடிய வட போர் முனை கட்டளைத் தளபதி பிரிகேடியர் தீபனின் மற்றும் லெப் . கேணல் கில்மன் ஆகியோரின் தந்தை கந்தையா வேலாயுதப் பிள்ளை கடந்த 09.12.2022 அன்று 85 ஆவது வயதில் இயற்கை எய்தியமை ஈழத் தமிழர்களை சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

ஆரம்பகால தமிழீழப்போராட்ட காலங்களில் ஆயுத மற்றும் அகிம்சை வழி போராட்டங்களில் தன்னை அர்ப் பணித்த வேலாயுதப்பிள்ளை ஆரம்பகாலத்தில் தந்தை செல்வாவின் சத்தியாக்கிரக போராட்டம் மற்றும் வட்டுக் கோட்டை தீர்மானங்களின் போதும் தனது இளைமைக் காலத்தினை அர்ப்பணித்துக் கொண்டார்.
தன்னை மட்டும் தமிழீழ போராட்டத்திற்கு அர்ப்பணிக் காது தனது புதல்வர்களையும் அர்ப்பணித்தார் வேலாயுதப் பிள்ளை.

அவர்கள்தான் வீரச்சாவினை தழுவிக்கொண்ட தளபதி பிரிக்கேடியர் தீபன் மற்றும் லெப்.கேணல் கில்மன் தமிழீழ போராட்டத்தில் வட போர்முனை கட்டளைத்தளபதியாக இருந்த தளபதி பிரிக்கேடியர் தீபன் பல வெற்றிகரமான போராட்டங்களை மேற்கொண்டு விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் உறுதுணையாக நின்றார்.

இதே போல் தீபனின் இளைய சகோதரனாகிய வேலாயுத பிள்ளை சிவகுமாரும் போராட்டத்தில் தன்னை இணைத் துக்கொண்டு தனது சகோதரனைப்போலவே வேகமாக வளர்ந்த கில்மன் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

1993ல் திருகோணமலைக்குப் பொறுப்பாளராக அனுப்பப் பட்ட கில்மன் 1994ல் நடைபெற்ற தவறுதலான வெடிவிபத் தில் லெப்.கேணல் கில்மனாக தன்னை ஆகுதியாக்கிக் கொண்டார்.

இவ்வாறு ஈழப்போராட்டத்திற்காக தன்னையும் தனது புதல்வர்களையும் அர்ப்பணித்த பொக்கிசக்குரல் ஓய்ந்து ஈழத்தமிழர்களை சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

# தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளின் செயற்பாடுகள் இனங்களுக்கிடையே முரண்பாட்டை தோற்றுவிக்கின்றன!

## தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்

நவம்பர் 29, 2022

வெடுக்குநாறி ஆதிலிங்கேஷ்வரர் ஆலயத்தின் வழிபாடுகளுக்கு இடமளிக்க வேண்டும். தொல்பொருள் திணைக்களத்தின் ஒருசில அதிகாரிகளின் செயற்பாடுகள் பிரச்சினைளை தீவிரப்படுத்தி, இனங்களுக்கிடையில் முரண்பாட்டை தோற்றுவிக்கும் வகையில் காணப்படுகிறது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (நவ.29) இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதாரத்துறை மற்றும் புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள், கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு என்பதிலே பிழை காணப்படுகிறது. இந்த அமைச்சு மத விவகாரங்கள் கலாசார அலுவல்கள் அமைச்சாக குறிப்பிடப்பட வேண்டும் அல்லது மத விவகாரங்கள் என்பதற்கு பதிலாக நாட்டில் உள்ள அனைத்து மதங்களும் அதில் உள்வாங்கப்பட வேண்டும்.



வவுனியா மாவட்டத்தில் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஷ்வரர் ஆலயத்தில் இந்துக்கள் ஆரம்ப காலத்தில் இருந்து வழிபாடுகளில் ஈடுப் பட்டார்கள்.

ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த ஆதிலிங்கேஷ்வரர் ஆலயத்தில் தொல்பொருள் சின்னங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்களம் வழக்கு தாக்கல் செய்தது.

ஆதிலிங்கேஷ்வரர் ஆலய பகுதியில் தொல்பொருள் சின்னங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தப்படவில்லை என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே தமிழர்களின் பாரம்பரிய சின்னங்களை திட்டமிட்டு அழிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் கைவிட வேண்டும். வெடுக்குநாறி மலையில் இந்துக்கள் பாரம்பரிய வழிமுறைகளுக்கு அமைய வழிபாடுகளில் ஈடுப்பட அனுமதி வழங்கப்பட வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குறுந்தூர் மலை விவகாரம் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் குறுந்தூர் கோயிலுக்கு அப்பாற்பட்ட காணி விடயம் தொடர்பில் குறிப்பிடுகிறேன்.

இப்பிரதேசத்தில் உள்ள காணிகளில் 5 அல்லது 6 ஏக்கர் காணியை தவிர்த்து ஏனைய காணிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதி மற்றும் விடயதானத்திற்கு பொறுப்பான அமைச்சர் குறிப்பிட்டுள்ள போதும் மாவட்ட அரச அதிகாரிகள் அதற்கு எதிராக செயற்படுகிறார்கள்.

தொல்பொருள் திணைக்களத்தின் ஒருசில அதிகாரிகளின் செயற்பாடுகள் பிரச்சினைகளை தீவிரப்படுத்தும் வகையில் காணப்படுகிறது.

இனங்களுக்கிடையில் தொடர்ந்து முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படுகிறார்கள். ஆகவே இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என்றார்.

# மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதில் சிக்கல்!

டிசம்பர் 01, 2022

மன்னார் சதொச மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. மன்னார் நீதவான் முன்னிலையில் வழக்கு நேற்று (30) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மன்னார் சதொச மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடர்பில் கடந்த வழக்கு விசாரணையின் போது பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு அமைய முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து நீதவானால் பொலிஸாரிடம் நேற்று புதன்கிழமை வினவப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சார்பாக மன்றில் ஆஜரான சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் கருத்து தெரிவிக்கையில்,

மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதாயின், புதைகுழிக்கு அருகே உள்ள கடைத்தொகுதிகள் உடைக்கப்பட வேண்டும் எனவும் பிரதான வீதி மற்றும் மன்னார் தீவு பகுதிக்கு குடிநீர் வழங்கும் நீர்க்குழாய் தோண்டப்பட வேண்டுமெனவும் பொலிஸார் பதில் வழங்கினர்.

இதற்கேற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கான இயலுமை தமக்கில்லை எனவும் இது தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தின் சட்டப்பிரிவு உள்ளிட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

எனவே, அகழ்வுப் பணிகள் தொடர்பாக நீதிமன்றத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்த மேலதிக தவணைக் காலம் தேவைப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து, புதைகுழி மீதான அகழ்வுப் பணிகள் தொடர்பில் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 27 ஆம் திகதி அறிவிக்க பொலிஸாருக்கு நீதவானால் உத்தரவிடப்பட்டது.



இதனிடையே, ஏற்கனவே கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் சான்றுப் பொருட்கள் என்பன இதுவரை நீதிமன்றத்தில் கை அளிக்கப்படவில்லை என்பதால், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என காணாமல் போனவர்களின் உறவினர்கள் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

அத்துடன், இது தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள மையினால், அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.

இந்த விடயங்களை கவனத்தில் கொண்ட நீதவான் இதற்கான நடவடிக்கைகள் வெகுவிரைவில் முன்னெடுக்கப்படும் என அறிவித்தார்.

இதையடுத்து, வழக்கு விசாரணைகள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

# 38ஆம் ஆண்டு ஒதியமலை படுகொலை நினைவேந்தல்!

டிசம்பர் 02, 2022

முல்லைத்தீவு - ஒதியமலை படுகொலையின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றுள்ளன.

படுகொலை இடம்பெற்று சுமார் நான்கு தசாப்தங்கள் கடந்துள்ள போதிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்காத நிலைமை நீடிக்கின்றமை குறித்து தமிழ் மக்கள் கவலை கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒதியமலை எல்லை கிராமத்தில் சிங்களப் படையினர் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ஆம் திகதி வீடுகளில் இருந்து ஆண்களை மாத்திரம் தனியாக அழைத்துச் சென்று சுட்டுப் படுகொலை செய்திருந்தனர்.



பதவிய இராணுவ முகாமில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஒதியமலை கிராமத்திற்குள் புகுநது படு கொலையினை அரங்கேற்றிருந்தனர்.

படுகொலை செய்யப்பட்ட 32 தமிழ் மக்களின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று உணர்வெழுச் சியுடன் இடம்பெற்றது.

ஒதியமலை சனசமூக நிலைய வளாகத்திலுள்ள நினை விடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட் டிருந்தன.

உறவினர்கள் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினை வாக அமைக்கப்பட்ட நினைவுக் கற்களுக்கு மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

# அனலைதீவு -பருத்தித்தீவுப் பகுதியில் கடலட்டை பண்ணைகள் வேண்டாம்!

### அனலைதீவு கடல்த்தொழிலாளர்கள்

டிசம்பர் 02, 2022

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத் துக்குட்பட்ட அனலைதீவு - பருத்தித்தீவு பகுதியில் கடலத் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அமைக்கப் பட்டுள்ள கடலட்டை பண்ணைகளை உடன் அகற்றுமாறு கோரி, அப்பகுதி கடல்த்தொழிலாளர்கள் தொழில் நடவடிக் கையை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடலட்டை பண்ணைகளை அகற்றும் வரை தமது போராட்டம் தொடரும் என அறிவித்துள்ள அனலைதீவு கடல்த் தொழிலாளர்கள்.





# யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு! உதவி செய்ய முன்வாருங்கள்!

### கலாநிதி ஆறுதிருமுருகன்

டிசம்பர் 03, 2022

யாழ்ப்பாணம் மாவட்ட வைத்தியசாலைகளில் மருந் துகளுக்கு தட்டுப்பாடு காரணமாக மக்கள் பிரதிநிகள் மற்றும் சமய சமூக நிறுவனங்கள் அவசரமாக உதவி செய்ய முன்வாருங்கள் என செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் கோரிக்கை விடுத்ததுள்ளார்.

யாழ் நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடாத்திய ஊடக சந்திப்பிலே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாவட்ட வைத்தியசாலைகளில் மருந்துக் கத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொது மக்களின் அவசிய அத்தியாவசிய தேவையாக மருந்து உள்ளது .

நாடு முழுவதும் பொருளாதார பிரச்சினை இருந்தாலும் யாழ் மாவட்ட வைத்தியசாலைகளில் மருந்துக்கு தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த மருந்துகள் இன்றி மக்கள் அவலப்படுகின்றார்கள் பெரும்பாலும் வைத்தியர்கள் வெளியிலேயே வாங்குமாறு எழுதிக் கொடுக்கின்றார்கள். வெளியே விற்பனை செய் கின்ற மருந்து விற்பனை நிலையங்களில் மருந்துகளின் விலை உச்சத்தை தொட்டுள்ளது.

மிகக் கவலையான விடயமாக தெல்லிப்பளையில் அமைந்துள்ள புற்றுநோய் வைத்தியசாலைக்கு அடிப்படை மருந்துகள் மிகவும் தட்டுப்பாடாக உள்ளது. வைத்திய சாலையின் வைத்தியர்கள் இதை பற்றி அறிவித்துள் ளார்கள்.

ஆனால் நாட்டு மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த இந்த விடயத் தில் கவனம் செலுத்தாது குறிப்பாக வைத்தியசாலைக்கு செல்லும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத வர்களாக இருக்கிறார்கள்.

சமய நிறுவனங்களாக இருக்கிற நாங்கள் 12 இலட்சம் ரூபாவுக்கு மருந்தினை பெற்று கொடுத்துள்ளோம். இந்த வாரம் செல்வச் சந்நிதி ஆச்சிரமம் 8 இலட்ச ரூபாவிற்கு மருந்தை பெற்றுக் கொடுத்துள்ளது. தெல்லிப்பளை வைத் தியசாலையில் இளம்பிள்ளைகளுக்கான மருந்துகளை ஏற்றுகிறார்கள். வயோதிபர்களுக்கு மருந்து ஏற்றுவதற்கு மருந்து இல்லாமையால் வைத்தியர்களும் எதனை செய்வது என்று அந்தரித்து வருகிறார்கள்.

இந்த விடயத்தில் மக்கள் பிரதிநிதிகள் வெளிநாட்டு துதுவ ராலயங்கள்,உதவி நிறுவனங்களிடமாவது கோரிக் கைகளை முன்வைத்து மக்களுக்கான உதவிகளை செய்யவேண்டும். அவர்கள் இதில் கவனம் செலுத்தாது இருக்கிறார்கள்.

பலர் உதவிசெய்ய இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த விடயத்தை தெரிவுபடுத்த வேண்டும். பாராளுமன்றத்தில் பேசப்படும் விடயங்கள் கூட அக்கறைப்படுத்தப்படுவதாக இல்லை. யாரும் எதையும் பேசலாம் அதற்கு எதுவும் பலனில்லை நிண்டநேரம் பாராளுமன்றத்தில் பேசினோம் என்பதற்கு இன்று பலனில்லை.

மக்களை நேசிப்பவர்கள் வீடுவீடாக சென்று வாக்கு கேட் பவர்கள், மக்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் வெறு மேன விழாக்களுக்கும், கூட்டங்களுக்கும், கொண்டாட் டங்களுக்கும் போவது மட்டுமல்ல நோயுற்றவர்கள், துன்பப்படுபவர்கள் மத்தியில் சென்று அவர்கள் பிரச் சினைகளை கேட்கவேண்டும்.

தயவுசெய்து மக்கள் பிரதிநிகளாக இருப்பவர்கள் பாராளு மன்ற உறுப்பினர்கள்,கட்சி தலைவர்கள், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள் நேரடியாக வைத்தியாலைகளுக்கு செல்லுங்கள். குறிப்பாக தெல்லிப்பளை வைத்தியசாலை யில் வடக்கு கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்களே சிகிச்சை பெற்றுவருகிறார்கள். சிறுவர் முதல் வயோ திபர்கள் சிகிச்சைக்காக வருகிறார்கள் இவர்களை காப் பாற்ற வைத்தியர்கள் போராடுகிறார்கள்.

ஆனால் கற்றறிந்த சமூகம், மக்களின் பிரதிநிதிகள் என்று கூறுபவர்கள் இதில் கவனம் செலுத்தாது இருப்பது மிக கவலையான விடயம். எனவே சகல தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் நாங்கள் தான் மக்களின் தலைவர்கள் என கூறுபவர்கள்.

உடனடியாக தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு மட்டு மன்றி யாழ்போதனா வைத்திய சாலை உட்பட அனைத்து பகுதிகளிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு சென்று வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்துகளின் விபரங்களை பெற்று தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலோ அல்லது தங்களுடைய சிறப்புரிமையை பயன்படுத்தி இந்தியா உள்ளிட்ட சகல துதுவராலயங்களிடம் கோரிக் கைகளை முன்வைத்து நோயால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு உதவுவதற்கு முன்வருமாறு தமிழ்மக்கள் சார் பில் சமூக பொறுப்புள்ளவன் என்ற வகையில் சமூகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# கிளி, முல்லை, மாவட்டத்தில் முன்பள்ளி பாடசாலைகளை சிறீலங்கா இராணுவம் நிர்வகிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும்!

டிசம்பர் 02, 2022

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்பள்ளி பாடசாலைகளை இராணுவம் நிர்வகிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இந்த முன்பள்ளி பாடசாலைகளை கல்வி அமைச்சு பொறுப்பேற்க வேண்டும். கல்வி அடிப்படை உரிமையாக காணப்பட்டாலும்,இலங்கையில் கல்வி அரசியல் கொள்கை அடிப்படையில் வகுக்கப்படுகிறது.

கல்வி கொள்ளை நிலையானதாக அமைக்கப்பட்டால் மாத்திரமே இந்த நாடு முன்னேற்றமடையும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (01) இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கல்வி மற்றும் மகளிர் விவகாரங்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

மனிதன் பிறிதொரு மனிதனின் ஆளுமையை அழிக்கும் வகையில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 539 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் கல்விக்கு 232 பில்லியனும், விவசாயத்திற்கு 115 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மனித வளத்தை அறிவூர்வமாக உருவாக்கும் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி வெறும் கண்துடைப்பாக உள்ளது. கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்த நிதி நாட்டின் கல்வி துறையை மேம்படுத்தும் என எதிர்பார்க்க முடியாது.

புதிய கல்வி கொள்கையை கொண்டு வருவதாக கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.முன்வைக்கப்படும் கொள்கைகள் நிலையானதாக அமையுமா என்பது தொடர்பில் ஆராய வேண்டும்.

ஒரு அரசாங்கம் முன்வைக்கும் கொள்கையை ஆட்சிக்கு வரும் அடுத்த அரசாங்கம் முன்னர் முன்வைத்த கொள்கையை இரத்து செய்து புதிய கொள்ளையை அமுல்படுத்தும் நாட்டின் கல்வி கொள்கையிலும் இவ்வாறான தன்மையே காணப்படுகிறது. ஆகவே முதலில் நிலையான கல்வி கொள்கையை கொண்டு வாருங்கள்,அதுவே இந்த நாட்டின் முன்னேற்றத்தை உறுப்படுத்தும்.



பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்த நாடுகள் கல்வி கொள்கையை உறுதியாக உருவாக்கியுள்ளன.

ஆங்கில கொள்கைக்கு முன்னுரிமை வழங்குவது வரவேற்கத்தக்கது. தோல்வியடைந்த கொத்தணி கல்வி திட்டத்தை மீண்டும் செயற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. நாட்டில் முள்பள்ளி கல்வி திட்டத்தை மேம்படுத்த அரசாங்கத்திடம் எவ்வித திட்டமும் கிடையாது.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியிலும் வடக்கு மாகாணத்தில் இராணுவம் முன்பள்ளிகளை நிருவகிக்கிறது. சிவில் பாதுகாப்பு பிரிவு ஊடாக இவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. இந்த முன்பள்ளிகளை கல்வி அமைச்சு முன்னெடுத்தால் நாட்டின் கல்வித்துறையை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியும்.கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்பள்ளி பாடசாலைகளை இராணுவத்தினர் நிர்வகிப்பதை நிறுத்த வேண்டும். உலகில் ஜனநாயக நாடுகளில் இவ்வாறான தன்மை காணப்படுகிறதா, ஆகவே இராணுவ மனநிலையில் இருந்து முதலில் விடுப்படுங்கள்.

53 ஆயிரம் பயிலுனர் பட்டாரிகளுக்கு அபிவிருத்தி அதிகாரி (தரம் மூன்று) நியமனங்கள் வழங்கப்பட்டது. ஆசிரியராக நியமனம் வழங்கப்பட்ட போது அவர்கள் அபிவிருத்தி அதிகாரி என்ற அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஆசிரிய துறை வான்மை விருத்தியுடன் தொடர்புடையது, இந்த நியமனத்தை ஏன் முறையாக வழங்க முடியாதுள்ளது. நியமிக்கப்பட்டவர்கள் ஆசிரியர்களாக நியமனம் வழங்கப்பட்ட போதும் அவர்களின் சம்பளம், விடுமுறை ஆகியவை அபிவிருத்தி அதிகாரிகள் என்ற அடிப்படையில் காணப்படுகிறது. இது எவ்வாறு சாத்தியப்படும். இவ்வாறான செயற்பாடுகளினால் அந்த ஆசிரியர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள, ஆகவே இப்பிரச்சினைக்கு அரசாங்கம் சிறந்த தீர்வினை முன்வைக்க வேண்டும்.

13 ஆயிரம் ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவதாக குறிப்பிடப்படுகிறது. மஹரகம தேசிய கல்வி நிறுவனத்திற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆசிரியர்கள் தற்போதைய பொருளாதார நிலையில் வந்து செல்வது கடினமானது. ஆகவே தேசிய கல்வி நிறுவனத்தின் கிளை ஒன்றறை மாங்குளம் பகுதியில் நிறுவ வேண்டும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டு 50 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் கல்வி முகாமைத்துவ கற்கை முறைமை உருவாக்கப்படவில்லை. இந்த கல்வி முகாமைத்துவ முறைமை உருவாக்கப்பட்ட கல்வித்துறை முன்னேற்றமடையும். கல்வி என்பது அடிப்படை உரிமை, ஆனால் இலங்கையில் கல்வி அரசியலுக்காக பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் அனைத்தும் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு பாடசாலையில் கல்வி கற்ற சுதாகரன் வர்ஷணனின் தற்கொலை தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் கிழக்கு மாகாண ஆளுநருக்கும், அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ளது. 2022.11.11 ஆம் திகதி மட்டக்களப்பு வலய கல்வி பணிப்பாளரினால். குறித்த பாடசாலையில் விஞ்ஞான பகுப்பாய்வு கலந்துரையாடல் தொடர்பான கூட்டத்திற்கு மாணவர்கள் பெற்றோருடன் கட்டாயப்படுத்தப்பட்டு சமூகமளிக்கப்பட்டுள்ள நிலையில், அமரர் சுதாகரன் வர்ஷணன் கலந்துக்கொள்ளவில்லை எனவும், பெற்றோர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு அமையவாக மாணவனின் சுயவிருப்பத்திற்கு மாறாக கட்டாயப்படுத்தி பெற்றோர் அழைத்து வரப்பட்டமை தொடர்பாகவும். சுய விருப்பத்திற்கு மாறாக கூட்டத்திற்கு அழைக்கப்பட்டமையால் மன உளைச்சலுக்கு உள்ளாகி இந்த மாணவன் விதையை உட்கொண்டதன் பின்னர் வைத்தியசாலையில் சிகிச்சைக்கான அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தார். இந்த சம்பவத்திற்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.

ஒரு மாணவன் கொல்லப்பட்டுள்ளார். கட்டாயப்படுத்தல் ஊடாக இந்த மாணவனின் மரணம் பதிவாகியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் உதயன் ஆளுநருக்கும், அரசாங்க அதிபருக்கும் எழுத்துப்பூர்வமாக அறிவித்துள்ளார். ஆனால் இதுவரை அந்த மாணவனுக்கு நீதி கிடைக்கவில்லை. ஆகவே இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு சபையில் வலியுறுத்துகிறேன் என்றார்.

# மகாவலி அபிவிருத்திக் குடியேற்றத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கிரானில் போராட்டம்!

டிசம்பர் 05, 2022

இலங்கை மகாவலி அபிவிருத்தி திட்டம் ஊடாக மேற்கொள்ளப்படும் ட வலய அபிவிருத்தி, குடியேற்றத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு விவசாய கமநல சங்கங்கள்,பொதுமக்கள், சிவில்சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து இன்று காலை (05.12.2022) மட்டக்களப்பு கிரான் சந்தியில் ஒன்று கூடி தமது எதிர்ப்பினை தெரிவித்திருந்தனர்.

மாகாவலி அபிவிருத்தி திட்டம் ஊடாக மகாவலி ட வலயத்தில் உள்ள காணிகளை பிற மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

இனப்பிரச்சினை தீவிரமாக உள்ள இலங்கை நாட்டில் சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் மற்றும் காணிகள் திட்டமிட்டு பெரும்பான்மை சமூகத்தால் பறிக்கப்பட்டுவரும் நிலையில் இந்த மகாவலி அபிவிருத்தித் திட்டமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழும் தமிழ், முஸ்லீம் மக்களின் விகிதாசாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் சிங்கள குடியேற்றங்களுக்கு உந்துசக்தியாக அமைந்துள்ளது.

தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் இதுவரை சிங்கள மக்கள் பெரும்பான்மையாக இல்லாத நிலையில் அபிவிருத்தி திட்டம் என்ற போர்வையில் பொலனறுவை, அம்பாறை மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு மட்டக்




களப்பு மாவட்டத்தில் உள்ள காணிகளை வழங்குவதன் ஊடாக எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கொண்டு வர முடியும் என கூறப்படுகிறது.

இந்நிலையில் குறித்த மகாவலி அபிவிருத்தித் திட்டம் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிக்கும் திட்டம் என தமிழ் மக்கள் கருதுகின்றனர் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடாத்த தொடங்கி உள்ளனர்.



# தமிழ் அரசியல் வாதிகளின் படங்களுக்கு அழுகிய தக்காளி வீசிப் போராட்டம்!

டிசம்பர் 10, 2022

வவுனியாவில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களின் பதாதை மீது அழுகிய தக்காளிப் பழம் வீசப்பட்டு ஆர்ப்பாட்டப் போராட டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.






வவுனியா, ஏ9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக கொட்டகை அமைத்து 2120 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவுகளால் அவர்களது போராட்ட கொட்டகை முன்பாக இன்று (10) முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போதே தமிழ் எம்.பிகளின் பதாதை மீது அழுகிய தக்காளிப் பழம் வீசப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார் “அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை ஏந்தியவாறும், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களை தாங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், தமக்கு நீதி வேண்டும் எனவும், நீதி மறுக்கப்பட்ட நாட்டில் மனித வுரிமைகள் தினம் எதற்கு“ எனவும் கோசம் எழுப் பியதுடன், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களிப்பு இன்றி அரசாங்கத்துடன் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுவார்த்தைக்கு செல்லக் கூடாது எனவும், இது அரசாங்கத்தை காப்பாற்றும் முயற்சி எனவும் தெரிவித்தனர்.

இதன்போது, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்மந்தன், தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டனியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கல நாதன், சி.சிறிதரன், த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், வினோதரராதலிங்கம், கோவிந்தம் கருணாகரன், ஈபிஆர்எல் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரது உருவம் பொறிக்கப்பட்ட பதாதைக்கு அழுகிய தக்காளிப் பழத்தால் வீசி, மத்தியஸ்தம் இன்றி அரசாங் கத்துடன் தனித்து பேச்சுவார்த்தைக்கு செல்லாதீர்கள், இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றாதீர்கள் எனக் கூறி தக்காளிப் பழங்களை வீசித் தாக்கினர்.

குறித்த ஆர்ப்பாட்டமானது சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்றதுடன், இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக ஆசிரியர்கள் போராட்டம்!

டிசம்பர் 14, 2022

வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக பல்வேறுபட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, இலங்கை ஆசிரியர் சங்கம் இன்றைய தினம் புதன்கிழமை கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தது.

“வடமாகாண கல்வி அமைச்சில் காணப்படும் சீர்கேடுகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாகவும் நிர்வாக ஆளுமை யற்ற தன்மை காரணமாகவும் குறித்த போராட்டத்தை முன்னெடுத்ததாக ஆசியர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, வடமாகாண கல்வித்துறையில் உள்ள சீர் கேடுகள் தொடர்பில் 2021 டிசம்பர் மாதம் வடமாகாண ஆளுநர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 100 பக்க முறைப்பாடு ஒன்றை வழங்கியிருந்தோம்.

அதற்கு ஒரு விசாரணைக் குழுவை நியமித்தனர். குறித்த விசாரணை தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரை கேட்ட போதும் அது இதுவரை எமக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

முறைப்பாட்டை வழங்கி அண்ணளவாக ஒரு வருட மாகிய போதும் கூட விசாரணை இன்னும் முடிவுறாத நிலைமையில் எமக்கு இதனுடைய பின்னணி தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

மூன்றாம் தவணை ஆரம்பித்த போதும் இரண்டாம் தவணைப் பரீட்சையை வைக்கமுடியாத அளவுக்கு வட மாகாண கல்வியமைச்சு மற்றும் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் நிலைமை போயுள்ளது.




இந்த நிலையில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தோம் என்றனர்.

# தமிழர் தாயகத்தில் தொடரும் பௌத்த சிங்கள பயங்கரவாத அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள்!

டிசம்பர் 14, 2022

முல்லைத்தீவு வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாமிற்காக தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் நோக்கில் நடைபெறும் அளவீட்டு நடவடிக்கைகளை எதிர்த்து இன்றைய தினம் முகாம் வாயிலில் மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது அங்கு வந்த கடற்படையினர் அங்கு நின்ற பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இருவரையும் தமது கடற்படை வாகனத்தில் வலுக்கட்டாயமாக ஏற்றிக் கொண்டு சென்றுள்ளனர்.

தமிழர் தாயகத்தில் தொடரும் பௌத்த சிங்கள பயங்கரவாத அரசின் நடவடிக்கைகள்....!



# சர்வதேச மனித உரிமைகள் நாளில் நீதி மறுக்கப்பட்ட மக்களின் குரல்!

டிசம்பர் 10, 2022

சர்வதேச மனித உரிமைகள் நாளான இன்று மட்டக்களப்பு - கல்லடி பாலத்திற்கு அருகிலிருந்து ஆரம்பமான வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களது உறவுகளின் பேரணி மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் நிறைவு பெற்றது.

இதில், கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களது உறவுகள் கலந்து கொண்டனர்.

இப்பேரணியில் கலந்து கொண்டவர்கள் இதன்போது அரசுக்கு எதிராக பல்வேறு கோசங்களை எழுப்பியதுடன், பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். பேரணியின் இறுதியில் மட்டக்களப்பு மணிக்கூட்டுக் கோபுரம் அருகில் கோசங்களை எழுப்பி ஒன்று கூடியதுடன், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு - திருகோணமலை இணைப்பாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.





அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

"10.12.2022 மனித உரிமைகள் மறுக்கப்பட்ட மண்ணில் மீண்டும் ஒரு மனித உரிமைகள் தினத்தை கடந்து செல்கின்றோம். இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம். இத்தினத்தை மனித உரிமைகளை மதிக்கும் நாடுகளும், தனது மக்கள் அந்த மனித உரிமைகளை அனுபவிக்கும் படியாக நடந்துகொள்ளும் நாடுகளும் அனுஷ்டிப்பதே பொருத்தமானதாகும்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம், சிறீலங்கா ஆயுத படையினரால் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் அரசினதும், அரசு படைகளினதும் பொய் வாக்குறுதிகளை நம்பி இறுதி யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் சரணடைந்த, கையளிக்கப்பட்ட, எமது உறவுகளைத் தேடிப் போராடி வருகின்றோம்.

ஆயின் எமது நீதிக்காக போராடும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. போராட ஆயத்தமாகும் போது, சிங்கள அரச புலனாய்வு படைகளால் அச்சுறுத்தப்படுகின்றோம். போராடும் போது காவல்துறையினர் ஒன்றுக்கு மேற்பட்ட வேலிகளாக எம்மை சூழ்ந்து எமது போராட்டத்தை நசுக்கின்றன.

எமது வயோதிப தாய்மாரையும், பெண்களையும் சப்பாத்து காலால் மிதித்தும், பொல்லால் தாக்கியும், பெண்களில் உடைகளைக் கிழித்தும் காட்டுமிராண்டித்தனமாக எம்மை நடத்துகின்றனர்.

இப்படியான மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாகும் நாம் இன்றைய தினத்தில் இதை வெளிக்கொணரும் முகமாக, ஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை செய்கிறோம்.

இதன் மூலம் பாதிக்கப்பட்ட தமிழ் தாய்மார்கள் ஆகிய நாம் அனுபவித்த, அனுபவித்துக் கொண்டிருக்கும் மனித உரிமைகளுக்கு எதிரான அடக்கு முறைகளையும், கண்ணியமற்ற வன்முறைகளையும், நீதி மறுக்கப்பட்டு அநீதியாக நடத்தப்படுவதையும் சர்வதேசத்திற்கும் தெற்கில் வாழும் சிறீலங்கா மக்களுக்கும் மீண்டும் ஒருமுறை தெரியப்படுத்துகின்றோம்.

அதன் மூலம் அனைவரது மனசாட்சியையும் தட்ட மீண்டும் முயற்சிக்கின்றோம். இந்த ஆண்டு சர்வதேச மனித உரிமைகள் தினத்திற்கான கருப்பொருளாக "அனைவருக்கும் கண்ணியம், சுதந்திரம், நீதி" என்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையில் உள்ள பல அரசசார்பற்ற அமைப்புகள் குறிப்பாக தமிழ் மக்களுக்கு சேவை செய்வதாக காட்டிக்கொள்ளும் அமைப்புகள் இந்த நாளை வருடந்தோறும் அனுஷ்டிக்கிறார்கள். இம்முறையும் அனுஷ்டிப்பார்கள்.

அவர்களை நோக்கி கேட்கிறோம் நீங்கள் சேவை புரிவதாக கூறும் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களாகிய நமக்கு மேற்கூறிய கண்ணியம் சுதந்திரம் நீதி என்பன மறுக்கப்பட்டு எம்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட பல சந்தர்ப்பங்கள் உண்டு, உதாரணத்துக்கு 20-03-2022 மட்டுவில் சம்பவம் அவற்றுள் ஒன்று, அதில் இரு தாய்மார்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் அளவு தாக்கப்பட்டனர்.

அந்த நேரத்தில் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? குறைந்தது ஒரு கண்டன அறிக்கையை வெளியிடும் அளவு மனசாட்சி இருந்ததா உங்களுக்கு? எத்தனை பெண்கள் அமைப்புகள் உள்ளன தமிழ் பிரதேசங்களில் எமக்காக ஒரு கண்டன பேரணி நடத்த முயலாதது ஏன்? என்பதே எமது கேள்வியாகும்.

இதே கேள்வியை சர்வதேசத்திடமும் முன்வைக்கின்றோம். நாம் இறுதி நம்பிக்கையாக சர்வதேச நீதியை நோக்கி போராடிக் கொண்டிருக்கின்றோம். தெற்கில் உள்ளோம்.

மருந்துகளுக்கு இலங்கையில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடும் விலையேற்றமும் காரணமாக உடல் நலம் குன்றிய நிலையிலேயே நாம் எமது அன்புக்குரியவர்களை தடுகின்றோம். ஏற்கனவே ஏழ்மையிலுள்ள எம்மை இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி ஒரு நேர உணவுக்குக் கூட கஷ்டப்படும் நிலைக்கு தள்ளியுள்ளது.

இப்படி பசி பட்டினியுடனும் நோயுடனும் போராடியபடியே நீதிக்காக போராடிக்கொண்டிருக்கின்றோம். எமது மக்களின் இந்த இக்கட்டான நிலையை சிறிலங்கா அரசாங்கம் தனக்கு சாதமாகப் பயன்படுத்தி 2 இலட்சம் ரூபா நட்டஈட்டை திணித்து எம் உறவுகளுக்கு சான்றிதழ் திட்டத்தை வேகமாக நடைமுறைப்படுத்துகிறது.

மேலும் நன்கு திட்டமிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை இறந்தவர்களாக்கி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை படிப்படியாகக் குறைத்து விடயத்தையே மூடிவிட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதியை கொடுத்து நீதியை நசுக்க சிறீலங்கா அரசு முயற்சி செய்கின்றது. இதனை சர்வதேச சமூகம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது? ஐ.நா ஆணையாளர் அவர்களே, சிறீலங்கா அரசாங்கம் தமிழர்களை இனப்படுகொலை செய்தும் வலிந்து காணாமல் ஆக்கியும் போராட்டங்களின் போது தாக்குதல் நடத்தப்பட்டால் உடனடியாகவே கண்டனம் தெரிவிக்கும் நீங்கள் நாம் தாக்கப்படும் போது மௌனம் காப்பது என்?




இறுதி யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து எமது அன்புக்குரியவர்களுக்கான நீதியைக் கேட்டுப் போராடிய நாங்கள் நீதி கிடைக்காததால் 20-02-2017 ல் இருந்து 2120 நாட்களாக தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.

எம்முடன் போராடிய உறவுகள் 150 பேர் அளவில் இறந்து விட்டார்கள். மிகுதியாக உள்ளவர்களும் மனக்கவலை, மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நோயாளிகளாகவே பாரபட்சமாகவே நடத்தி வந்திருக்கின்றது.

எங்களுக்கான நீதி கூட சிறீலங்கா அரசிடமிருந்து கிடைக்காது. ஏனெனில் இங்கு சிங்களவர்களுக்கு ஒரு நீதி தமிழர்களுக்கு ஒரு நீதி. எமக்கான நீதியை சர்வதேசமும் ஐ.நாவுமே வழங்க வேண்டும்.

காலம் கடந்த நீதி, சிறீலங்கா அரசு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட விவகாரத்தை முடிப்பதற்கு முன் எங்கள் உறவுகளை தேடி எங்களிடம் ஒப்படைக்க சர்வதேசமும், ஐ.நாவும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மிகவும் மன்றாட்டமாக கேட்டு நிற்கின்றோம்" என அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர் தாயகப் பகுதிகளில் குளிர் காலநிலை காரணமாக கால்நடைகளின் இறப்பு அதிகரிப்பு!

டிசம்பர் 12, 2022

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் குளிர் காலநிலை காரணமாக இன்று பிற்பகல் நிலவரப்படி உயிரிழந்த விலங்குகளின் எண்ணிக்கை 1660 ஆக அதிகரித்துள்ளது.

வடமாகாணத்தில் 691 பசுக்கள் மற்றும் எருமைகள் மற்றும் 206 ஆடுகள் உயிரிழந்துள்ளதாக விவசாய, வன விலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும், 329 விலங்குகள் நோய் வாய்ப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 555 பசுக்கள் மற்றும் எருமைகள் மற்றும் 108 ஆடுகள் உயிரிழந்துள்ளதாக விவசாய, வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.



# தமிழீழம் – தமிழகத்துக்குமான விமான சேவை ஆரம்பம்!

டிசம்பர் 12, 2022

பலாலி சர்வதேச விமான நிலையத்தில் பல வருடங்களின் பின்னர் இன்று (12) விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி இன்று காலை சென்னையில் இருந்து பலாலி சர்வதேச விமான நிலையத்துக்கு பயணிகள் விமானம் வந்தடைந்தது.

கடந்த பருவத்தில் பலாலியிலிருந்து இந்தியாவுக்கான விமானங்கள் கொரோனா தொற்று நிலைமை மற்றும் பலாலி விமான நிலைய அபிவிருத்திப் பணிகள் காரணமாக நிறுத்தப்பட்டன.

2,250 மில்லியன் ரூபா செலவில் பலாலி சர்வதேச விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்பட்டது.

புதிய விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியாவில் இருந்து பலாலிக்கான விமானங்கள் வாரத்தின் ஒவ்வொரு திங்கட்கிழமை, செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில் சேவையில் ஈடுபட உள்ளதாக விமான நிலையத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் தெரிவித்தனர்.



# சிறீலங்கா கடற்படை முகாமுக்கு காரைநகரில் காணி சுவீகரிக்க மக்கள் கடும் எதிர்ப்பு!

டிசம்பர் 13, 2022

யாழ்ப்பாணம் காரைநகர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நீலங்காடு பகுதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான 40 ஏக்கர் காணியை சிங்கள கடற்படை முகாமிற்கு சுவீ கரிக்கும் நோக்குடன் அதனை அளவிடுவதற்கு இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மக்கள் எதிர்ப்பை வெளியிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனையடுத்து அங்கு வந்த நில அளவைத் திணைக் களத்தினர், மக்களுக்கு சொந்தமான காணியை கடற் படையினருக்கு அளவிடுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று எழுதி ஒப்பமிடப்பட்ட எழுத்து மூலமான ஆவணத்தை பெற்றுக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் காணியின் உரிமை



யாளர்கள், சமூகமட்ட அமைப்பினர் மற்றும் பொதுமக்கள்



என பலரும் கலந்துகொண்டனர்.

# யாழில் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் 16 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

டிசம்பர் 14, 2022

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் 16ம் ஆண்டு நினைவேந்தல் யாழில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பணிமனையில் இன்று 14.12. 2022 புதன்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கத்துடன் மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

நினைவுரைகளும் இடம்பெற்றன.





# தமிழீழத்தில் மாவீரர் நாள்

27.11.2022


கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம்


கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம்


கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம்


சாட்டி மாவீரர் துயிலுமில்லம்


அம்பலவன் பொக்கணை



கிழக்கு பல்கலைக்கழக விபுலாநந்த கற்கைகள் பீடம்


வல்வெட்டித்துறை


திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லம்


திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லம்


திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லம்


விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்லம்


விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்லம்


விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்லம்


யாழ். நல்லூர்


யாழ். நல்லூர்


யாழ். நல்லூர்


முல்லை அளம்பில் மாவீரர் துயிலுமில்லம்


முல்லை அளம்பில் மாவீரர் துயிலுமில்லம்


முல்லை அளம்பில் மாவீரர் துயிலுமில்லம்











முல்லைத்தீவு நகர கடற்கரைப்பகுதியில்

# தமிழீழத்தில் மாவீரர் நாள்

**27.11.2022**


முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம்


முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம்


முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம்


முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம்


முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம்


முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம்


முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லம்


முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லம்


முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லம்


கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம்


கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம்


கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம்



யாழ். பல்கலைக்கழகம் நினைவாயலம்


யாழ். பல்கலைக்கழகம் நினைவாயலம்


யாழ். பல்கலைக்கழகம் நினைவாயலம்










யாழ். பல்கலைக்கழகம் நினைவாயலம்


சம்பூர் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம்


சம்பூர் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம்


சம்பூர் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம்

# தமிழீழத்தில் மாவீரர் நாள்

**27.11.2022**



அச்சுவேலி மாவீரர் நினைவாலயம்



அச்சுவேலி மாவீரர் நினைவாலயம்



**தமிழ்த்தேசிய விடுதலை வரலாற்றின் வித்துக்கள்**
(அச்சுவேலி – ஆவரங்கால் பிரதேசம்)
காலம் : 1983 முதல் 1993 வரை

01. சின்னப்பு சத்தியேஸ்வரன் - 25.07.1983 - அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி
02. ஆறுமுகம் தவரத்தினம் - 09.01.1985 - ஆவரங்கால், புத்தூர்
03. நடேசு தவராசா - 09.01.1985 - ஆவரங்கால், அச்சுவேலி தெற்கு
04. சிவகுரு சிவேந்திரன் - 09.01.1985 - ஆவரங்கால், அச்சுவேலி தெற்கு
05. வேலுப்பிள்ளை இராசகோபால் - 04.04.1985 - ஆவரங்கால், புத்தூர்
06. கந்தையா ரூபதநிதி - 21.12.1985 - அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி
07. இரத்தினசபாபதி கணேசகுமார் - 08.03.1986 - வளலாய், அச்சுவேலி
08. இரத்தினம் தவராசா - 20.05.1987 - நாவற்காடு, அச்சுவேலி தெற்கு
09. கந்தையா நவநிதி - 06.06.1987 - அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி
10. வேலுப்பிள்ளை இரட்ணசிங்கம் - 23.12.1987 - ஆவரங்கால், புத்தூர்
11. சிவமனோகரி இராசலிங்கம் - 23.12.1987 - இடைக்காடு, அச்சுவேலி
12. கந்தப்பிள்ளை கணேசமூர்த்தி - 24.07.1988 - நாவற்காடு, அச்சுவேலி தெற்கு
13. முத்தன் ஜெகசோதி - 15.10.1988 - அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி
14. இராசையா சின்னராசா - 23.03.1989 - ஆவரங்கால், புத்தூர்
15. இளையப்பா ஜீவகுமார் - 05.06.1989 - கதிரிப்பாய், அச்சுவேலி
16. தங்கராசா சுதாகரன் - 01.09.1989 - அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி
17. சித்தர் கனகரத்தினம் - 15.07.1990 - அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி
18. சின்னத்துரை இராசலிங்கம் - 26.07.1990 - நாவற்காடு, அச்சுவேலி தெற்கு
19. இராசையா தவநேசன் - 28.12.1990 - நாவற்காடு, அச்சுவேலி தெற்கு
20. சின்னத்தம்பி அன்னலிங்கம் - 22.03.1991 - ஆவரங்கால் மேற்கு, புத்தூர்
21. வரதலிங்கம் செல்வக்குமார் - 18.04.1991 - ஆவரங்கால் மத்தி
22. தர்மலிங்கம் இரஞ்சன் (ரமேஸ்) - 26.05.1991 - அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி
23. நாகராசா நவதாஸ் - 15.07.1991 - அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி
24. மாப்பாணர் உதயகுமார் - 15.07.1991 - ஆவரங்கால் கிழக்கு
25. கிருஸ்ணன் இராமச்சந்திரன் - 17.07.1991 - தென்மூலை, அச்சுவேலி
26. இராசதுரை சுகுமார் - 06.08.1991 - வளலாய், அச்சுவேலி
27. மார்க்கண்டு இளங்கீதன் - 09.09.1991 - ஆவரங்கால், புத்தூர்
28. அப்புலிங்கம் ஜெகதீஸ்வரன் - 17.03.1992 - பத்தமேனி, அச்சுவேலி
29. சர்வானந்தம் ஜெயானந்தம் - 28.05.1992 - வளலாய், அச்சுவேலி
30. கந்தசாமி ஜெயக்குமார் - 29.09.1992 - இடைக்காடு, அச்சுவேலி
31. நல்லதம்பி ஞானசேகரம் - 24.11.1992 - தோப்பு, அச்சுவேலி
32. சச்சிதானந்தம் கிருஸ்ணகுமார் - 16.12.1992 - அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி
33. பொன்னன் கிருபாகரன் - 18.09.1993 - ஆவரங்கால், புத்தூர்
34. குலசிங்கம் மகிமதாஸ் - 11.11.1993 - அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி
35. இராசதுரை குகேந்திரன் - 11.11.1993 - அச்சுவேலி
36. அம்பலம் புஸ்பராணி - 11.11.1993 - கதிரிப்பாய், அச்சுவேலி
37. சின்னப்பு ரதீஸ்வரன் - 11.11.1993 - பத்தமேனி, அச்சுவேலி
38. முத்துலிங்கம் சதீஸ்வரன் - 11.11.1993 - அச்சுவேலி
39. பொன்னுத்துரை வசந்தகுமார் - 11.11.1993 - அச்சுவேலி
40. நாகேந்திரம் பிரபாகரன் - 12.11.1993 - ஆவரங்கால், புத்தூர்



எள்ளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம்



எள்ளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம்



எள்ளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம்




உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம்



உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம்



உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம்



மன்னார் ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலுமில்லம்



மன்னார் ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலுமில்லம்



மன்னார் ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலுமில்லம்



கோடாலிக்கல் மாவீரர் துயிலுமில்லம்



கோடாலிக்கல் மாவீரர் துயிலுமில்லம்



கோடாலிக்கல் மாவீரர் துயிலுமில்லம்



## "மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ் மீது உறுதி வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன் வரலாறு மீதிலும் உறுதி விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை வீரர்கள் மீதிலும் உறுதி"




# ரொரான்ரோவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த ஈழத்தமிழ் பெண்!

டிசம்பர் 01, 2022

கனடா - மார்க்கம் நகரில் நிகழ்ந்த வீதி விபத்தில் காயமடைந்த தமிழ் பெண் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரண மடைந்தார்.

கடந்த ஒக்டோபர் மாதம் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி மார்க்கம் நகரில் நிகழ்ந்த வீதி விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த இரண்டு தமிழர்கள் உயிரிழந்தனர்.

மார்க்கம் வீதி மற்றும் எல்சன் தெருவில் சந்திப்புகளுக்கு அருகாமையில் நிகழ்ந்த விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். இந்த நிலையில் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொடர் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார்.

மூன்று பேர் பயணித்த Acura வாகனத்துடன் பார ஊர்தி மோதியதில் வாகனத்தின் சாரதியான 21 வயதான இளைஞனும், பின் இருக்கையில் பயணித்த 23 வயதுடைய பெண் சகோதரியும் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர்.

முன் இருக்கையில் பயணித்த மூன்றாவது பயணியான 52 வயது பெண் உயிர் ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இந்த பிள்ளைகளின் தாய் புதன்கிழமை மரணமடைந்தார்.

இந்த வாகன விபத்தில் Vaughan நகரை சேர்ந்த 46 வயதான பார ஊர்தி ஓட்டுநர் மீது ஏற்கனவே மூன்று குற்றச்சாட்டுகள் பதிவாகியுள்ளன. மேலும் இவர் தன் மீதான குற்றச்சாட்டுகளை எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றத்தில் எதிர் கொள்ளவுள்ளார்.



# பல் சிகிச்சைக்கான சலுகைகள் பெற கனேடியர்கள் இப்போதே விண்ணப்பிக்கலாம்!

டிசம்பர் 01, 2022

கனடாவில் பல் தொடர்பான சிகிச்சைக்கு பெடரல் அரசாங்கம் சலுகை அளிக்க முன்வந்துள்ள நிலையில், டிசம்பர் 1ம் திகதி முதல் விண்னப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக மிக குறைவான வருவாய் கொண்ட குடும்பங்களுக்கு இந்த வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 12 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மட்டும் தற்போது சலுகை அளிக்க உள்ளனர்.

டிசம்பர் 1ம் திகதி தொடங்கி இதற்கான விண்ணப்பம் உரிய அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். ஆண்டு வருவாய் 90, 000 டொலருக்கு குறைவாக உள்ள குடும்பங்களில், 12 வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு பல் சிகிச்சை தொடர்பில் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

ஆண்டுக்கு 70,000 டொலருக்கு குறைவாக வருவாய் ஈட்டும் குடும்பத்தின் தலா ஒரு குழந்தைக்கு 650 டொலர் உதவித் தொகை வழங்கப்படும். ஆண்டுக்கு 70,000 முதல் 79,999 டொலர் வருவாய் ஈட்டும் குடும்பத்து குழந்தைகளுக்கு தலா 390 டொலர் வழங்கப்படும்.




80,000 டொலர் முதல் 89,999 டொலர் வருவாய் ஈட்டும் குடும்பத்து குழந்தைகளுக்கு தலா 260 டொலர் வழங்கப்படும். மேலும், இந்த திட்டமானது அக்டோபர் 1, 2022க்கு முந்தைய பல் தொடர்பான செலவுகளையும் ஈடுசெய்யும் என்றே கூறப்படுகிறது.

இந்த புதிய திட்டத்தால் கனடாவில் 500,000 சிறார்கள் வரையில் பயனடைவார்கள் என்றே பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கம் கருதுகிறது. மட்டுமின்றி, இந்த திட்டத்தில் இணைவதால், சிறார்கள் தொடர்பில் ஏற்கனவே பெற்றுவரும் எந்த சலுகைகளும் ரத்து செய்யப்படாது எனவும் உறுதி அளித்துள்ளனர்.

குறித்த சலுகையை பெற்றுக்கொள்ள பெற்றோர்கள் Canada Revenue Agency மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். அத்துடன், தொடர்புடைய குழந்தை பல் சிகிச்சை தொடர்பாக தனியார் சலுகைகளை அனுபவிக்கவில்லை என உறுதி செய்ய வேண்டும்.

மேலும், பல் சிகிச்சைக்காக அதிகமாக செலவு செய்து வருவதையும் உறுதி செய்ய வேண்டும். அத்துடன், அதிக செலவு தொடர்பில் ரசீதுகளும் ஒப்படைக்கப்பட வேண்டும். இந்த திட்டமானது எதிர்வரும் ஆண்டுகளில் 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு என விரிவு படுத்தப்படும்.

மேலும், 2025ல் ஆண்டுக்கு 90,000 டொலருக்கும் குறைவாக வருவாய் ஈட்டும் அனைத்து கனேடிய குடும்பங்களும் இந்த திட்டத்தில் பயன்பெறும் வகையில் விரிவு படுத்தப்பட உள்ளதாக அரசு தரப்பு தெரிவித்துள்ளது.

https://pm.gc.ca/en/news/news-releases/2022/12/01/delivering-dental-care-children-now

# சர்வதேச பல்லுயிர் பன்முகத்தன்மை மாநாடு ஆரம்பம்!

டிசம்பர் 07, 2022

சர்வதேச பல்லுயிர் பன்முகத்தன்மை மாநாடு COP15 கனடாவில் நேற்று ஆரம்பமானது.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் அன்ரோனியோ குட்ரஸ், கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆகியோர் மாநாட்டை ஆரம்பித்து வைத்தனர்.

கனடாவின் Onondaga பிராந்தியத்தின் முதல்வரான பழங்குடியினத் தலைவர் Tadodaho sid hill வரலாற்றில் முதல்முறையாக ஆரம்ப உரையாற்றினார்.





# கனடாவில் வாடகை வீட்டில் வசிக்கும் குறைந்த வருவாய் கொண்ட சிலருக்கு அரசு அறிவித்துள்ள நிதி உதவி!!

டிசம்பர் 12, 2022

திங்கட்கிழமை முதல், கனடாவில் வாடகை வீட்டில் வசிக்கும் குறைந்த வருவாய் கொண்ட சிலருக்கு அரசு 500 டொலர்கள் உதவித்தொகை வழங்குவதாக அறிவித்துள்ளது.

இந்த உதவித்தொகையைப் பெற விரும்புவோர், குறைந்தபட்சம் 15 வயதுடையவர்களாகவும், 2022ஆம் ஆண்டில், தங்கள் 2021ஆம் ஆண்டின் வருவாயில் 30 சதவிகிதத்தையாவது வாடகையாக செலுத்தியவராக இருக்கவேண்டும்.

அத்துடன், 35,000 டொலர்கள் அல்லது அதற்குக் குறைவான வருவாய் கொண்ட குடும்பங்களாகவாவது, அல்லது, 20,000 டொலர்கள் அல்லது அதற்குக் குறைவான வருவாய் கொண்ட தனிநபராகவாவது இருக்கவேண்டும். அத்துடன், அவர்கள் 2021ஆம் ஆண்டுக்கான வருமான வரி தாக்கல் செய்திருக்கவும் வேண்டும்.

மேலும், தாங்கள் வாடகை செலுத்துவதற்கான ஆதாரத்தையும் அவர்கள் சமர்ப்பிக்கவேண்டும்.

தகுதியுடையோர், பெடரல் அரசின் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.



மேலதிக தகவல்களுக்கு...
https://globalnews.ca/news/9340131/canada-housing-benefit-rent-top-up-eligibility/

# கனடாவில் 2023இல் கணிசமாக உயர இருக்கும் மளிகைப்பொருட்களின் விலை!

டிசம்பர் 06, 2022

கனடாவில், மளிகைப்பொருட்களின் விலை 2023இல் 7 சத விகிதம் வரை உயரலாம் என சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கனடாவில் மளிகைப்பொருட்களின் விலை 1,065 டொலர்கள் உயர்ந்து, குடும்பம் ஒன்று, ஆண்டொன்றிற்கு மளிகைப் பொருட்களுக்காக மட்டும் 16,288 டொலர்கள் செலவு செய்ய நேரிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கனடாவில் வாழும், தனது 40 வயதுகளிலிருக்கும் பெண் ஒருவர், அடுத்த ஆண்டு தனது மளிகை செலவுக்காக 3,740 டொலர்களும், அதே வயதிலிருக்கும் ஆண் ஒருவர் 4,168 டொலர்களும் செலவிடவேண்டியிருக்கும் என கனடாவின் உணவுப்பொருட்கள் விலை அறிக்கையும் கனடா புள்ளியியல் துறையும் தெரிவிக்கின்றன.

இந்த மளிகைப்பொருட்கள் விலை உயர்வின் பின்னணியில் பல காரணிகள் உள்ளன.

மளிகைப்பொருட்கள் விலை உயர்வுக்கு, பருவநிலை மாற்றம், உக்ரைன் போர் போன்ற விடயங்கள், எரிபொருள் விலை உயர்வு மற்றும் கொரோனாவின் தாக்கம் ஆகியவை காரணம் என்கிறது கனடாவின் உணவுப்பொருட்கள் விலை அறிக்கை.

டொலருக்கு எதிரான கரன்சியின் மதிப்பு நிலையாக இல்லாமல் அவ்வப்போது மாறி வருவதும் கூட உணவுப்பொருட்கள் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். கனடா டொலரின் மதிப்பு குறையும்போது, வெளிநாடுகளிலிருந்து உணவுப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு கூடுதல் செலவிட வேண்டியிருக்கும்.

குறிப்பாகக் கூறவேண்டுமானால், காய்கறிகள் விலை எட்டு சதவிகிதமும்,

இறைச்சி, பால் பொருட்கள் மற்றும் வெதுப்பக (Bakery) தயாரீப்புகளின் விலை ஏழு சதவிகிதமும், கடல் உணவுகளின் விலை, ஆறு சதவிகிதமும், பழங்கள் விலை ஐந்து சத விகிதமும், பல்பொருள் அங்காடிகளை ஒப்பிடும்போது, உணவகங்களுக்கு ஆகும் செலவு ஆறு சதவிகிதம் வரையும் அதிகரிக்கலாம் என கனடாவின் உணவுப்பொருட்கள் விலை அறிக்கை கூறுகிறது.






# கனடாவில் விரைவில் அமுலுக்கு வரவுள்ள பிளாஸ்டிக் வகைகளுக்கு தடை!

டிசம்பர் 11, 2022

கனடாவில் ஒரு தடவை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் வகைகளுக்கு தடை விதிக்கப்பட உள்ளது.

இந்த மாத இறுதி முதல் இந்த தடை நாடு தழுவிய ரீதியில் அமல்படுத்தப்பட உள்ளது.

ஒரு தடவை பயன்படுத்தக்கூடிய அல்லது சிங்கிள் யூஸ் பிளாஸ்டிக் வகைகள் உற்பத்தி செய்யப்படுவது மற்றும் இறக்குமதி செய்யப்படுவது என்பன தடை செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி முதல் இந்த தடை அமுல்படுத் தப்பட உள்ளது.

இந்த வகை பிளாஸ்டிக் உற்பத்திகள் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் விற்பனை செய்வதற்கும் தடை விதிக்கப்பட உள்ளது.

முன்னதாக இந்த தடை உத்தரவு 2021 ஆம் ஆண்டிலேயே அமுல்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது எனினும் சில காரணிகளினால் தடையுத்தரவு அமுல்படுத்துவதற்கு காலம் தாழ்த்தப பட்டது.

எதிர்வரும் 2030 ஆம் ஆண்டில் பிளாஸ்டிக் கழிவுகளை பூச்சியமாக பேணும் அரசாங்கத்தின் இலக்குகளில் ஓர் கட்டமாக இந்த தடை உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது.



பிளாஸ்டிக் உற்பத்திகள் பச்சை வீட்டு வாயு வெளியீட்டை அதிகரிப்பதுடன் சுற்றுச்சூழலுக்கு பாரிய அளவில் ஆபத்துக்களை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பிளாஸ்டிக் உற்பத்திகளுக்கு பல்வேறு வழிகளில் பல்வேறு கட்டங்களாக தடை விதிக்கப்பட்டு வருகின்றது.

பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் கரண்டிகள், முள்கரண்டி, பிளாஸ்டிக் கத்திகள், பெட்டிகள், தட்டுகள், கோப்பைகள், ஸ்ரோக்கள் உள்ளிட்ட பல்வேறு பிளாஸ்டிக் உற்பத்திகளுக்கு இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.

# என்.டி.பி கட்சித் தலைவர் அரசாங்கத்திடம் விடுத்துள்ள அவசர கோரிக்கை!

டிசம்பர் 07, 2022

என்.டி.பி கட்சியின் தலைவர் ஜக்மீட் சிங், அரசாங்கத்திடம் அவசர கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

சிறுவர்களின் சுகாதார பராமரிப்பு தொடர்பில் அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். கனடாவின் சிறுவர் வைத்திய சாலைகளில் அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் அனுமதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்களின் சுகாதார நலன் தொடர்பில் நாடாளுமன்றில் அவசர விவாதமொன்று நடாத்தப்பட வேண்டுமென ஜக்மீட் சிங் தெரிவித்துள்ளார்.



நாடு முழுவதிலும் சிறுவர்களின் சுகாதாரம் தொடர்பில் பிரச் சினைகள் எழுந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த விவகாரம் தொடர்பில் அவர் சபாநாயகருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

சிசுக்கள் மற்றும் குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் நோய் வாய்ப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள் அதிக எண்ணிக்கையில் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண சமஷ்டி அரசாங்கம் தீர்வு காண வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தமிழக செய்திகள்



## நாம் தமிழர் கட்சி சீமான் தலைமையில் நடைபெற்ற தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் அகவை விழா!

நவம்பர் 26, 2022

தமிழ்த் தேசியத் தலைவர் ஆருயிர் அண்ணன் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் 68ஆம் ஆண்டு பிறந்தநாளையொட்டி இன்று 26-11-2022 காலை, விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதியில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நாம் தமிழர் கட்சி சார்பாக தமிழர் எழுச்சி நாள் விழா கொண்டாடப்பட்டது.







## புதுவையில் நடைபெற்ற தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்தநாள் கொண்டாட்டம்!

நவம்பர் 26, 2022

இன்று (26.11.2022) சனிக்கிழமை புதுவை மாநிலம் பாகூரில்தமிழின தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பிறந்தநாள் விழா மிக சிறப்பாக நடைபெற்றது. புதுவை மாநில இளைஞரணி அமைப்பாளர் தோழர் அருள்ஒளி அவர்களின் ஏற்பாட்டில் சிறப்பு விருந்தினராக தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாநில ஒழுங்கு நடவடிக்கை குழு தலைவர் திருமால்வளவன் அவர்கள் தலைமையில் 68 தேசியத் தலைவர் படங்களை ஏந்தி பேரணி நடைபெற்றது.

அதனை தொடர்ந்து கேக் வெட்டி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கட்சியின்





## தொடர்ந்து தமிழைப் புறக்கணிக்கும் இந்திய அரசு! பழ. நெடுமாறன்

டிசம்பர் 01, 2022

இந்திய அரசின் பண்பாட்டு அமைச்சுத் துறையின் கீழ் இயங்கும் இந்திய பண்பாட்டு உறவுக்கான குழு வெளிநாடுகளில் சமற்கிருதம், இந்தி, தமிழ், உருது ஆகிய மொழிகளுக்கும் வரலாறு, பொருளாதாரம், தத்துவம், வங்காள நாட்டுப்புற நடனம், புத்தக்கோட்பாடு, இந்தியக் கல்வி என சுமார் 11வகையான பாடப் பிரிவுகளுக்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் இருக்கைகள் அமைத்து அதில் நியமிக்கப்படும் வருகைதரு பேராசிரியர்களுக்கு ஊதியத்தை இந்திய அரசே வழங்கும். அவர்களின் உணவு, தங்குமிடங்கள் ஆகியவற்றுக்கான செலவை சம்பந்தப்பட்ட நாடுகளின் கல்வி நிறுவனங்கள் அளிக்கும். இந்தத் திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட பேராசிரியர் இருக்கைகள் இருந்தன. 2014ஆம் ஆண்டிற்குப் பிறகு இவைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு 51 இருக்கைகள் மட்டுமே உள்ளன.

இந்தப் பட்டியலில் தமிழுக்கு இரண்டே இரண்டு இருக்கைகள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன. போலந்து நாட்டிலுள்ள வார்சா பல்கலைக்கழகத்திலும், எலோனியன் பல்கலைக்கழகத்திலும் இரண்டு இருக்கைகள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், 2014ஆம் ஆண்டு முதல் இந்த இருக்கைகளுக்குரிய தமிழ்ப் பேராசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. 2015ஆம் ஆண்டில் கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேரா. ஜெய



கிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவர் போலந்துக்கு அனுப்பப்படவில்லை. அந்த இருக்கை இன்னும் காலியாகக் கிடக்கிறது.

இந்தியப் பண்பாட்டு உறவுக்கான குழு இந்த ஆண்டு வெளியிட்ட விளம்பரத்தில் தமிழ் இடம்பெறவில்லை. ஆனால் சமற்கிருதம், இந்தி ஆகிய மொழிகளுக்கான இருக்கைகள் இன்னமும் நீடிக்கின்றன. ஆண்டுதோறும் இவற்றுக்கான பேராசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஆனால் தமிழ்மொழிக்கான பேராசிரியர் மட்டும் நியமிக்கப்படவில்லை.

“போலந்து நாட்டில் கடந்த 48 ஆண்டுகளாகத் தமிழ் இருக்கைகள் உள்ளன. அவற்றுக்கான பேராசிரியர்கள் தொடர்ந்து நியமிக்கப்பட்டு வந்தார்கள். போலந்து நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் தமிழ்மொழியைக் கற்பதில் அதிக ஆர்வம் காட்டுபவர்கள். ஆனால் கடந்த பல ஆண்டுகளாக இவற்றுக்கான தமிழ்ப் பேராசிரியர்கள் நியமிக்கப்படாதது வருந்தத்தக்கது” என அந்நாட்டில் பணியாற்றியவரும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்தவருமான பேரா. ஜி. பாலசுப்பிரமணியம் கூறியுள்ளார்.

சில வெளிநாடுகளில் அந்தந்த நாடுகளின் அரசே தமிழ் மொழிக்கான இருக்கைகளுக்குத் தங்களது செலவில் பேராசிரியர்களே நியமித்து வருகின்றன. சில நாடுகளில் அங்கு வாழும் தமிழர்களே நிதித் திரட்டி இருக்கைகளை அமைக்க உதவுகிறார்கள். இன்னும் சில நாடுகளுக்கு இருக்கைகளுக்குரிய செலவினங்களை தமிழக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் ஒன்றிய அரசு சமற்கிருதம், இந்தி ஆகிய மொழிகளுக்கு உதவுகிறதே தவிர, தமிழ்மொழிக்கு உதவ மறுக்கிறது.

# தமிழ்நாட்டில் மாவீரர் நாள்

**27.11.2022**


தஞ்சை – வாழ்வுலிமைக் கட்சி


தஞ்சை – வாழ்வுலிமைக் கட்சி


தஞ்சை – வாழ்வுலிமைக் கட்சி



கொளத்தூர்



கொளத்தூர்


கொளத்தூர்



அரசபாளையம்


புதுச்சேரி


கொளத்தூர்



# உலக செய்திகள்

## 48,500 வருட பழைமையான ஸோம்பி வைரஸ்கள் மனிதகுலத்திற்கு கேடு ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை!

நவம்பர் 30, 2022

ரஷ்யாவில் உருகும் ஐஸ் பாறைகளில் இருந்து 48, 500 ஆண்டுகள் பழமையான ஸோம்பி வைரஸ்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர். கண்டு பிடிக்கப்பட்ட 13 வைரஸ்களை வைரொலஜி ஆராய்ச் சியாளர்கள் இதற்கு முன் பார்த்ததோ, கேள்வி பட்டதோ கிடையாது. இவை எல்லாம் மனிதர்களை தாக்கினால் மிகப்பெரிய ஆபத்து ஏற்படும் என்று எச்சரிக்கை விடுத்து உள்ளனர்.

உலகம் முழுக்க ஒவ்வொரு பகுதியும் காலநிலை மாற் றத்தால் பாதிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பகுதியின் வெப்பநிலையும் உயர்ந்து வருகிறது. ஐநாவும் இந்த கால நிலை மாற்றம் குறித்து கடுமையான எச்சரிக்கைகளை விடுத்து இருக்கிறது.

உலகின் வெப்பநிலை அடுத்த 20 ஆண்டுகளில் 1.5 டிகிரி செல்ஸியஸ் உயர போகிறது.. இனி நாம் இயற்கை பேரிடர் களுக்கு மத்தியில் வாழ வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். இதெல்லாம் எல்லோரும் எதிர்பார்த்த, எதிர்பார்க்கும் அபாயங்கள் என்றாலும், வேறு சில அபாயங்களும் உள் ளன. அதுதான் வைரஸ்கள் வெளியேறுவது!

அதாவது ஐஸ் கட்டிகளுக்கும் பல ஆயிரம் ஆண்டுகளாக உறங்கிக்கொண்டு இருக்கும் வைரஸ்கள், இந்த ஐஸ் கட்டிகள் உருகுவதால் வெளியேறும் அபாயம் உள்ளது. நமக்கு கொஞ்சமும் பழக்கம் இல்லாத, மருத்துவர்கள் இதற்கு முன் கேள்வி கூட படாத வைரஸ்கள் இதன் மூலம் தோன்றும் அபாயம் உள்ளதாக வைரொலாஜி ஆராய்ச் சியாளர்கள் எச்சரித்து வருகிறார்கள்.

அந்த வகையில் ரஷ்யாவில் ஐஸ் கட்டிகள் வேகமாக உரு குவது நடந்து வருகிறது. சைபீரியாவில் அதிகமாக இப்படி ஐஸ் பாறைகள் உருகி வருகின்றன. இங்கு உருகிய ஐஸ் பாறைகளில் இருந்து 13 புதிய வைரஸ்களை கண்டுபிடித்து உள்ளனர். இந்த வைரஸ்கள் 48, 500 ஆண்டுகள் பழமையானவை. ஐஸ் பாறைகளுக்கு உள்ளே இருந்த தால் அவை சாகாமல் அப்படியே இருந்துள்ளன. இப் போதும் கூட அவை பரவும் தன்மை கொண்டதாக இருந் துள்ளன. இந்த வைரஸ்களை ஸோம்பி வைரஸ்கள் என்று இதை ஆய்வு செய்த ஐரோப்ப ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்து உள்ளனர். வைரஸ் இதில் இருக்கும் மிக பழைய வைரஸ், Pandoravirus Yedoma என்ற வைரஸ் ஆகும். இது 48,500 வருடங்கள் பழமையானது. இவை ஸோம்பி வைரஸ்கள் என்றாலும், இதன் குணம் என்ன? படங்களில் காட்டுவது போல மனிதர்களை இவை ஸோம் பிகளாக மாற்றுமா என்றெல்லாம் இப்போது ஆராய்ச் சியாளர்கள் விளக்கம் கொடுக்கவில்லை. இத்தனை காலம் ஐஸ் உள்ளே இருந்தும் அவை உயிரோடு இருப் பதால் அதை ஸோம்பி வைரஸ்கள் என்று கூறுகின்றனர். இவை மனிதர்களை தாக்குமா என்பது தெரியாது. ஆராய்ச்சி செய்ய செய்யவே இதன் குணங்கள் தெரிய வரும். ஆனால் இவை மனிதர்களை தாக்கும் பட்சத்தில் அது மிகப்பெரிய ஆபத்தாக இருக்கும் ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்து உள்ளனர்.









## உக்ரைனியப் பட்டினிப் படுகொலையை இனப்படுகொலையாக அங்கீகரிக்க ஜேர்மனி பாராளுமன்றம் ஒப்புதல்!

டிசம்பர் 01, 2022

உக்ரைனில் 1930 களில் ஏற்பட்ட பஞ்சத்தை "இனப்படு கொலை" என்று அங்கீகரிக்கும் ஒரு குறியீட்டு தீர்மானத் திற்கு ஜேர்மனியின் பாராளுமன்றம் ஒப்புதல் அளித் துள்ளது.

உக்ரைனில் "ஹோலோடோமோர்" என்று அழைக்கப் படுகிறது. அதாவது பட்டினியால் கொலை. பஞ்சம் அப்போதைய சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலினின் அடக்குமுறை ஆட்சியின் கீழ் 3 மில்லியனுக்கும் அதிக மான உக்ரேனியர்களைக் கொன்றதாக நம்பப்படுகிறது.

சில வரலாற்றாசிரியர்கள் உக்ரேனிய சுதந்திர இயக் கத்தை அகற்றுவதற்காக ஸ்டாலின் வேண்டுமென்றே பஞ்சத்தை ஏற்பாடு செய்ததாகக் கூறுகின்றனர். விவசாய நிலங்களை ஒருங்கிணைக்கும் சோவியத் யூனியனின் தவறான கொள்கைகளின் விளைவாக ஹோலோடோ மோர் என்று மற்றவர்கள் கூறுகிறார்கள்.



ஜேர்மனியின் பாராளுமன்றத்தின் கீழ்சபையான ஜேர் மனியின் கீழ்சபையான ஜேர்மனியின் அதிபர் ஓலாஃப் ஸ்கோல்ஸின் ஆளும் கூட்டணி மற்றும் பிரதான எதிர்க் கட்சியான மூன்று கட்சிகளால் கொண்டுவரப்பட்ட தீர் மானத்தின்படி, பட்டினியால் ஏற்பட்ட வெகுஜன மரணங்கள் அறுவடை தோல்வியினால் ஏற்பட்டவை அல்ல. அரசியல் தலைமை ஜோசப் ஸ்டாலினின் கீழ் சோவியத் யூனியன் அவர்களுக்கு பொறுப்பாக இருந்தது.

### முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மூன்றாவது அரசவை லண்டனில் ஆரம்பம்!

டிசம்பர் 02, 2022

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் 3ஆவது நாடாளுமன்றத்தின் எட்டாவது அமர்வு இன்று பகல் பிரித்தானிய தலைநகர் லண்டனில் ஆரம்பமாகியுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இந்த அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

தமிழீழத்தின் உணவுப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் வெளியுறவுக் கொள்கை சவால்கள் என்ற கருப்பொருளில் இந்தக் கூட்டத் தொடர் இடம்பெற்று வருகிறது.

தமிழர் தாயகத்தில் 2009 இல் முள்ளிவாய்கால் பேரவலத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இன்று தனது இன்னொரு அரசவை அமர்வை லண்டனில்ஆரம்பித்துள்ளது.

இன்றைய ஆரம்ப அமர்வில் அதன் பிரமுகர்கள் பங்கெடுத்துள்ளனர்.

உலகெங்கிலும் பல நாடுகளில் வாழும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான புலம்பெயர் ஈழத் தமிழர்கள் மத்தியில் ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்யபட்ட அரசாங்கமாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கருதப்படுகிறது.

பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபையை கொண்டுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துக்கென ஒரு அமைச்சரவையும் உள்ளது. 132 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கட்டமைப்பில் உள்ளனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை செய்த குற்றவாளிகளை சர்வதேச சமூகம் கையாள வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்க பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டுமென கோரிக்கை விடுப்பதும் குறிப்பிடத்தக்கது.

நாளை மாலை ஆறுமணிக்கு பிரித்தானிய நாடாளுமன்றத்துக்கு அருகில் உள்ள வெஸ்மினிஸ்டர் மண்டபத்தில் இடம்பெறவுள்ள அமர்வில் கிழக்குத் தீமோரைச் சேர்ந்த சர்வதேச பிரமுகர்கள் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்



பினர்கள் மற்றும் இலங்கையில் இருந்த சென்றுள்ள அரசியல் தலைவர்கள் உட்பட்ட பலரும் உரையாற்றவுள்ளனர்.

இந்த அமர்வுக்காக புலம்பெயர் நாடுகளில்இருந்து சென்ற உறுப்பினர்கள் லண்டனில் ஒன்று கூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெற்கு ரஷியாவின் காஸ்பியன் கடற்கரையில் 2,500 சீல்கள் உயிரிழப்பு!

டிசம்பர் 05, 2022

தெற்கு ரஷியாவின் காஸ்பியன் கடற்கரையில் கிட்டத்தட்ட 2,500 சீல்கள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

திடீரென இத்தனை சீல்கள் உயிரிக்க காரணம் தெரியவில்லை எனவும், ஒருவேளை அவை இயற்கையாக? உயிரிழந்து இருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

முதலில் 700 சீல்கள் இறந்திருப்பதாக அறிவிக்கப்பட்ட நிலையில், பின்னர் நடத்தப்பட்ட விரிவான ஆய்வில் இந்த எண்ணிக்கை 2,500 ஆக அதிகரித்தது.



காஸ்பியன் சுற்றுச்சூழல் மைய தலைவர் ஜார் காபிசோவ் கூறுகையில்,

இவை ஒரு வாரத்திற்கு முன் உயிரிழந்திருக்கலாம், அவை வேட்டைக்காரர்களால் கொல்லப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை என தெரிவித்தார்.

ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையில் சீல்கள் இறந்திருக்கும் சம்பவம் ஏற்கெனவே பல முறை நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

காஸ்பியன் கடல் பகுதியில் சுமார் 3 லட்சம் சீல்கள் வரை இருக்கின்றன எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.



# உலகப்பரப்பில் மாவீரர் நாள்

**27.11.2022**










































# MORTGAGE

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்ச்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# தமிழீழ தேசத்திற்கே இட்டுநிரப்பமுடியாத பேரிழப்பு

# தேசத்தின் குரல்

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



தலைமைச்செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்
2006-12-14

எமது சுதந்திர இயக்கத்தின் அரசியல் இராஜதந்திர நகர்வுகளில் எனக்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்ட எமது தேசத்தின் ஒளிவிளக்கு இன்று அணைந்துவிட்டது. ஆலோசனை வேண்டி, ஆறுதல் தேடி ஓடுவதற்கு பாலாண்ணை இன்று என்னுடன் இல்லை. இவரது மறைவு எனக்கு மாத்திரமல்ல தமிழீழ தேசத்திற்கே இட்டுநிரப்பமுடியாத பேரிழப்பு.

பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே விரியும் காலமாக மனித வாழ்வு நிலைக்கிறது. இந்த வாழ்வுக்காலம் எல்லா மனிதர்களுக்கும் ஒரேமாதிரியாக, ஒத்ததாக, ஒருசீராக அமைவதில்லை. காலச்சீரற்றதாக ஒருவருக்குக் கூடி, மற்றவருக்குக் குறுகி, இன்னொருவருக்கு அதிகம் நெடுத்து கூடிக்குறைந்து செல்கிறது. துரதிஸ்டவசமாக, பாலாண்ணையினது வாழ்வு இடைநடுவில் நின்றுபோய்விட்டது. தீவிரம்பெற்றுள்ள எமது விடுதலைப்போருக்கு அவர் நிறையப் பணிகளை ஆற்றவேண்டியிருக்கின்ற தருணத்தில் அவருக்கு மரணம் சம்பவித்திருக்கிறது. இதனை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. துயரத்தின் சுமை என் ஆன்மாவை அழுத்துகிறது. என் உள்ளத்தை உடைத்து, நெஞ்சத்தைப் பிளக்கிறது. கட்டுக்கடங்காத காட்டாறு போல சீறிப்பாயும் உணர்ச்சிப் பெருவெள்ளத்தை என்னால் வார்த்தைகளால் கொட்டமுடியாது. மனித மொழியில் இதற்கு இடமுமில்லை.

பழக ஆரம்பித்த நாள் முதலே எமக்கிடையே ஒரு இனம்புரியாத புரிந்துணர்வு ஏற்பட்டது. அந்தப் புரிந்துணர்வால் எழும் பற்றுறவால் பிணைந்துகொண்டு, எமது உறவு நல்லுறவாக வளர்ந்து நட்புறவாகப் பரிணமித்தது. சிந்தனையாலும் செயலாலும் ஒன்றுபட்ட மனிதர்களின் சங்கமமாக அந்த உறவு மலர்ந்தது. தினம்தினம் நாம் பகிர்ந்துகொண்ட வாழ்பனுபவத்தில் வலிமைபெற்று வளர்ந்தது. சாதாரண மனித உறவுகளிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டது. காலத்தால் கனிந்து, வரலாற்றால் வடிவம் பெற்ற ஒரு அலாதியான இலட்சிய உறவு அது.

பாலாண்ணையை நான் ஆழமாக நேசித்தேன். விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் ஒரு மூத்த தலைமகனாக பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்றுசேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன். மோசமாகச் சுகவீனமுற்று தினம்தினம் சாவோடு போராடியபோதும், தாங்கமுடியாத உடல் உபாதைகளால் வருந்தியபோதும், தளர்ந்துபோகாத உறுதிப்பாடு அவரிடம் இருந்தது. அவரின் இந்த இலட்சிய உறுதி எனது நெஞ்சத்தைத் தொட்டுநின்றது. அவர் துன்பத்தால் துவண்டபோதெல்லாம் எனது ஆன்மாவும் கலங்கியழுதது.

எமது இயக்கத்தின் வளர்ச்சியிலும் அதன் இன்றைய விரிவாக்கத்திலும் பாலாண்ணைக்கு ஒரு நிரந்தரமான இடம் இருக்கிறது. ஒரு மூத்த அரசியல் போராளியாக, ஒரு மதியுரைஞராக, ஒரு தத்துவாசிரியராக எல்லாவற்றுக்கும் மேலாக எனது உற்ற நண்பனாக இருந்து எனக்கு ஊக்கமும் உத்வேகமும் அளித்தவர். ஆலோசனையும் ஆறுதலும் தந்தவர். எனது உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டு, எனது பழுக்களையும் பங்கிட்டுக்கொண்டவர். எமது விடுதலை இயக்கம் தோற்றம்பெற்ற ஆரம்பகாலம் முதல் என்னோடு இருந்து, எல்லாச் சோதனைகளையும் வேதனைகளையும் சவால்களையும் சங்கடங்களையும் தாங்கிக்கொண்டவர். எமது அரசியல் இராஜதந்திர முன்னெடுப்புக்களுக்கு மூலாதாரமாக, முன்னால் நின்று செயற்பட்டவர்.

ஈழத்தமிழினம் பெருமைகொள்ளும் வகையில் அரசியல் உலகிலும் இராஜதந்திர உலகிலும் அளப்பெரும் சாதனைகள் புரிந்து, எமது தேசசுதந்திரப் போராட்டத்தை உலக அரங்கில் முன்னிறுத்திய பாலாண்ணையின் மாபெரும் போராட்டப் பணிக்கு மதிப்பளித்து தேசத்தின் குரல் என்ற மாபெரும் கௌரவப்பட்டத்தை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். பாலாண்ணை உண்மையில் எம்மைவிட்டுப் போகவில்லை. அவர் எமது நினைவலைகளில் என்றும் நீங்காத நினைவுகளாக நிலைத்து நிற்பார்.

வே. பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”


மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லக்ஷ்மி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
Furnance, Air Conditioner, Hot Water Tank
Tankless Water Heater, HRV, Fireplace, Attic Insulation,
Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer
up to
$5000
REBATE
0 Down, Rental
Rent - to - Own
10 Years Warranty
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE
ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
geansam@yahoo.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268

# மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம்!

26.11.2022



2009க்கு பின்னர் வரும் 14-வது மாவீரர் நாள் இது.கடந்த 13 ஆண்டுகளாக தாயகத்தில் மறைவாகவும் வெளிப்படையாகவும் ஏதோ ஒரு விதத்தில் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

நினைவுகூர்தல் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை அழுவது துக்கிப்பது என்பவற்றிற்கும் அப்பால் ஆழமான பரிமாணங்களைக் கொண்டது. 2009க்கு பின்னரான தமிழ் மக்களின் அரசியல் எனப்படுவது இழப்புக்கு நீதி கோரும் அரசியல்தான். ஈழப்போரில் இதுவரை கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயம் வேண்டி முன்னெடுக்கப்படும் ஓர் அரசியல்தான். நீதிக்கான போராட்டத்தில் நினைவுநாட்கள் பின்வரும் முக்கியத்துவங்களை கொண்டிருக்கின்றன.



முதலாவது முக்கியத்துவம், அவை உளவியல் அர்த்தத்தில் அல்லது மருத்துவ அர்த்தத்தில் துக்கத்தைக் கொட்டித்தீர்க்கும் சந்தர்ப்பங்கள் ஆகும். குறிப்பாக வெளிப்படையாக நினைவுகூர முடியாத காலகட்டங்களில், அடக்கப்பட்ட துக்கத்தை வெளியே கொட்டும் சந்தர்ப்பங்களாக அந்நாட்கள் அமைகின்றன. இந்த வகையில் அது ஒரு உளவியல் ஆற்றுப்படுத்தல் நிகழ்வாகும். அடக்கப்பட்ட துக்கமானது ஒரு கட்டத்தில் உடல் நலத்தையும் மன நலத்தையும் பாதிக்கும். வெளிப்படுத்தப்படாத துக்கம் வேறு விதங்களில் ஆவேசமாக வெளிப்படும். எனவே துக்கத்தை வெளி வழிய விடுவது என்பது உளவியல் அர்த்தத்தில் ஒரு ஆற்றுப்படுத்தல் செய்முறைதான். ஒரு கவுன்சிலிங்தான்.

இரண்டாவது முக்கியத்துவம், ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்ற வேண்டிய ஒரு காலகட்டத்தில் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். நினைவுநாட்கள் தமிழ் மக்களை ஒப்பீட்டளவில் திரளாகக் கூட்டிக் கட்டுகின்றன. தாயகத்திலும் புலம்பெயர்ந்த பரப்பிலும் அவை தமிழ் மக்களை ஒப்பீட்டளவில் ஒரு தேசமாகக் கூட்டிக் கட்டுகின்றன.

தேசியம் என்பது அதன் பிரயோக அர்த்தத்தில் திரளாக்கந்தான். நினைவு நாட்கள் தமிழ் மக்களை எல்லை கடந்து, பிரதேசம் கடந்து, மதம் கடந்து, வேறு ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து, ஒரு திரள் ஆக்குகின்றன. அவை தமிழ் மக்களை ஒரு கூட்டமாக திரட்டிக்கட்டும் உணர்ச்சிகரமான நிகழ்வுகள்.

தமிழ் மக்கள் தமது கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்றும் போது அது நீதிக்கான போராட்டத்தின் உந்துவிசையாக மாறும். எனவே அந்த அடிப்படையில் கூறின், நினைவு கூர்தல் என்பது நீதிக்கான போராட்டத்திலிருந்து பிரிக்கப்படவியலாத ஒரு பகுதி.

மூன்றாவது முக்கியத்துவம், தாயகத்தைப் பொறுத்தவரை, நினைவு கூர்தலில் ஓர் எதிர்ப்பு இருக்கிறது. அரசாங்கம் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தின் நினைவு கூர்தலை சட்டப்படி தடுக்கின்றது. அல்லது மறைமுகமாக மிரட்டித் தடுக்கிறது. அல்லது நினைவுச் சின்னங்களை இடித்து அழிக்கின்றது. இவ்வாறு நினைவுச் சின்னங்களை இடிக்கின்ற நினைவு கூர்தலைத் தடுக்கின்ற, ஒடுக்கும் அரசியலுக்கு எதிராக நினைவு கூர்தலுக்கான தமது உரிமையை - கூட்டுரிமையைபண்பாட்டு உரிமையை - தமிழ் மக்கள் நிலைநாட்டும் களங்களாக அவை காணப்படுகின்றன.

இலங்கைத்தீவின் இனப்பிரச்சினை வரலாறு என்பது ஒரு விதத்தில் நினைவுச் சின்னங்களை இடிக்கும் வரலாறும், அவ்வாறு இடிக்கப்பட்ட நினைவுச் சின்னங்களை திரும்ப கட்டும் வரலாறுந்தான். கடந்த 13 ஆண்டுகளாக பல மாவீரர் துயிலும் இல்லங்கள் இலங்கை அரச படைகளின் படைத்தளங்களாக காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒப்பீட்டளவில் பெரிய மாவீரர் துயிலும் இல்லம் கோப்பாயில் காணப்பட்டது. அது இப்பொழுது அப்பகுதிக்கான படைத் தலைமையகமாகக் காணப்படுகிறது.

மாவீரர் துயிலும் இல்லங்கள் மட்டுமல்ல, சிவகுமாரனின் சிலை, தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுச் சின்னம், திலீபனின் நினைவுச் சின்னம் போன்ற பல்வேறு நினைவுச் சின்னங்கள் காலத்துக்கு காலம் இடித்து அழிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்கள் இடிக்க இடிக்க தமிழ் மக்கள் தொடர்ந்து புதிதாக கட்டிக் கொண்டேயிருக்கிறார்கள்.

எனது நண்பர் ஒருவர் கூறுவது போல, இடிக்கப்பட முடியாத, எரிக்கப்பட முடியாத, தடுக்க்கப்பட முடியாத நினைவு கூரும் வழிமுறைகளை தமிழ் மக்கள் கண்டுபிடிக்க வேண்டும். உதாரணமாக முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை அழித்தாலும், அந்த மைதானத்தில் மக்கள் கூடுவதை தடுத்தாலும், அந்த தடைகளையும் மீறி தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சியை தங்கள் வீடுகளில் தயாரித்து அருந்த முடியும். தமிழ் மக்கள்



கஞ்சி குடிப்பதை யாரும் தடுக்க முடியாது. எல்லாக் குசினிகளிலும் கஞ்சி காய்ச்சப்படுவது என்பது முள்ளிவாய்க்காலில் ஒரு நிலத்துண்டில், ஒரு நினைவுச் சின்னத்தின் முன் கூடியிருந்து அழுவதை விடப் பரவலானது. தமிழ் சிவில் சமூக அமையம் கூறுவது போல உணவு ஆயத்தமாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு காலக்கட்டத்தை நினைவு கூர உணவையே பயன்படுத்துவது.

எனவே நினைவுகளை அழிக்கும் ஓர் அரசியலுக்கு எதிராக, தமிழ் மக்கள் நினைவுகளைப் பேணும் ஓர் அரசியலை தொடர்ச்சியாக விடாது முன்னெடுத்து வருகிறார்கள். குறிப்பாக 2009க்கு பின்வந்த உடனடுத்த ஆண்டுகளில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் நினைவு கூர்தலை பெருமெடுப்பில் முன்னெடுத்தது. இந்த விடயத்தில் குளறுபடிகளும் ஒற்றுமையின்மையும் உண்டு. தோல்வியை ஏற்றுக்கொள்ளாத ஒரு மனோநிலையும் உண்டு. புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல தாயகத்திலும் இப்பொழுது நினைவு நாட்களுக்கு உரிமை கோரி நினைவுச் சின்னங்களை தத்தெடுக்கும் ஓர் அரசியல் தலையெடுக்கப் பார்க்கிறது. அதைத் தனியாக ஆராய வேண்டும். ஆனால் இங்கு முக்கியமாகச் சுட்டிக் காட்டப்படுவது என்னவென்றால், நினைவைக் கண்டு அல்லது ஒரு கூட்டு நினைவைக் கண்டு அஞ்சும் ஓர் அரசியலுக்கு எதிராக நினைவையே ஒரு போராடும் கருவியாக தமிழ் மக்கள் திருப்பிப் பிடிக்கிறார்கள் என்பதுதான். நினைவு கூர்தலுக்குள்ள மிக ஆழமான பரிமாணம் இது. அந்த அடிப்படையில் அரசாங்கம் அனுமதிக்காத எல்லா நினைவு நாட்களும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை போராட்டக் களங்கள்தான்.

நாலாவது முக்கியத்துவம், நினைவு கூர்தல் எனப்படுவது நினைவுகளை அடுத்தடுத்த தலைமுறைக்கு கடத்துகின்றது. இதன் மூலம் நினைவின் தொடர்ச்சி மட்டும் பேணப்படவில்லை, ஒரு போராட்டத்தின் தொடர்ச்சி மட்டும் பேணப்படவில்லை, ஒரு மக்கள் கூட்டத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியும் பேணப்படுகிறது. அதாவது தலைமுறைகள் தோறும் நினைவுகளைக் கடத்தும் பொழுது தேசமும் தலைமுறைகள் தோறும் நிலை பேறு உடையதாக மாறுகிறது.

கனடாவில் வசிக்கும் கவிஞர் சேரன் கூறுவது போல முதலாவது தலைமுறை நிலத்தை இழந்தது. ஆனால் மொழியை நினைவுகளை வைத்திருக்கிறது. அந்தத் தலைமுறையிடம் காணப்படும் தாயகத்தை நோக்கிய பிரிவேக்கந்தான் போராட்டத்தின் உந்து சக்திகளில் ஒன்று. ஆனால் இரண்டாவது தலைமுறையைப் பொறுத்தவரை அதனிடம் நிலத்தைப் பற்றிய நினைவுகள் இல்லை. மொழி இரண்டாகிவிட்டது, பண்பாடும் இரண்டாகிவிட்டது. அப்படியென்றால் மூன்றாவது தலைமுறையின் நிலை? இவ்வாறு புலப்பெயர்ச்சியால் திரைந்து போகும் ஒரு தேசம் நினைவு கூர்தலின்போது ஓரளவுக்காவது தன் தொடர்ச்சியைப பேணக்கூடியதாக இருக்குமா?

ஐந்தாவது முக்கியத்துவம், நினைவுகூர்தல் என்பது யாரை நினைவு கூர்கிறோமோ அந்த தியாகியின் அரசியலைத் தொடர்வது மட்டும் அல்ல, அதைவிட ஆழமான பொருளில் அந்த தியாகியின் குடும்பத்துக்கு ஏற்பட்ட இழப்பை அந்த தியாகியில் தங்கி இருந்தவர்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வதும்தான். நாட்டில் எல்லாத் தியாகிகளின் குடும்பங்களும் மகிழ்ச்சியாக நிறைவாக வாழ்கின்றன என்று கூற முடியாது. குடும்பத்தின் அச்சாணி போன்ற பிள்ளை தியாகியான காரணத்தால் குலைந்துபோன குடும்பங்கள் உண்டு. அவற்றிற்கெல்லாம் உதவி வேண்டும். யாருடைய தியாகத்தை நினைத்து தமிழ் மக்கள் பொது வெளியில் விளக்குகளை ஏற்றுகிறார்களோ, அந்த தியாகிகளின் வீடுகளில் அடுப்பு எரிகிறதா என்றும் பார்க்க வேண்டும். யாருடைய தியாகத்தை நினைத்து தமிழ் மக்கள் பெருமைப்படுகிறார்களோ, அந்த தியாகியின் இளம் மனைவியும் பிள்ளைகளும் கடந்த 13 ஆண்டுகளில் என்னவானார்கள் என்று தேட வேண்டும். எத்தனையோ பெண்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை. பல இடங்களில் புதிய திருமணங்களும் கசந்து போய்விட்டன. இது தொடர்பாக யாரிடமும் சரியான புள்ளி விவரங்கள் இல்லை. குடும்பத்தில் அச்சாணி போன்ற நபர் இறந்து போனதால் கைவிடப்பட்ட பெற்றோர் உண்டு சகோதரர்கள் உண்டு மனைவியர் உண்டு பிள்ளைகள் உண்டு. எனவே தியாகிகளைப் போற்றுவது என்பது தியாகிகளின் இழப்பினால் அவர்களுடைய குடும்பத்தில் விழுந்த வெற்றிடத்தை நிரப்புவதுந்தான்.பல தியாகிகள் வீட்டை விட்டு நாட்டுக்காக போராட வந்த பொழுது அவர்களுடைய வீடுகள் எப்படி இருந்தனவோ அப்படித்தான் இப்பொழுதும் இருக்கின்றன. முன்னாள் இயக்கத்தவர்களுக்கும் தியாகிகளின் குடும்பங்களுக்கும் சமூகத்தில் கிடைக்கும் மரியாதையைப் பார்த்துத்தான் அடுத்த தலைமுறை அரசியல் செய்யத் துணியும். இது போன்ற பல விடயங்களை தமிழ் மக்கள் சிந்திப்பதற்கு வேண்டிய சூழலை நினைவு நாட்கள் உருவாக்குகின்றன.

எனவே மேற்சொன்ன காரணங்களை தொகுத்துப்பார்த்தால் நினைவு கூர்தலின் பல்பரிமாணம் தெரியவரும். அது ஒரு கவுன்சிலிங். அது ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி. அது ஒரு எதிர்ப்பு. அது ஒரு போராட்டம். அது ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுத் துக்கத்தை அரசியல் ஆக்க சக்தியாக மாற்றும் பண்புருமாற்றக் களம். மிலன் குந்தேரா கூறியதுபோல "அதிகாரத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் என்பது, மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டந்தான்"

நன்றி: நிலாந்தன்




# இயற்கை அழிவிலும் இனவாதச்சிந்தனை

தமிழ் - சிங்கள, முஸ்லிம் என்ற வேறுபாடின்றி கரையோரங்களில் வசித்த அனைவரையும் கடற்கோள் தாக்கி அழித்தபோது மக்கள் இன உணர்வு கடந்து மனிதாபிமானத்துடன் செயற்பட்டார்கள்.

தமிழ் இளைஞர்கள் முஸ்லிம் மக்களைக் காப்பாற்றி கரைசேர்ப்பித்ததும் முஸ்லிம் மக்கள் தமிழ்மக்களைப் பாதுகாத்து புகலிடம் வழுங்கியதையும் சிங்கள மக்கள் தமிழர்களுக்கு உணவுப்பொதிகள் கொடுத்து உதவியதும்... (2004ம் ஆண்டில் காலத்தில்...) என்று அந்தச் சிலநாட்கள் தீவின் இன அரசியலுக்கு முரணாகவே கழிந்தன.



இந்த இயற்கை அனர்த்தம் இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்கான மனநிலையிலும் பாரிய மாற்றங்களைக் கொண்டுவரும் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்த்தனர்.

சுனாமி; அழிவுக்கான புனருத்தான வேலைகளையும் - சமாதான முயற்சிகளையும் ஒன்றாக முன்னெடுத்து வெற்றிகாண முடியும் என்றும் சர்வதேச இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டனர்.

சுனாமி அழிவுகளைப் பார்வையிடுவதுடன், சமாதான முயற்சிகளையும் வலுப்படுத்தும் எண்ணத்துடன் மேற்குநாடுகளின் தலைவர்கள் இலங்கை நோக்கி அரசியற் பயணங்கள் மேற்கொண்டனர்.

எனினும், அனைத்துத் தரப்பினரும் நம்பியது போல அரசியல்நகர, சந்திரிகா அம்மையார் இடங்கொடுக்கவில்லை.

இயற்கை அழிவைச் சமாதான முயற்சிகளுடன் எல்லோரும் இணைத்துப் பார்த்து சிந்தித்துக் கொண்டிருக்க, அம்மையாரோ இனவாதரீதியிலும் - போர் முனைப்பிலும் செயற்பட ஆரம்பித்தார். உடனடி மீட்பு நடவடிக்கைகளில் புலிகள் இயக்கம் திறம்பட நடாத்தி வருகின்றது என்பதை அறிந்திருந்தும் புலிகள் மீது சேறுபூசும் வகையில் குற்றச்சாட்டுக்களை வீசிவந்தார்.

உலகநாடுகள் உவந்தளித்த நிவாரண உதவிகளை சிங்களவர் - தமிழர் என்று இன பேதம் காட்டி விநியோகிக்க ஏற்பாடுகள் செய்தார்.

கிழக்கு மாகாணத் தமிழ்மக்களுக்கெனச் சென்ற நிவாரணப் பொருட்களை படையினரும், ஜே.வி.பியினரும் வழிமறித்து சிங்களவர்களுக்கெனத் திசைதிருப்பியபோது அம்மையாரின் அரசு அவற்றை வெறுமனே பார்த்துக் கொண்டிருந்ததுடன் - அவ்வாறான சம்பவங்கள் நடைபெறவில்லை என்று நியாயப்படுத்தல்களிலும் ஈடுபட்டது.




இயற்கையின் சீற்றத்தில் இறந்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்தபோது நிவாரண உதவிகளின் அதிகரித்த பங்கை தெற்கிற்கு அனுப்புவதிலேயே அம்மையார் குறியாக இருந்தார். தெற்கிலும் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டு சிங்களவருக்கே உதவிகள் அளவுக்கு அதிகமாக வழுங்கப்பட்டன.

புனர்நிர்மாணத்திற்கான திட்டங்களை வெளிநாட்டு அரசுகள் கோரியபோது தமிழர் பகுதிகளை முழுமையாகப் புறக்கணித்துவிட்டு சிங்களவர் பகுதிகளுக்கான திட்டங்களை உடனடியாகத் தயாரித்து, சந்திரிகா அரசு அனுப்பிவைத்தது. இலங்கை ஒருநாடு என்று இறைமைத் தத்துவம் பேசும் அம்மையார் தமிழ், முஸ்லிம் மக்களைப் புறக்கணித்துவிட்டு சிங்களவரின் தலைவியாகவே நடந்து கொண்டார்.

கடற்கோள் அழிவை ஒரு தேசியப் பேரழிவு என அறிவித்து உலக உதவி கோரிய அதே சமயம் நாட்டில் அவசரகால நிலையைப் பிறப்பித்தது வடகசு, கிழக்கில் தனது இராணுவ நலன்களை உறுதி செய்வதில் அம்மையார் அக்கறை காடடினாரேயொழிய, வடக்கு, கிழகசு மக்களின் மீட்பு மற்றும் நிவாரண விடயங்களில் அக்கறை காட்டவில்லை.

இலங்கைத்தீவில் அதிகம் பாதிப்படைந்த வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்திற்கு உலகத் தலைவர்கள் வந்துவிடாதபடி பார்த்து கொள்வதில் சந்திரிக்கா அரசு, ஒரு கேவலமான இனவெறியுடன் நடந்து கொண்டது. 'தனது மக்கள்' என்று வடக்கு கிழக்கு மக்களை உலக நாடுகளுககுச் சொல்லிவந்த அம்மையார் இந்த அவலநேரத்திலும் இனவெறி உணர்வுடன் செயற்படுவது கண்டு உலகத் தலைவர்கள் திகைத்துப் போயினர்.

ஒரு பேரழிவில் இலங்கை மக்கள் அல்லல் பட்ட வேளையில் அந்த மக்களுக்கு உதவுவதை விட்டுவிட்டு, பெருமெடுப்பில் ஆயுதக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களை வரை





வதிலேயே அம்மையாரின் அரசு குறியாக இருந்தது.

ஈரானுடன் ஒரு ஆயுத ஒப்பந்தம். உலகநாடுகளுடன் யுத்த டாங்கிகள் வாங்கும் உடன்படிக்கை. பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்... என்று சிங்கள அரசு போர் முனைப்புடனேயே செயலாற்றி வருகின்றது.

வந்து குவியும் வெளிநாடுகளின் மனிதாபிமான உதவிக்கான பணத்தை சிங்கள அரசு ஆயுதக் கொள்வனவுகளுக்கு பயன்படுத்த முனைகின்றது என்ற அச்சம் தமிழ்மக்களிடம் எழுந்துள்ளது.

செலவிடப்படும் என்று அரசு பிடிவாதம் பிடிக்கின்றது.

**ஆழிப்பேரலை அனர்த்தத்தின் விளைவுகள்....**

இந்த இயற்கை அழிவுகளைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளை வேகப்படுத்த வேணடும் என்ற உலக நாடுகளின் விருப்பத்திற்கு முற்றிலும் மாறாக ஒரு போரைத் தூண்டக்கூடிய நடவடிக்கைகளிலேயே சந்திரிக்கா அரசு ஈடுபடுகின்றது.

சுனாமி அழிவுகள் குறித்த மனிதாபிமான வேலைத்திட்டங்கள் தொடர்பாக தலைமைப்










சந்திரிகா அம்மையாரின் சமாதான விரோதச் செயற்பாட்டால் முன்னர் வரவிருந்த 'டோக்கியோ நிதி' அரசிற்குக் கிடைக்கவில்லை. அதனால் இலங்கையின் அரச பொருளாதாரம் பாரிய நெருக்கடி நிலையில் இருந்தது. ஆனால் இப்போது திடீரென சிங்கள அரசு ஆயுதக்கொள்வனவில் - கப்பல் கொள்வனவில் - விமானக் கொள்வனவுகளில் அக்கறைகாட்டுகின்றது. இதற்கான நிதிவளம் சிங்கள அரசுக்கு எவ்வாறு கிடைத்துள்ளது என்பது உலகறிந்த விடயமாகும்.

இந்தவகையில், இயற்கை அழிவுகளைக் கண்டு உலகம் வழங்கிய உதவிகளை சிங்கள அரசு ஆயுதக் கொள்வனவிற்கும் - தென்பகுதி அபிவிருத்திக்குமே செலவிட்டு வருகின்றது என்ற உண்மை வெளியாகின்றது.

தமிழர் பகுதிகளுக்கான வெளிநாட்டு உதவிகளின் பங்கு சரியாகக் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடனும், கிடைக்கும் நிதி உரிய இடங்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற கொள்கையுட னும் சிங்கள அரசும் - புலிகள் இயக்கமும் இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பு அமைய வேண்டும் என்று புலிகள் இயக்கம் அரசைக் கோரியிருந்தது.

ஆனால், பொதுக் கட்டமைப்பு யோசனையை சிங்கள அரசு புறக்கணித்து வருகின்றது. அதற்குப் பதிலாக ஊழலும் - இனவெறி உணர்வும் - நிர்வாகத்திறன் அற்றதுமான சிங்கள நிர்வாக இயந்திரத்தினூடாகவே வடக்கு - கிழக்கு பகுதிகளிலும் வெளிநாட்டு உதவிகள்

பீடத்துடன் ஆலோசனை கலந்துவிட்டு மட்டக்களப்பு திரும்பிய புலிகளின் அணி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வைத்து - தாக்கி அழிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப் கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் கொல்லப்பட்டனர். இது மனிதாபிமானமற்ற காட்டுமிராண்டிச் செயல் என்பதுடன், புலிகள் இயக்கத்தைச் சீண்டி போருக்கிழுக்கும் ஒரு இராணுவச் செயலுமாகும்.

இவ்விதம், சமாதான முயறச்சிகளுக்குப் பதிலாக சந்திரிக்கா அரசு போர் முனைப்பிலேயே காலத்தை ஓட்டுகின்றது. அதற்கு வாய்ப்பாக சுனாமி அழிவுக்கான வெளிநாட்டு உதவிகளை இராணுவத் தேவைக்கு திசை திருப்ப் முயற்சிக்கின்றது. அதேசமயம், புனர் வாழ்வு மற்றும் நிவாரண விடயங்களிலும் தமிழர்களைப் புறக்கணித்து வஞ்சிக்க சிங்கள அரசு முனைகின்றது.

சிங்கள அரசின் இந்த இனவாத - இராணுவ வாத செயற்பாட்டை சர்வதேச சமூகம் உணர்ந்துகொண்டு கொண்டு அதற்கேற்ற விதமாகச் செயற்பட வேண்டும் என்பதே தமிழரின் அவாவாகும்.

விடுதலைப்புலிகள் (மார்கழி 2004 – தை, 2005)

# ஆழிப் பேரழிவின் பதிவுகள்

ஊருக்குள் கடல்புகும்... அதுவும் ஆழிப் பேரலையாக நுழைந்து உயிர்க்கொலைகள் புரியும் என்று எவரும் கற்பனை செய்திருக்க வில்லை. ஐம்பெரும் பூதங்களென நிலத்தை – நீரை – நெருப்பை – காற்றை – ஆகாயத்தை எம் முன்னோர்கள் உருவகப்படுத்தியதை நேற்று வரை நாங்கள் பெரிதுபடுத்தவில்லை. பூதம் என்று நாம் இதுவரை கருதியது இனவாதப் பூதத்தையும் தான்.

ஆனால் தனது அழிவுச்சக்தியை இயற்கை எம்மீது காட்டிவிட்டதே! 1, 500 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் நிலம் என்ற பூதம் நெளிந்து – அசைந்து – கரையில் சிறகுமுளைத்து – வாய் பிளந்து – எம்மக்களை விழுங்கிவிட்டதே.

சில நிமிட கடல் சீற்றம் தமிழீழத்தின் இருபதினாயிரம் வரையான மக்களை அழித்து விட்டது. எத்தனையோ குடும்பங்கள் முற்றாக அழிந்துவிட்டன. தாய் – தந்தையை இழந்த பிஞ்சுகள் ஏராளம். இன்னும் பல ஆண்டு களுக்கு நிலைத்து நீடிக்கப்போகும் அந்தச் சோக நினைவுகளைச் சுமந்துநிற்கும் சில விபரங்களை இங்கே காணலாம்.

## இறப்புக்கள்

வடக்கு-கிழக்கு 17,024
தெற்கு-மேற்கு 10,403




## காயங்கள்

வடக்கு-கிழக்கு 7,198
தெற்கு-மேற்கு 7,794




## இடம்பெயர்ந்தவர்கள்

வடக்கு-கிழக்கு 344,803
தெற்கு-மேற்கு 219,662




## சேதமான பாடசாலைகள்

வடக்கு-கிழக்கு 128
தெற்கு-மேற்கு 48




## சேதமான வீடுகள்

வடக்கு-கிழக்கு 85279
தெற்கு-மேற்கு 35,757







| | யாழ் மாவட்டம் | கிளிநொச்சி மாவட்டம் | முல்லைத்தீவு மாவட்டம் | திருமலை மாவட்டம் | மட்டக்களப்பு மாவட்டம் | அம்பாறை மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|
| இறப்புக்கள் | 1256 | 30 | 2771 | 1076 | 2840 | 9051 |
| காயங்கள் | 1647 | 670 | 2590 | – | 1575 | 6771 |
| இடம்பெயர்ந்தவர்கள் | 41013 | 1603 | 21178 | 69212 | 61912 | 137960 |
| சேதமான பாடசாலைகள் | 11 | – | 12 | 23 | 36 | 40 |
| சேதமான வீடுகள் | 7198 | 7500 | 4000 | 16378 | 21126 | 29077 |
| சேதமான வைத்தியசாலைகள் | 03 | 01 | 02 | 09 | 08 | 29 |

### சுருக்கக் குறியீடுகள்

- இறப்புக்கள்
- காயங்கள்
- இடம்பெயர்ந்தவர்கள்
- சேதமான பாடசாலைகள்
- சேதமான வீடுகள்
- சேதமான வைத்தியசாலைகள்

16 ஆம் ஆண்டு

# வீரவணக்கம்



04.03.1938 **தேசத்தின் குரல்** 14.12.2006

# அன்ரன் பாலசிங்கம்

[அன்டன் ஸ்டானிஸ்லாஸ் பாலசிங்கம் – மண்சூர், மட்டு ...கரவெட்டி, யாழ்]

*விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் மூத்த தலைமகனாக, பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்று சேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன்.*

*-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் -*

# முல்லைத்தீவில் இல்மனைட் அகழ்விற்காக காணிகளை அபகரிக்க நடவடிக்கை!

டிசம்பர் 07, 2022

முல்லைத்தீவு - கொக்கிளாய் கிழக்கு பகுதியிலுள்ள “கம்பித்தறை“ என்னும் தமிழ் மக்களின் பூர்வீக மானாவாரி விவசாயக் காணிகளை கனிபொருள் மணல் கூட்டுத்




தாபனத்திற்கு அபகரித்து வழங்குகின்ற முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அண்மையில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளரால் காணிகளுக்குரிய மக்களிடம் இது தொடர்பில் நேரில் சென்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு அபகரிக்கவுள்ள தமிழ் மக்களின் காணிகளுக்கு பதிலாக கருநாட்டுக்கேணி பகுதியில் காணி வழங்கப்படுமெனவும் கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரின் இத்தகைய நடவடிக்கையால் அதிருப்திக்குள்ளான மக்கள் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் இதுதொடர்பில் தெரியப்படுத்தியுள்ளனர்.

அந்தவகையில் மக்களின் அழைப்பினை ஏற்று முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் நேற்று



(06) கொக்கிளாய்ப் பகுதிக்கு நேரில் சென்று, காணிகளுக்குரிய தமிழ் மக்களுடன் நிலமைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு – கொக்கிளாய் கிழக்கு, கம்பித்தறையில் 32 தமிழ் குடும்பங்களுக்குச் சொந்தமான 44 ஏக்கர் பூர்வீக மானாவாரி விவசாயக் காணிகள் காணப்படுகின்றன.

குறித்த கம்பித்தறை மானாவாரி விவசாயக் காணியில், காணிகளுக்குரிய தமிழ் மக்கள் 1984ஆம் ஆண்டு தமது பகுதிகளிலிருந்து இடம்பெயர்வதற்கு முன்னர் முழுமையாக விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவந்துள்ளனர்.

தொடர்ந்து கடந்த 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமது பகுதிகளில் மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னர் 16 தமிழ் மக்கள் அங்கு மானவாரி விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவந்துள்ளனர்.

அப்போது குறித்த பகுதியில் கனியமணல் அகழ்விற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என ஒரு பெயர்ப்பலகை இடப்பட்டதாக



அப்பகுதி தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.



இந்நிலையில் அவ்வாறு பெயர்ப்பலகை இடப்பட்டதற்கு கடந்த 2016 இல் கரைதுறைப்பற்று பிரதேசசெயலகம் சென்று தம்மால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதன்பின்னர் 2020.08.14ஆம் திகதியன்றும் இந்த நடவடிக்கைக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்டசெயலகத்திற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டதுடன், முல்லைத்தீவு மாவட்டசெயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அதன்பின்பு 2020ஆம் ஆண்டிற்கான பெரும்பொக விவசாய நடவடிக்கைமேற்கொள்வதற்கு தமிழ் மக்ளுக்கு தடை விதிக்கப்பட்டது.

குறிப்பாக அப்பகுதியை கைத்தொழில் அமைச்சின் கீழான கனிபொருள் மணல் கூட்டுத்தாபனம் காணிகளுக்குரிய மக்களுக்கு எவ்வித அறிவித்தலையும் வழங்காது, முட்கம்பிகளால் அடைத்து ஒரு அத்துமீறிய அபகரிப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

அந்தவகையில் 13.05.2021 இக்காணிகளை விடுவிக்குமாறு முல்லைத்தீவு மாவட்டசெயலருக்கு மீண்டு மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அதன்பின்னர் இக்காணி விடுவிப்பபை வலியுறுத்தி கடந்த 12.02.2022அன்று கொக்கிளாய் பாடசாலை வளாகத்திலிருந்து குறித்த காணிகள் உள்ள இடம்வரையில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு தொடர்ச்சியாக காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தமது காணி விடுவிப்பையே வலியுறுத்திவருகின்றனர்.

இந்நிலையில் கடந்த 02.12.2022 திகதியன்று கொக்கிளாய் கிழக்கு, கம்பித்தறைப் பகுதிக்கு நேரடியாக விஜயமொன்றினை மேற்கொண்டிருந்த கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர், குறித்த காணிளுடன் தொடர்புடைய மக்கள் சிலரை அழைத்து குறித்த காணிகள் கனியமணல் அகழ்விற்காக எடுத்துக்கொள்ளப்போவதாகத் தெரிவித்ததுடன், கருநாட்டுக்கேணி பகுதியில் பதில் காணிகள் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேசசெயலரின் இந்த நடவடிக்கையால் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் மிகுந்த அதிருப்திக்குள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் இது தொடர்பில் முறையிட்டதற்கு அமைய, ரவிகரன் நேற்று செவ்வாய்க்கிழமை கொக்கிளாய் பகுதிக்குச் சென்று குறித்த மக்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இக் கலந்துரையாடலின்போது குறித்த காணியை விடுவித்துத் தர நடவடிக்கை எடுக்குமாறு ரவிகரனிடம் மக்கள் கோரியுள்ளநிலையில், இது தொடர்பில் உரியவர்களுடன் பேசி இதுதொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முயற்சிப்பதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install used &
new Walk in Cooler, Walk in Freezer
Kapil: 647.515.8643
kapil.afr@gmail.com


New
RANGANAS
JEWELRY
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE
SINCE 1996
கனடா வரலாற்றில்
எங்கும் கண்டிடாத
சேவை
சிங்கப்பூர், டுபாய் நகைகள்
மிகவும் மலிவான விலையில்
Singapore, Dubai Jewellery
for Lowest Price
1%
முதல் தங்க
நகை
அடைகு
சேவை
Markham & Steeles
(Yellow Building)
திருமணத்துக்கான தாலிக்கொடி
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள கனடாவில்
நம்பிங்கை நாணயம் கைராசி
ஒரே இடம் நியூ ரங்கனாஸ்
Tel: 647.702.2159
647.947.2864
New
RANGANAS
JEWELLERY
647-947-2864
நியு ரங்கனாஸ் நகை மாடம்
OPEN
6055 Steeles Ave., E. Unit C102, Scarborough ON M1X 0A7
www.newranganasjewelhouse.com
kprranga@hotmail.com


MORTGAGE
SUBRA
SUBRA
MORTGAGES INC.
Residential/Commercial/Industrial
& Investment Properies
1st, 2nd & 3rd Mortgages
Purchase
Refinance
Renewal
Switches
Equity Line of Credit
Pre-Approvals
Self-Employed
Multi Rental Properties
New Immigrants
Mortgage In
Any Situations
LOAN
LINE OF
CREDIT
WE
DEAL
WITH
ALL
BANKS
NESAN
416-908-5656
www.subra.com or www.nesan.ca
email:mortgage@subram.com
MORTGAGE
ALLIANCE
Independently Owned & Operated
Lic. No: M15001465, Brokerage No: 10530
Corp Off: 2005 Sheppard Ave E, Suite 200
North York, ON M2J 5B4
Office: 1585 Markham Rd, Unit 406, Scarborough ON M1B 2W1
Off: 416-660-5656/Fax: 647-351-3099/ Toll: 1-844-878-2721




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# மிருசுவில் படுகொலை 19.12.2000

யாழ். மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரதேசத்தில் "படித்த மகளிர் குடியேற்றத்திட்டம்" என்று சொல்லப்படுகின்ற மிருசுவில் கிராமம் அமைந்துள்ளது. முகமாலைப் பகுதியிலிருந்து யாழ். நகர்நோக்கி மேற்குப் புறமாக மூன்று கி.மீ. தூரத்தில் மிருசுவில் கிராமம் அமைந்துளள்து.





2000 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தென்மராட்சியின் பல பாகங்களிலும் கடுமையாக நடந்த சண்டைகளால் தென்மராட்சிப் பகுதி மக்களிற் பெரும்பாலானோர் வடமராட்சியின் பல இடங்களுக்கு இடம்பெயர்ந்திருந்தனர். இதில் ஒரு பகுதியினர் மிருசுவில் வடக்கு படித்த மகளில் குடியேற்றத்திட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி கரவெட்டியில் அமைந்துள்ள நாவலர் மடப் பகுதியில் தஞ்சமடைந்திருந்தனர்.

19.12.2000 அன்று மிருசு விலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சுழ கரவெட்டியில் தங்கியிருந்த ஒன்பது பேர் தமது வாழ் விடங்களைப் பார்வையிடச் சென்றனர். அங்கிருந்த தமது வாழ்வியலுக்குத் தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தவேளை ஒன்பது பேரையும் கைது செய்த சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் கண்களை கட்டி சித்திர வதை செய்தனர். ஒன்பது பேரில் ஒருவர் தப்பி மந்திகைப் பகுதிக்கு வந்து ஏனையவர்களின் உறவினரிடம் எட்டுப்பேரின் நிலைமையினையும் தெரிவித்தார்.

காணாமற்போனார்களின் உறவினர்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்து அச்சம்பவத்திற் தப்பிவந்த பொன்னையா மகேஸ்வரன், மற்றும் அப்பகுதியில் கடமையில் ஈடுபட்ட சிங்கள இராணுவ வீரர் லான்ஸ் கோர்ரல் ஆர். எம். எஸ். ரத்னாநாயக்கவும் கொடுத்த தகவின் பேரில் அப்போதைய யாழ். காவற்றுறை அத்தியட்சகர் உபாலி குணசேகர, உதவிக் காவற்றுறை அத்தியட்சகர் நிமல் ஸ்ரீநாத், சாவகச்சேரி நீதவான் அன்னலிங்கம் பிரேம் சங்கர், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை ஆகியோர் முன்னிலையில் அடையாளம் காட்டப்பட்ட மனிதப் புதைகுழி 25.11.2000 அன்று மாலை 3:30 மணியளவில் தோண்டப்பட்டது. புதைகுழி தோண்டும் போது இரண்டு அடி ஆழத்தில் சடலங்கள் ன்பட்டன. அப்பகுதியிற் காணாமற்போன எட்டுப் பேரது உடல்களும் பெட்டப்பட்டு, கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன.

மிருசுவில் சம்பவம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கீழ் வருமாறு (29.12. 2000 வீரகேசரி) தகவல் கொடுத்தார்.

"தப்பி வந்த பொன்னையா மகேஸ்வரனும், லான்ஸ் கோப்ரல் ஆர்.எம். எஸ் ரட்ணாயக்காவும் அடையாளம் காட்டிய எழுதுமட்டுவாள் பகுதியிலிருந்த மனிதப் புதைகுழியைத் தோண்டியபோது இரண்டடி ஆழத்தில் மனிதனின் முழங்கை ஒன்று தென்பட்டது. அதைச்சுற்றி மண்ணை அவதானமாக அப்புறப்படுத்தி வேளை மரக்கட்டை காணப்பட்டது. மனித சடலத்தின் தலை ஒன்றும் காணப்பட்டது. அதை அவதானமாக எடுத்த போது இருபத்தொரு வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் காணப்பட்டது. இச்சடலம் சிவப்பு வெள்ளை நிறச்சாறியினால் சுற்றப்பட்டிருந்தது. இரண்டாவதாகச் சிறுவனின் சடலம் எடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து மேலும் சடலங்கள் எடுக்கப்பட்டன. சிறுவனின் சடலம் மேற்றோல் உரிந்து றோஸ் நிறமாகக் காணப்பட்டது. கூரிய ஆயுதத்தால் குரல் வளைகள் வெட்டப்பட்ட நிலையில், கால், தலை துண்டிக்கப்பட்ட நிலையிலும் சடலங்கள் காணப்பட்டன." எனத் தெரிவித்தார்.




## மிருசுவில் படுகொலை

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மிருசுவில் கிராமத்தில் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் நாள் குழந்தைகள் உட்பட எட்டு தமிழ் அகதிகள் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர். தமது வீடுகளை விட்டு வெளியேறிய எட்டுப் பொதுமக்கள் தமது வீடுகளைச் சென்று பார்ப்பதற்காக மிருசுவிலுக்குச் சென்ற போது 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 19 இல் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுப்புதைக்கப்பட்டனர். மிருசுவிலில் இருந்து உடுப்பிட்டிக்கு இடம்பெயர்ந்த சில அகதிகள் தமது வீடுகளையும், உடமைகளையும் பார்ப்பதற்காக அதிகாரிகளிடம் அனுமதி பெற்று டிசம்பர் 19 ஆம் நாள் மிருசுவிலுக்குச் சென்ற வேளை அரைகுறையாக புதையுண்ட நிலையில் இளம்பெண் ஒருவரின் சடலத்தை அங்கு கண்டார்கள். அடுத்த நாள் அதே பகுதிக்குச் சென்று குறித்த சடலத்தை அடையாளங் காண முற்பட்டவேளை அங்கு நிலை கொண்டிருந்த இலங்கை இராணுவத்தினர் இவர்களைக் கைது செய்தனர்

இவர்களுள் எட்டுப் பேர் படுகொலை செய்யப்பட்டு அப்பகுதியிலுள்ள வீடொன்றின் மலசலகூடக் குழியினுள் வீசப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் பொன்னுத்துரை மகேசுவரன் என்பவர் பலத்த காயங்களுடன் இத்தாக்குதல்களில் இருந்து தப்பி வந்து தனது உறவினர்களுக்குத் தகவல் கொடுத்ததை அடுத்தே இக்கொலைகள் பற்றிய விபரங்கள் தெரிய வந்தன. அவர் வழங்கிய தகவலிலேயே படுகொலை செய்யப்பட்டவர்களது சடலங்கள் மலசலகூட குழியிலிருந்து பின்னர் காவல்துறையினரால் மீட்கப்பட்டிருந்தது.
மாவட்ட வைத்திய அதிகாரி மரு. சி. கதிரவேற்பிள்ளையின் சாட்சியப்படி, கொலை செய்யப்பட்டவர்கள் கழுத்து வெட்டப்பட்டே கொல்லப்பட்டுள்ளனர் விசாரணைகளை அடுத்து ஐந்து இராணுவத்தினர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர். எட்டு தமிழர்களின் கழுத்தை அறுத்து படுகொலை செய்த, இலங்கைப் படைத்துறையைச் சேர்ந்த சுனில் ரத்னநாயக்க என்பவருக்கு கொழும்பு நீதிமன்றம் 2015 யூன் 25 அன்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த நான்கு இராணுவத்தினரை போதிய ஆதாரமின்மையால் விடுதலை செய்வதாக நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட சுனில் இரத்திநாயக்கவை 2020 மார்ச் 26 இல் தற்போதைய அரசுத்தலைவர் கோட்டாபய ராஜபக்ச மன்னிப்பளித்து விடுதலைசெய்துள்ளார்.

**19.12.2000 அன்று மிருசுவிற் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. சின்னையா வில்வராசா (41)
2. செல்லத்துரை தெய்வகுலசிங்கம் (31)
3. வில்வராசா பிரசாத் (05)
4. வில்வராசா பிரதீபன் (15)
5. பாஸ்கர் ஞானபாஸ்கரன் (19)
6. ஜெயச்சந்திரன் நடேசு (21)
7. ஞானச்சந்திரன் கதிரன் (35)
8. ஞானச்சந்திரன் சாந்தன் (-)

# மன்னார், பேசாலைப் படுகொலை 23, 12. 2005

மன்னார் மாவட்டத்தில் சிங்கள அரசபடைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலை அடுத்து சிங்கள படையினர் தமது கொலை வெறியாட்டத்தைப் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டனர். தம்மைத் தாக்குவோரை அடையாளம் காண முடியாத படையினர், வன்முறைகளை பொதுமக்கள் மீது திணிப்பது இதுதான் முதற்தடவையல்ல. காலங்காலமாக தமக்கேற்படும் இழப்புக்களுக்காக பொதுமக்களையே இவர்கள் பழிதீர்த்து வருகின்றனர்.

அவ்வாறே 13.12.2005 அன்றைய மன்னார்ச் சம்பவமும் அமைந்துள்ளது. அன்றையதினம் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து படையினரால் சுற்றிவளைப்பு தேடுதல் ஒன்று நடத்தப்பட்டது. அப்போது இரு குடும்பங்களைச் சோந்த நான்கு வயதுக் குழந்தை உட்பட ஐந்து பேரை இராணுவத்தினர் கடத்திச் சென்றனர். இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட ஐந்துபேரும் 100 வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் எரியூட்டப்பட்ட சடலங்களாகக் கண்டு பிடிக்கப்பட்டனர்.

**23.12.2005 அன்று மன்னார், பேசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. திரேசா குருஸ் (40)
2. இம்மானுவேல் குருஸ் (43)
3. குருஸ் அந்தோனியம்மா (38)
4. குருஸ் டிலக்சன் (04)

# தென் தமிழீழப் படுகொலைகள் ஆகஸ்ட் தொடக்கம் டிசம்பர் 2006

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த திருகோணமலைப் பகுதிகளும் அதன் அருகாக இருந்த மட்டக்களப்பு பகுதிகளும் ஆறுமாத காலத்துக்கு மேலாக சிறீலங்கா சிங்கள இராணுத்தின் பெருமெடுப்பிலான தாக்குதலுக்குள்ளானது. அதன்போது பொதுமக்கள் கூட விட்டுவைக்கப்பட வில்லை.



இந்தக்காலத்தில் இப்பகுதி துண்டிக்கப்பட்டிருந்தால் இதன்போது ஏற்பட்ட 210 பொதுமக்களின் இழப்புக்கள் இதுவரை சரியாக பதிவுக்குட்படுத்தப்படவில்லை.

இந்த 6 மாதகாலத்து நிகழ்வுள் தொடர்பான ஒரு சுருக்கமான விபரமே இதுவாகும். இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் விபரம் முழுமையாக இல்லாவிட்டாலும் குடும்ப அங்கத்தவர்களின் இழப்புக்கள் தொடர்பாக குடும்பங்கள் மேற்கொண்ட பதிவுகளின் அடிப்படையில் உதவி அரச அதிபர் அலுவல்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள் சரியான பார்வையைத் தருகிறது.

மாவிலாற்றிலிருந்து நீர் திறந்து விடப்படும் வான் கதவை கட்டுப்பாட்டில் கொண்டுவருவதென்ற சாட்டில் இத்தாக்குதல் ஆரம்பமானது. திருகோணமலையின் மூதூர் தமிழ் மக்கள் அந்தப் பகுதியில் அமைந்திருக்கும் இந்தக் குளத்திலிருந்து தங்களுக்கும் நீர் வசதிசெய்து தரப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பல ஏக்கர் நெல் வயல்களுக்கு நீரை வழங்கும் இந்த வான் கதவைப் பூட்டியிருந்தனர். இலங்கை கண்காணிப்புக் குழுவின் தலையீட்டினால் இப்பிரச்சனை தீர்க்கப்பட்ட பொழுதும் சிங்கள அரசாங்கம் தாக்குதலை முன்னெடுத்துச் சென்றது.

முதலாவதாக ஆகஸ்ட் 06 ஆம் நாள் மாவிலாறு பிரச்சனையை வைத்து ஆகாய, தரைப்படைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இந்த நாட்களில் இடம்பெற்ற தாக்குதலில் பாதிக்கப்பட்ட கிராமங்களுள் ஈச்சிலப்பத்தை, நல்லூர், மற்றும் உப்பாறு உள்ளடங்கும். சம்பூருக்கு அண்மியதாக முன்பு நடாத்தப்பட்ட தாக்குதலால் இடம்பெயர்ந்த மக்கள் இக்கிராமங்களுக்கு ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்தனர்.

மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களை இணைக்கின்ற ஒரு ஒடுங்கிய கரையோரப் பகுதியான வாகரைக்கு திருகோணமலையின் மூதூர் கிழக்கிலிருந்து மக்கள் தொடர்ச்சியான தாக்குதல் காரணமாக இடம்பெயர்ந்து செல்ல வேண்டியதாயிற்று. ஆகஸ்ட் 19 ஆம் நாள் இரண்டாவது மிகப்பாரிய தாக்குதல் வாகரையை இலக்குவைத்து நடாத்தப்பட்டது. பொதுமக்கள் மீது மீண்டும் நடாத்தப்பட்ட ஆகாயம், தரைத்தாக்குதலால் 100 இற்கும் மேற்பட்டோர் இறந்தனர். அவ்வாறு இறந்தவர்களுக்கு முறைமையான இறுதி நிகழ்வுகளை நடாத்தக்கூட குடும்பத்தவர்களுக்கு வசதி கிடைக்கவில்லை.

இந்த நிகழ்வின் பின்பும் வாகரைக்கு வடக்கே மூதூர் கிழக்கில் தங்கியிருந்தவர்களை தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் குடும்பங்களெனக்கருதி ஆகஸ்ட் 28ஆம் நாள் இவர்கள் மீது கொடூரமான தாக்குதலை சிறீலங்கா சிங்கள இராணுவம் நடாத்தியது. சிறீலங்கா சிங்கள இராணுவத்தால் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதும் இலங்கைத் துறை முகத்துவாரம் பாலமூடாக வெளியேறுவதற்கு மக்கள் முயற்சித்தனர். மக்கள் தப்பிச் செல்வதை தடுக்கும் நோக்கமாக பாலம் சிறீலங்கா இராணுவத்தால் தகர்க்கப்பட்டது. இதன்போது இடம்பெற்ற தாக்குதலில் குறைந்தது 25 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

மூதூர் கிழக்கில் இவ்வாறு தாக்குதலை நடத்தி மக்களை வெளியேற்றிய சிறீலங்கா சிங்கள இராணுவம் இடம்பெயர்ந்த மக்கள் நெருக்கமாக வாழ்ந்த வாகரைப் பகுதி மீது தாக்குதலை ஆரம்பித்தனர். இந்தப் பிரதேசத்தில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெரும் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதன் போது நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

இந்நிகழ்வு இடம்பெற்ற ஆறு மாத காலத்துக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் இலங்கை கண்காணிப்புக்குழு ஆகியன வாகரைக்குச் செல்வதை தடுத்தது. இறுதியில் குண்டு மற்றும் செல் தாக்குதலிலிருந்து தங்களை பாதுகாக்குமாறு இலங்கை கண்ணகாணிப்புக் குழுவிடம் மக்கள் மன்றாடினார்கள். ஆறு மாதகாலத்துக்கு உணவு தொடரணி கூட வாகரைக்கு செல்வதை சிறீலங்கா சிங்கள அரசாங்கம் அனுமதிக்கவில்லை. சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் உணவுத் தொடரணியை எடுத்துச்செல்ல இரு தடவைகளும் மேலாக முயற்சித்ததையும் சிறீலங்கா சிங்கள அரசாங்கம் முறியடித்தது.

இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அப்பகுதியிலிருந்து வெளியேற்றுவதற்கு ஒரு வழியாக எல்லா மக்களையும் வாகரையிலிருந்து வெளியேற்றுவதில் சிறீலங்கா சிங்கள அரசாங்கம் வெற்றிகண்டது. தப்பியோடும் பொதுமக்களைத் தடுத்ததற்காகவும் வாகரையை விட்டு நேரகாலத்தோடு மக்கள் வெளியேறுவதை அனுமதிக்காததற்காகவும் சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைப்புலிகளும் கண்டிக்கப்பட்டார்கள். பசியிலிருந்தும் தாக்குதலிலிருந்தும் தப்புவதாக சில பொதுமக்கள் நடையாகவே காடுகளை கடந்தார்கள். வள்ளத்தில் சென்று ஐந்து பொதுமக்கள் வள்ளம் அமிழ்ந்ததில் நீரில் மூழ்கினர். மறுவளத்தில் மனிதாபிமான உதவிகள் கிடைக்காமையைச் செய்தமை பொதுமக்கள் மீதான பாரபட்சமான தாக்குதல் என்பவற்றை சர்வதேச சமூகம் கண்டிக்காமையையிட்டு தமிழ் மக்கள் குறைபட்டுக் கொண்டார்கள்.

**உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு**

1. அ. அரசரட்ணா (42)
2. கோ. கணேசராஜா (46)
3. ஞா. சறோஜா (10)
4. ஞா. றகுமார் (06)
5. ஞா. சீவிதா (10)
6. ஞா. மஞ்சுளாதேவி (23)
7. இ. பவானி (24)
8. க. நற்குணம் (36)
9. மு. தங்கவேல் (22)
10. சீ. மகாலிங்கம் ( 32)
11. செ. சந்திரகலா (18)
12. சி. திரவியமலர் (55)
13. சி. முத்துலிங்கம் (45)
14. சி. ரஸ்யப்பிரியன் (01)
15. சி. சிவகுமார் (25)
16. சா. தவன்ஜா (21)
17. சு. யோகேஸ்வரன் (29)
18. சு. கணபதிப்பிள்ளை (62)
19. த.புமணி (45)
20. வே. தர்மலிங்கம் (50)
21. ந.டேவிட் (25)
22. ந. குணராசா (22)
23. ந. பாக்கியராசா (40)
24. ந. விமலேந்திரன் (35)
25. நா. யோகேஸ்வரன் (28)
26. நகுலேஸ்வரன் (32)
27. நா. திரவியமலர் (65)
28. ந. தனுசலீன் (04)
29. ந. நிசாந்தன் ( 20)
30. பா. நாகேந்திரன் (20)
31. பா. தயாநந்தினி (22)
32. ப. கோணேஸ்வரன் (31)
33. பி. தவனேசன் (36)
34. ற. றாமச்சத்திரன் (32)
35. இ. பிரபு (17)
36. ற. சதுர்சன் (-)
37. ற. விஜயா (30)
38. ந. தியாகராசா (48)
39. அ. செல்வறட்ணம் (-)
40. ற. கோபிநாத் (22)
41. க. பத்மா (-)
42. கு. தெய்வகரன் (-)
43. மா. நாகேஸ்வரன் (-)
44. மா. சுந்தரராஜா (-)
45. நா. இந்தரன் (46)
46. நா. பிறேமலதா (35)
47. சி. சிவசோதி (-)
48. வ. சுமநாதன் (-)
49. வெ. கோணேஸ்வரன்(-)
50. வி. றதிகலா (-)
51. யோ. சிதம்பரம் (45)
52. அ. அரசறட்ணம் (33)
53. ச. சண்முகநாதன் (29)
54. ச. சந்திரசேகரன் (22)
55. ச. கோஸ்பிரியன் (-)
56. சி. பவானி (22)
57. செ. தர்மலிங்கம் (31)
58. வ. திவ்வியா (14)
59. ஜீ. சித்திரவேல் (-)
60. கா. றாஜேஸ்வரன் (-)
61. றா. தேவராச் (25)
62. சி. சிவசங்கர் (27)
63. வெ. ஆறுமுகம் (28)
64. க. புஸ்பன் (25)
65. க. றதி (31)
66. க. றஜீன்திரன் (27)
67. க. சங்கர் (23)
68. க. சாந்தகனகம் (20)
69. கோ. நாகேந்திரன் (70)
70. கோ. தனபாக்கியம் (28)
71. கோ. தவராசா (32)
72. லோ. சசிகரன் (26)
73. ம. வரதன் (24)
74. மா. கள்ளிப்பிள்ளை (52)
75. மு. சிவமணி (58)
76. மு. பாஸ்கரன் (29)
77. ம. குணராசா (31)
78. அ. யோகநாதன் (12)
79. ஆறுமுகம் (34)
80. சு. நந்தினி (-)
81. அ. யோகநாதன் (26)
82. பா. தவமணி (27)
83. செ. ஜெயகாந்தன் (24)
84. டி. பட்மசிறி (27)
85. க. சசிக்குமார் (17)
86. T. புமணி (-)
87. T. மஞ்சுளாதேவி (-)
88. சு. கோமளாதேவி (32)
89. ச. கிளிராசா (50)
90. கு. காந்தன் (22)
91. வே. றாஜன் (35)
92. T. குமார் (07)
93. T. டயானா (15)
94. A வேல்முருகா (47)
95. ச. கிளியரசன் (50)
96. கு. சுத்தியராசா (17)
97. கலாபவனம் (45)
98. சேரன் (-)
99. சி. குணமணி (25)
100. ஞா. கோபால் (19)
101. இ. தர்சினி (07)
102. ஜெ. மாணிக்கப்போடி (19)
103. ஜெ. சகுலேஸ்வரன் (21)
104. க. அஜந்தன் (15)
105. ளு. ஜெயகாந்தன் (21)
106. ளு. முகிருபறாச் (30)
107. ளு. சிவனேசன் (25)
108. ளு. தயாகரன் (29)
109. ச. மாணிக்கப்போடி (27)
110. செ.ஸ்ரீகாந்தராசா (17)
111. சி. நிறஞ்சன் (20)
112. சி. நித்தியானந்தம் (22)
113. வி. விஸ்வலிங்கம் (19)
114. விக்னேஸ்வரன் (-)
115. த. நிமலநாதன் (34)
116. வி. துரைசாமி (-)
117. த. விவேகானந்தன் (36)
118. வே. கதிர்காமத்தம்பி (55)
119. வி. யாழினி (13)
120. A. ரகுவரன் (17)
121. I. பவானி (23)
122. I டெனிஸ்சிவானந்தன் (27)
123. K. ஜெயானந்தி (16)
124. K. கிருபேஸ்வரன் (-)
125. K. நற்குணம் (33)
126. K. சரத்பாபு (18)
127. M . கழிப்பிள்ளை (52)
128. M தவராசா (34)
129. N. யோகஸ்வரன் (-)
130. N. ரவீந்திரராசா (-)
131. P. கமல் (17)
132. P. கிருஸ்ணபிள்ளை (56)
133. S. ஜீவாநந்தன் (31)
134. S. நந்தினி (13)
135. S. றஸ்யப்பிரியன் (-)
136. S. சந்திரிக்கா (17)
137. S. தவப்பிரியா (20)
138. T. தவராசா (-)
139. V. பாலகுமாரன் (19)
140. V. கதிர்காமத்தம்பி (51)
141. V. றணீஸ்வரன் (17)
142. அ. சுதர்சினி (17)
143. கா. சரஸ்வதி (17)
144. நா. றவீந்திரராசா (41)
145. றா. சாளினி (04)
146. ர. றாமச்சந்திரன் (30)
147. சு. மகேந்திரராசா (43)
148. சு. றாஜேஸ்வரன் (26)
149. தி. றேகன் (21)
150. A. பிரியா (-)
151. A. தமயந்தி (-)
152. V. தர்மலிங்கம் (-)
153. சேரன் (-)
154. சி. குணரட்ணம் (60)
155. சி. குணமணி (60)
156. வி. சுசிகரன் (10)
157. க. கோமளாதேவி (32)
158. A. வனிதா (-)
159. வே. றாஜன் (-)
160. ஆ. மேனா (10)
161. V. தர்மலிங்கம் (-)
162. சி. சந்திரன் (39)
163. சி. ச்நதிரமூர்த்தி (23)
164. சி. பாக்கியராஜா (30)
165. சி. இந்திரன் (46)
166. சி. விஜயா (34)
167. சு. கோணேஸ்வரன் (28)
168. சு. யுவந்தன் (10)
169. த. விறதறாஜ் (22)
170. த. பிள்ளையான் (51)
171. த. றஞ்சன் (24)
172. த. யோகேஸ்வரன் (27)
173. த. சுமதி (42)
174. த. சந்திரன் (20)
175. தி. தர்சிகா (11)
176. தி. தஸ்காந்தி (16)
177. வ. குணவதி (58)
178. வே. மனோகுமார் (28)
179. S. திலசிகா (09)
180. S. கோகுலவாணி (-)
181. S. சோதி (-)
182. S. கேமலதன் (09)
183. P. மயில்வாகனம் (-)
184. N. தீபன் (17)
185. M. நாகேஸ்வரன் (38)
186. கு. சத்தியராசா (17)
187. ஆனந்தஜோதி (24)
188. கலாபவனம் (450
189. T. சர்மிளா (-)
190. K. நிறுசாந்தினி (12)
191. கு. காந்தன் (22)
192. ஆனந்தஜோதி (24)
193. குணரட்ணம் (60)
194. வி. வசீகரன் (10)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# டிசம்பர் 28, 1999 அன்று மிக கொடூரமான ஒரு துன்புறுத்தல் ஈழத்து பெண் சாரதாம்பாள் சரவணபவானந்தக் குருக்கள் என்ற பெண்ணுக்கு நிகழ்ந்தது

இந்த பெண் பலரால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்டுப் படுகொலை செய்யப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்ட தமிழ்ப் பெண் ஆவார். இவரை பாலியல் வன்புணர்வு செய்தவர்கள் சிறீலங்கா கடற்படையினர் இந்த கொடு மையை செய்தார்கள் என இந்த பகுதி மக்கள் உறுதியாக கூறுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டம், புங்குடுதீவில் சரவணபவானந்தக் குருக்கள் என்பவரது மனைவியும் இரண்டு பிள்ளை களின் தாயுமான 29 வயது சாரதாம்பாளின் இறந்த உடல் சருகுகளுக்கும் இலைகளுக்கும் கீழ் வல்லுறவுக்கு உள் ளாக்கப்பட்ட நிலையில் கிடந்ததை ஊர்மக்கள் கண்டு பிடித்தனர்.

இந்நிகழ்வு பலரையும் அதிர்ச்சி கொள்ள வைத்த பொழு தும் இன்றளவும் இதற்கு நீதி வழங்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (AHRC) அறிக்கையின் படி, உள்ளூர் இந்துக் கோயில் குரக் களின் மகளான 29 வயது சாரதாம்பாள் சரவணபவானந்தக் குருக்கள் சிறீலங்கா கடற்படையினர் எனச் சந்தேகிக்கப் படுவோரால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் புங்குடுதீவு என்ற இடத்தில் அவரது வீட்டில் இருந்து பலவந்தமாக இழுத்துச் செல்லப் பட்டு சிதைக்கப்பட்டார் என கூறப்படுகின்றது.

பன்னாட்டு மன்னிப்பு அவையின் அறிக்கையின் படி, சாரதாம்பாளின் வீடு கடற்படைத் தளத்தில் இருந்து 500 மீ தூரத்தில் அமைந்திருந்தது. அவரது தந்தையும், சகோ தரரும் கறுப்பு உடையில் வந்திருந்த பாதுகாப்பு அதிகாரி களால் வீட்டினுள் வைத்து கட்டப்பட்டது.

சாரதாம்பாளின் இறந்த உடல் வீட்டில் இருந்து 100 மீட்டர் தூரத்தில் உள்ள தரிசு நிலமொன்றில் அடுத்த நாள் கிடக் கக் கண்டுபிடிக்கப்பட்டது.

புங்குடுதீவிலும், யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்ற பொது மக்களின் ஆர்ப்பாட்டங்களை அடுத்து சாரதாம்பாளின் உடல் மருத்துவ ஆய்வுக்காக கொண்டு செல்லப்பட்டது.

உடலைப் பரிசோதித்த அரசு மருத்துவ அதிகாரி, பெண் ணின் உள்ளாடை அவரது வாயினுள் அடைக்கப்பட்டதில் மூச்சுத் திணறி இறப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

இறப்புக்கு முன்னர் அவர் பலவந்தமாக பாலியல் வன் முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் அவரது அறிக்கை தெரிவித்தது.

சாரதாம்பாளின் இறுதி நிகழ்வுக்கு இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து மனித உரிமை ஆர்வலர்கள் பலர் சென்று உரை நிகழ்த்தினர்.

அன்று அரசுத்தலைவராக இருந்த சந்திரிக்கா குமாரதுங்க 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் விசாரணை ஒன் றுக்கு உத்தரவிட்டார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கவனிக்கும் ஐநா சிறப்புப் பிரதிநிதி ராதிகா குமாரசாமி சிறீலங்கா இராணுவத்தினருக்கு எதிரான பாலியல் குற்றச்சாட் டுகளை விசாரிப்பதற்கு சிறீலங்கா அரசிடம் இருந்து பெரு மளவு ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை எனத் தெரிவித் தார்.

டிசம்பர் 1999 பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு சிறிதளவு முயற்சியே மேற்கொள்ளப்பட் டதாக அவர் தெரிவித்திருந்தார்.

தமது வீட்டுக்கு வந்திருந்த கடற்படையினரின் ஆளடை யாளத்தை வெளியிடக் கூடாதென சாரதாம்பாளின் தந்தையும் சகோதரரும் எச்சரிக்கப்பட்டதாக பன்னாட்டு மன்னிப்பு அவை தெரிவித்துள்ளது.

சிறீலங்கா காவல்துறையின் புலன்விசாரணைத் திணைக் களத்தின் தலைவர் வெளியிட்ட அறிக்கையில்,

"சகோதரர் தமது வீட்டுக்கு வந்திருந்த நால்வரின் ஆளடை யாளத்தை நிரூபிக்கத் தவறி விட்டார்". எனக் கூறினார்.

குற்றம் சுமத்தப்பட்ட கடற்படை அதிகாரிகள் வேறு இடங் களுக்குப் பணி மாற்றம் செய்யப்பட்டதாக பன்னாட்டு மன் னிப்பு அவை தனது அறிக்கையில் தெரிவித்தது.

சாரதாம்பாளின் பாலியல் வன்புணர்வு மற்றும் படு கொலை வழக்கில் சாட்சியங்கள் எவையும் சமர்ப்பிக்கப் படாதமையால், வழக்கைத் தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் மே 2001 இல் விசாரணைக் குழுவுக்குத் தெரிவித்தது.

இதே போல் கிருஷாந்தி குமாரசுவாமி, இளையதம்பி தர்சினி, கோணேஸ்வரி முருகேசபிள்ளை என பல தமிழ் பெண்களின் கொடூரமான படுகொலைகள் விசாரிக்கப் பட்டோ நீதி வேண்டியோ உண்மைகளை உலகுக்கு எடுத்து சொல்லாமலே மண்ணுக்குள் கொடும் துயரத்தை புதைத்து ஊமையாய் இருக்கின்றது...

28.12.1999




சாரதாம்பாள் பாலியல் வன்முறையும் படுகொலையும்

சாரதாம்பாள் மீது படையினரின் பாலியல் வன்முறையும் படுகொலையும் யாழ் புங்குடுதீவில் சரவணபவானந்தக் குருக்கள் என்பவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளின் தாயுமான 29 வயதுடைய சாரதாம்பாள் சிறிலங்கா கடற்படையினரால் தனது வீட்டில் இருந்து பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டு பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார் சாரதாம்பாளின் வீடு கடற்படைத் தளத்தில் இருந்து 500 மீ தூரத்தில் அமைந்திருந்தது. அவரது தந்தையும், சகோதரரும் கறுப்பு உடையில் வந்திருந்த பாதுகாப்பு அதிகாரிகளால் வீட்டினுள் வைத்து கட்டப்பட்டுள்ளனர். சாரதாம்பாளின் இறந்த உடல் கடற்படையின் முகாமின் அருகில் சருகுகளுக்கும் இலைகளுக்கும் கீழிருந்து ஊர்மக்களால் கண்டறியப்பட்டது. உடலைப் பரிசோதித்த அரசு மருத்துவ அதிகாரி, பெண்ணின் உள்ளாடை அவரது வாயினுள் திணிக்கப்பட்டதில் மூச்சுத் திணறி இறப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்தார். இறப்புக்கு முன்னர் அவர் பலவந்தமாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்தார். பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கவனிக்கும் ஐநாவின் சிறப்புப் பிரதிநிதியான ராதிகா குமாரசாமி இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான பாலியல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு இலங்கை அரசிடம் இருந்து பெருமளவு ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார். சிங்கள அரசு விசாரணைக்குழுவை அமைத்தது. சாரதாம்பாள் மீதான பாலியல் வன்புணர்வு மற்றும் படுகொலை வழக்கில் சாட்சியங்கள் எவையும் சமர்ப்பிக்கப்படாதமையால், வழக்கைத் தொடர முடியாது என சிறிலங்கா சட்டமா அதிபர் திணைக்களம் வழமைபோல் மே 2001 இல் விசாரணைக் குழுவுக்குத் தெரிவித்தது.



# மாவீரர் நாள் 2022 உணர்த்துவது?

03.12.2022

நியூஸிலாந்தில் வசிக்கும் ஒரு மூத்த தமிழ் ஊடகவியலாளர் கடந்த மாவீரர் நாளிலன்று பின்வருமாறு எனக்கு ஒரு செய்தி அனுப்பியிருந்தார் “இன்று மாவீரர் நிகழ்வுக்குப் போனேன். கடந்த வருடங்களில் எனது பிள்ளைகள் வந்தனர். இப்போது இல்லை... எனது தம்பிக்கு நான் மட்டும் மலர் தூவி அஞ்சலி செய்தேன்... இதை உங்களுடன் இன்று பகிர நினைத்தேன்... இப்போது என் தம்பிக்கு நான்... இனி வருங்காலத்தில் ...? யார் வருவார்... என யோசித்தேன். என் பிள்ளைகளின் பிள்ளைகள்...? ”

இது மாவீரர் நாளுக்கு மட்டுமல்ல பொதுவாகவே தாயகத்துக்கும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்துக்கும் இடையில் உள்ள நெருக்கத்தைக் குறித்து உரையாடும் எவரும் சுட்டிக்காட்டும் ஒரு விடயம்தான். என்னுடைய நண்பர் ஒருவர் அடிக்கடி கூறுவார்...” உன்னுடைய சகோதரன் உனக்கு உதவுவான். ஆனால் அவனுடைய பிள்ளை உன்னுடைய பிள்ளைக்கு உதவுமா?” என்று. இதே கேள்வியை வேறு ஒரு தளத்தில் நின்று இலங்கைக்கான முன்னாள் ஸ்கண்டிநேவியத் தூதுவர் ஒருவர் என்னிடம் கேட்டார்.” முதலாம் தலைமுறை புலம்பெயரிகள் வயதாகி இறக்கும்பொழுது இரண்டாம் தலைமுறை எந்தளவு தூரம் தாயகத்தை நோக்கி ஈர்க்கப்படும்?” என்று.

உண்மை ஆயுதப்போராட்டம் நடந்த காலகட்டங்களில் புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் பெரும்பாலான கவனம் யுத்த களத்தை நோக்கி குவிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக முதலாம் தலைமுறை புலம்பெயரிகள் தாம் விட்டுப்பிரிந்த தாயகத்தை நோக்கி பிரிவேக்கத்தோடு ஊர்வலம் போனார்கள், வீதிகளை மறித்தார்கள், ஆர்ப்பாட்டங்கள் செய்தார்கள். தமது பெற்றோரின் அரசியல் நடவடிக்கைகளைப் பார்த்து அடுத்த தலைமுறையும் அதனால் ஈர்க்கப்பட்டது. அக்காலகட்டத்தில் ஒடுக்குமுறை ஒரு கொடிய போராக இருந்தது. அந்த ஒடுக்குமுறையின் விளைவாக தமிழ்மக்கள் உலகம் முழுவதும் சிதறி வாழ்ந்தாலும், அந்த ஒடுக்கு முறைக்கு எதிராக ஒன்றாக திரண்டு காணப்பட்டார்கள். ஆனால் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்தபின் நிலைமை அவ்வாறு இல்லை.

ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு நிலத்தை கட்டுப்படுத்தியது. ஒரு கடலை கட்டுப்படுத்தியது. ஒரு கருநிலை அரசை நிர்வகித்தது. தமிழ் மக்கள் நீண்ட கடல் எல்லையை கொண்டவர்கள். அக் கடல் வழி ஊடாக தாயகமும் டயஸ்போறாவும் இணைக்கப்பட்டன. அந்தக் கடல் வழியூடாக ஆயுதங்கள் வந்தன, ஆட்கள் வந்தார்கள், மருந்து வந்தது, அறிவு வந்தது. ஆனால் 2009 ஒன்பதுக்குப் பின் தாயகத்தையும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தையும் இறுகப் பிணைக்கும் விதத்திலான இடை ஊடாட்டத் தளங்கள், வழிகள் எவையும் கட்டி எழுப்பப்படவில்லை. மிகக் குறிப்பாக சட்டரீதியாக ஏற்புடைய ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்டமைப்புகள் எவையும் கிடையாது. சில புலம்பெயர்ந்த தன்னார்வ அமைப்புகள் தாயகத்தை நோக்கி உதவிகளை வழங்குகின்றன. தனி நபர்களும் வழங்குகிறார்கள். ஆனால் அரசியல் அர்த்தத்தில் ஒன்றிணைக்கப்பட்ட ஓர் இடையூடாட்டத்தளம் தாயகத்துக்கும் புலம்பெயர் தமிழ் சமூகத்துக்கும் இடையே கிடையாது.

ராஜபக்சக்கள் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தை ஒருவித அச்சத்தோடு பார்த்தார்கள். ஒரு பகுதி அமைப்புகளையும் தனி நபர்களையும் தடைப்பட்டியலில் சேர்த்தார்கள். அதனால் புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் தாயகத்தோடு நெருங்கி உறவாடுவதில் இடைவெளிகள் அதிகமாக காணப்பட்டன. ஆனால் ரணில் விக்கிரமசிங்க தடைகளை நீக்குகிறார் மட்டுமல்ல, பொருளாதார நெருக்கடியை அடிப்படையாக வைத்து அவர் புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகளை தாயகத்தில் முதலீடு செய்யுமாறு அழைக்கிறார்.

அதாவது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையிலான அழைப்பு அது. மாறாக தமிழ் மக்கள் ஒரு தேசம் என்ற அடிப்படையில் ஒரு தேசத்தை கட்டி எழுப்புவதற்கான முதலீடு என்ற அடிப்படையில் புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகளோடு இடையூடாடக் கூடிய விதத்தில் பொருத்தமான கட்டமைப்புகள் எத்தனை உண்டு? தாயகத்தை நோக்கி உதவிகளைப் புரியும் பெரும்பாலான புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுக்கு இடையே இடையூடாட்டமும் குறைவு, ஒருங்கிணைந்த செயல்பாடும் குறைவு. இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு கடந்த 13 ஆண்டுகளாக புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் ஜெனிவாவை எவ்வாறு அணுகுகிறது என்பதுதான்.

இவ்வாறு தாயகத்துக்கும் புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்திற்கும் இடையே தாயகத்தை கட்டியெழுப்புவது என்ற ஓர் அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலான வேலைத்திட்டங்கள் ஒரு மையத்திலிருந்து ஒருங்கிணைக்கப்படாத ஒரு வெற்றிடத்தில், இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டது போல முதலாம் தலைமுறை புலம்பெயரிகள் வயதாகி மறையும் பொழுது தாயகத்துக்கும் புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்துக்கும் இடையிலான இடைவெளி மேலும் அதிகரிக்கக் கூடிய ஆபத்து உண்டா?

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த மாவீரர் நாள் அந்த இடைவெளி அப்படி ஒன்றும் பாரதூரமாக இல்லை என்பதை உணர்த்தியது. கடந்த ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் கடந்த மாவீரர் நாள் தாயகத்திலும் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் பரவலாகவும் பெருமெடுப்பிலும் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது மாவீரர் நாள் என்ற உணர்ச்சிப்புள்ளியில் தாயகமும் புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒப்பீட்டளவில் ஒன்று திரண்டன. பொதுவாக ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலங்களில் நினைவு கூர்வதற்கான வெளி ஒப்பீட்டளவில் அதிகமாக இருக்கும். மேலும், அரசாங்கம் தமிழ்த்தரப்பை பேச்சு வார்த்தைக்கு அழைத்திருக்கும் ஒரு பின்னணியில், நல்லெண்ணைச் சூழலை உருவாக்கவேண்டிய ஒரு நிர்பந்தமும் அரசாங்கத்துக்கு உண்டு. எனவே உணர்ச்சிகரமான நினைவு நாளை ரணில் ஒப்பீட்டளவில் தடுக்கவில்லை. அதனால், திட்டமிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகளில் பெருமளவுக்கு மக்கள் திரண்டிருக்கிறார்கள். அது தானாக வந்த கூட்டம். அதை யாரும் வாகனம் விட்டு ஏற்றவில்லை. தண்ணீர் போத்தல், சாப்பாட்டுப் பார்சல், சிற்றுண்டி கொடுத்து அழைத்துக் கொண்டு வரவில்லை. அது தன்னியல்பாகத் திரண்ட ஒரு கூட்டம். அவ்வாறு மக்கள் திரள்வதற்குரிய ஏற்பாடுகளை கட்சிகளும் அரசியல்வாதிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் செய்து கொடுத்தார்கள். அரசியல்வாதிகள் நினைவுநாட்களின் துக்கத்தையும் கண்ணீரையும் வாக்குகளாக ரசாயன மாற்றம் செய்ய வேண்டும் என்ற உள் நோக்கத்தோடு அதைச் செய்யக்கூடும். ஆனாலும் தடைகள் அச்சுறுத்தல்களின் மத்தியில் அவர்கள் முன்வந்து ஒழுங்குபடுத்தும் போது மக்கள் திரள்வார்கள் என்பதே கடந்த 13 ஆண்டு கால அனுபவம் ஆகும்.

13 ஆண்டுகளின் பின்னரும் கண்ணீர் வற்றவில்லை காயங்கள் ஆறவில்லை் கோபமும் தீரவில்லை என்பதைத்தான் நடந்து முடிந்த மாவீரர் நாள் உணர்த்தியிருக்கிறது. ஆனால் காலம் ஒரு மிகப்பெரிய மருத்துவர். அது எல்லாக் காயங்களையும் குணப்படுத்தக்கூடியது. நினைவுகளின் வீரியத்தை மழுங்கச் செய்யக்கூடியது. தமிழ் மக்கள் தமது கூட்டுத் துக்கத்தையும், கூட்டுக் காயங்களையும், கூட்டு மனவடுக்களையும் அரசியல் ஆக்கசக்தியாக மாற்ற வேண்டிய ஒரு காலகட்டத்தில் வாழ்கிறார்கள். நீதிக்கான போராட்டத்தின் பிரதான உந்திவிசையே அதுதான். நினைவுகூர்தல் என்பது நீதிக்கான போராட்டத்தின் பிரிக்கப்படவியலாத ஒருபகுதி.இந்த அடிப்படையில் சிந்தித்தால், காலம் துக்கத்தை ஆற்றுவதற்கு இடையில் துக்கத்தையும் கண்ணீரையும் எப்படி அரசியல் ஆக்கசக்தியாக மாற்றலாம் என்று தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.



கடந்த 13 ஆண்டுகளில் காயமும் துக்கமும் ஆறாமல் இருப்பதற்குப் பிரதான காரணம் ஒடுக்குமுறைதான். தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்பதுதான். மாறாக தமிழ்த் தரப்பின் திட்டமிட்ட செயலூக்கமுள்ள அரசியலின் விளைவாக அல்ல. நடந்து முடிந்த மாவீரர் நாளில் கனகபுரம் துயிலுமில்லத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊடகவியலாளர் ஒருவரிடம் பின்வருமாறு தெரிவித்துள்ளார்...“மக்கள் உணர்வோடு இருக்கிறார்கள் அவர்களுக்கு வழிகாட்ட அரசியல்வாதிகளுக்குத்தான் தெரியவில்லை” என்று. ஒப்பீட்டளவில் அதிக தொகை ஜனங்கள் திரண்ட ஒரு துயிலுமில்லத்தில் வைத்து கூறப்பட்ட வார்த்தைகள் அவை. அதுதான் உண்மை. ஒரு கூட்டுத் துக்கத்தை, கூட்டு அரசியல் ஆக்க சக்தியாக மாற்ற வேண்டிய ஒரு மக்கள் கூட்டம், கடந்த 13 ஆண்டுகளாக என்ன செய்து கொண்டிருக்கிறது?

நன்றி: நிலாந்தன்



JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com




Arasan
ARASAN RAJADURAI
Real Estate & Developments Sale Representative
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
realtorarasan@gmail.com
ARANDTEAM.CA
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA




The ESTATE BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com




WEXFORD
WELLNESS CARE INC.
We treat all car accident injuries!
* Massage Therapy
* Physiotherapy
* Orthopaedic
* Acupuncture
* Chiropractic
* Orthotic
We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)
Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location
Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)

# கொழும்பை தளமாக கொண்டு இயங்கும் சிறீலங்கா கார்டியன் ஆங்கில ஊடகத்துக்கு வி. உருத்திரகுமாரன் வழங்கிய செவ்வி!

25.11.2022



கொழும்பை தளமாக கொண்டு இயங்கும் சிறீலங்கா கார்டியன் ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே இக்கருத்தினை பதிவு செய்துள்ள பிரதமர் வி.உருத்திரகுமாரன், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகள், சிறீலங்காவின் பொருளாதார நெருக்கடி என பல்வேறு விடயங்களுக்கு பதிலளித்துள்ளார்.

செவ்வியின் முழுவடிவம் :

**1) கேள்வி: நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சமீபத்திய செயற்பாடுகள் குறித்து கூறுவீர்களா ?**

பதில்: ஈழத்தமிழர்கள் ஒரு தனித் தேசம் என்ற வகையில் சுயநிர்ணய உரிமையைப் பெற்றிருப்பதுடன் அவர்கள் தமது அரசியல் எதிர்காலத்தை பொதுவாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்க வேண்டும் என்பதே எமது பிரதான அரசியல் வேலைத் திட்டமாகும்.

எங்களின் இந்த நிலைப்பாடு சர்வதேச சமூகத்தில் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. உங்களுக்குத் தெரியும், பல நாடுகளது முன்னாள் ஜனாதிபதிகள், முன்னாள் ஐ.நா துணைச் செயலாளர்கள் மற்றும் முக்கிய சர்வதேச வள அறிஞர்கள் பலர் எங்கள் செயல்பாடுகளில் தொடர்ந்து பங்கேற்கிறார்கள்.

இராணுவ ஒடுக்குமுறைச்சூழல் மற்றும் சுதந்திர அரசு வேண்டுமென்று அமைதியான முறையில் வாதிடுவதைத் தண்டிக்கும் வகையில் சிறீலங்காவில் ஆறாம் திருத்தச் சட்டத்தின் அச்சுறுத்தல் இருந்தபோதிலும், தாயகத் தமிழ் அரசியல் தலைமைகளுக்கு மத்தியிலும் எங்கள் கருத்து எதிரொலிக்கிறது.

2022ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 9ம் திகதி ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு சிறீலங்காவின் பராளுமன்றில் அங்கங்வகிக்கும் தமிழ் எம்பிக்கள் அனுப்பிய கடிதத்தில், ஆறாவது அரசியலமைப்பு திருத்தத்தை நீக்குமாறு கோரியிருப்பதையும் நான் முன்னிலைப்படுத்த விரும்புகின்றேன்.

விரைவில் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற பதிவாளரிடம், தமிழீழத்தில் அந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை ஏற்றுக் கொள்வதாக ஆவணங்களை சமர்ப்பிக்க உள்ளோம். ஆவணங்களை சட்ட முறைப்படியான தமிழீழ அரசு என்ற ஒன்று உள்ளதென்பதுதான் இந்த இணங்குதலின் அடிப்படை ஆகும். உங்களுக்குத் தெரியும், 1972ம் மற்றும் 1978 ஆண்டு சிறீலங்காவின் அரசமைப்புக்கு தமிழர்கள் சம்மதம் தெரிவிக்கவில்லை. இறைமை மீள்வு என்ற சர்வதேச சட்டக் கருத்தாக்கத்தின் அடிப்படையில் எங்கள் வாதம் அமைகின்றது. இது தொடர்பில் ஐ.நாவின் முன்னாள் உயர்ஸ்தானிகர் அல் ஹுசைன் சிறீலங்கா அரசை ரோம் சட்டத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கோரியிருந்தார் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

ஜனநாயக மற்றும் இராஜதந்திர வழிமுறைகள் மூலம் தமிழீழ அரசை உருவாக்க காத்திரமாக செயற்படும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்திற்கு சிறீலங்கா அரசாங்கம் தொடர்ந்து தடைவிதித்துள்ளமை எமது இலக்கை அடைவதில் எமது திறமைக்கு சான்றாக அமைகின்றது என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

**2) கே: உங்கள் தந்தை 1979ம் ஆண்டு முதல் 1983 வரை யாழ்ப்பாண மேயராக பணியாற்றி 2020ல் மறைந்த ஒரு அரசாங்க ஊழியர் என்று கேள்விப்பட்டோம். அவர் உங்களுக்கு என்ன மரபை விட்டுச் சென்றார் ?**

பதில்: எனது தந்தை அரசு ஊழியர் அல்ல. அவர் ஒரு வெற்றிகரமான குற்றவியல் வழக்கறிஞர். சுதந்திரமான தமிழீழத்தில்தான் தமிழர்கள் பாதுகாப்புடனும் கண்ணியத்துடனும் வாழ முடியும் என்று உறுதியாக நம்பினார். அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்திற்கு விசுவாசத்தை வெளிப்படுத்தி சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்து, 1983ல் அவர் வழக்கறிஞர் தொழில் பார்ப்பதை கைவிட்டார். அவர் யாழ்ப்பாண நகர மேயராக இருந்த போது, சிறீலங்காவின் அப்போதைய பிரதமர் ஆர். பிரேமதாசவை வரவேற்க மறுத்தவர் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நேர்மை, உண்மை, கடின உழைப்பு, இலட்சியத்தில் அர்ப்பணிப்பு, மக்களுக்கான அர்ப்பணிப்பு ஆகியவை அவரது அரசியற் பண்பாட்டின் அடையாளங்களாகும்.

**3) கே: விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வாரிசாக நீங்கள் உங்களை அங்கீகரிக்கிறீர்களா?**

ப: தமிழீழத் தேசியத் தலைவரின் வாரிசாக நான் என்னைக் கருதவில்லை. எமது தேசியத் தலைவருக்கு வாரிசாக யாரும் இருக்க முடியாது என நான் நம்புகிறேன். இருப்பினும், போராட்டத்திற்கு காத்திரமாக பங்களிக்க எனக்கு தார்மீக மற்றும் அரசியல் கடமை இருப்பதாக உணர்கிறேன். தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், தமிழர் போராட்டத்தை சர்வதேச தளத்துக்கு உயர்த்தி, தமிழ்த் தேசியப் பிரச்சினையை சர்வதேசப் பிரச்சினையாக்கியுள்ளார். சுதந்திர அரசிற்கான தமிழர் அரசியல் பெரு விருப்பினை நனவாக்குவதில் அவர் ஆற்றிய சாதனையும் பங்களிப்பும் தொலைநோக்கு பார்வையும் இலக்கை நோக்கி முன்னேற எம்மை வழிநடத்தும். எமது போராட்ட முறை மாறினாலும் இலக்கு மாறாது என்று எமது தேசியத் தலைவர் ஒருமுறை கூறினார். எமது இலக்கை அடைய ஜனநாயக மற்றும் இராஜதந்திர வழிகளில் முன்னேறிச் செல்வோம். சிறீலங்கா ஒரு இனவாத, இனநாயக அரசாகவே இருந்து வருவது எமது நிலைப்பாட்டை மேலும் வலுப்படுத்துகிறது.

**4) கே: நீங்கள் அவர் இல்லாத குறையை உணர்கின்றீர்களா?**

ப: அவரது தொலைநோக்கு, அவரது அர்ப்பணிப்பு, அவரது உறுதிப்பாடு, அவரது பேரார்வம் அவரது தாங்குதிறன் எப்போதும் எம்முடன் இருக்கும்.

**5) கே: நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஆலோசனைக் குழுவால் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க ஆவணத்தில் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தை 'ஈழகாந்தி' என்று உறுதிப்படுத்தி உள்ளீர்கள். அகிம்சையில் உங்களுக்கு நம்பிக்கை உள்ளதா?**

பதில்: மக்கள் சக்தியை நான் உறுதியாக நம்புகிறேன். முந்தைய கேள்விக்கான பதிலில் நான் குறிப்பிட்டது போல், நாங்கள் எங்கள் இலக்கை அடைய வன்முறையற்ற பாதையை தேர்ந்தெடுத்தோம். திலீபன் மற்றும் அன்னை பூபதி ஆகியோரின் தியாகப் பாரம்பரியத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அவர்களும் அகிம்சைப் போராட்ட முறையைத்தான் கைக்கொண்டார்கள்.

**6) கே: விடுதலைப் புலிகள் செய்த தவறுகள் என்ன ?**

ப: சர்வதேச சக்திகளின் நலனுடன் சரியாகப் பொருந்தாத தமிழர்களின் குறிக்கோளில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருந்தனர். இது ஒரு புவிசார் அரசியல் முரண்பாடு என்று விவரிக்கப்படலாம். சுதந்திரமும் இறைமையும் கொண்ட நாடு என்ற தமிழர்களின் பெருவிருப்பிற்கும் தற்போதுள்ள சர்வதேச சக்திகளின் நலன்களுக்கும் இடையிலான முரண்பாடு எனலாம். 2009ல் போர் முடிவுக்கு வந்ததற்குக் காரணம், பெரிய பிராந்திய மற்றும் உலக வல்லரசுகள் இந்தியப் பெருங்கடலில் ஒரு புதிய அதிகார மையம் தோன்றுவதை விரும்பவில்லை என்பதே. தெற்காசியாவிலும் இந்தியப் பெருங்கடலிலும் அதிகார அமைப்பிலும் அதிகார சமநிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்த வல்லரசுகள் விரும்பவில்லை. அம்போந்தோட்டை 99 வருட குத்தகை, 2014 இல் நீர்மூழ்கிக் கப்பலின் வருகை மற்றும் கடந்த மாதம் யுவான் வாங் 5 கப்பலின் வருகை போன்றவற்றின் மூலம் சீனாவிற்கும் சிறீலங்காவிற்கும் இடையிலான தற்போதைய கூட்டு நடவடிக்கை நிரூபணமாகியுள்ளதனைக் கருத்தில் கொண்டு அந்த நிலைமை எதிர்வரும் நாட்களில் நிச்சயமாக மாறும்.

**7) கே: உங்களின் ஆலோசனைக் குழுவின் அதே ஆரம்ப அறிக்கை சிறீலங்காவில் முஸ்லிம்களின் அவலநிலையைப் பற்றி வருத்தம் தெரிவித்தது மற்றும் மதச்சார்பற்ற அரசை ஆதரித்தது. ஆனால் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உயர்மட்ட குழுவில் பௌத்த அல்லது இஸ்லாமிய பிரதிநிதிகள் யாரும் இடம்பெறக் காணவில்லை. ஏன்?**

ப: சிங்கள மனித உரிமை செயற்பாட்டாளரும், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உறவினராக அமைந்தவருமான வைத்தியக் கலாநிதி பிரையன் செனவிரத்ன, நாடுகடந்த தமிழீழ அரசாங்க மேலவையில் முக்கிய உறுப்பினராக இருக்கிறார். 2016 ஆம் ஆண்டில், தமிழர்களின் மனித உரிமைகளுக்கு அவர் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரித்து அவருக்கு 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கினோம்.

100,000 இற்கும் மேற்பட்ட மக்களின் பங்கேற்புடன் பிரகடனப்படுத்தப்பட்ட எமது சுதந்திர சாசனத்தில், சிறீலங்கா அரசியலமைப்பில் உள்ளதைப் போன்று வார்த்தைகளுடன் விளையாடுவதை விடுத்து, சுதந்திர சாசனத்தின் 14 ஆவது சரத்தில் 'தமிழும் சிங்களமும் ஆங்கிலமும் தமிழீழத்தின் அரச கரும மொழிகளாக இருக்கும்' என்று அறிவித்துள்ளோம்

சுதந்திர சாசனத்தில், முஸ்லிம்களின் தனித்துவமான அடையாளத்தை நாங்கள் வெளிப்படையாக அங்கீகரித்துள்ளோம். மேலும், பௌத்த சமயத்துக்கு முதன்மை கொடுக்கும் சிறீலங்காவைப் போல் அல்லாமல், தமிழ் ஈழம் ஒரு மதச்சார்பற்ற நாடாக இருக்கும் என்றும், தமிழ் ஈழத்தில் எந்த மதத்திற்கும் முதன்மையான இடம் வழங்கப்பட மாட்டாது என்றும் நமது சுதந்திர சாசனத்தின் 7வது பிரிவு கூறுகிறது. சுதந்திர சாசனத்தை பிரகடனப்படுத்தும் மாநாட்டில் சிறீலங்கா முஸ்லிம் கல்விமான் ஒருவரும் கலந்துகொண்டார் என்பதையும் நான் சொல்லியாக வேண்டும். எமது தமிழீழ பொது வாக்கெடுப்பு முன்னெடுப்பு தொடர்பாக முஸ்லிம் சமூகத்தினருடன் கருத்தரங்கு நடத்துவது குறித்தும் ஆலோசித்து வருகிறோம்.

**8) கே: சிறீலங்கா தமிழர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க தனித் தமிழர் தாயகத்தை உருவாக்குவதே ஒரே வழி என்று நீங்கள் உறுதியாக நம்புகிறீர்கள். உங்களின் இந்த நிலைப்பாடு சிறீலங்காவின் கடந்த கால பதிவுகளை மதிப்பிடுவதன் புரிந்து கொள்ள முடியுமா ? வடக்கு கிழக்கில் உள்ள சாதாரண ஆண்கள் மற்றும் பெண்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உண்மையான நோக்கம் உங்களுக்கு இல்லை. ஆனால் யதார்த்தமற்ற இலக்கில் பின்தங்கியுள்ளீர்கள்.. நாங்கள் சொல்வது தவறாக இருந்தால் திருத்துங்கள்.**

ப: முதலில் எமது மக்கள் 'சிறீலங்காத் தமிழர்கள்' என்று அடையாளப்படுத்தப்படுவதை நான் திட்டவட்டமாக மறுக்க விரும்புகிறேன். நாங்கள் எங்களை ஈழத்தமிழர்கள் என்றும், தமிழீழ மக்கள் என்றும் கருதுகிறோம். சிறீலங்கா என்பது திட்டமிட்ட வகையில் தமிழ் மக்களைக் கட்டமைப்பு ரீதியாக இனப்படுகொலை செய்வதில் ஈடுபட்டுள்ள ஒரு சிங்கள, பௌத்த, அடிப்படைவாத அரசாகும், சிறீலங்கா அரசின் இனப்படுகொலைக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கான ஒரே தீர்வு சுதந்திர

இறையாண்மையுள்ள தமிழீழ அரசே ஆகும்.

அண்மையில், முன்னாள் ஐ.நா மனித உரிமை உயர்ஸ் தானிகர் மிச்செல் பச்லெட், செப்டம்பர் 6, 2022ல் வெளியிடப் பட்ட தனது அறிக்கையில் 'பெரும்பான்மைவாதத்தை நோக்கிய போக்கு' பற்றியும், 'முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ இராணுவத் தின் ஆதரவோடும் பௌத்த பிக்குகளின் ஆதரவோடும், சிங்கள பௌத்த பெரும்பான்மை சித்தாந்தத்தை தீவிரமாக முன் னெடுத்தது' பற்றியும் கவலை தெரிவித்தார்

2020 மே 18 அன்று நடைபெற்ற ஐந்தாவது முள்ளிவாய்க்கால் நினைவுச் சொற்பொழிவில் கிழக்குத் திமோர் ஜனாதிபதியும், நோபல் பரிசு பெற்றவருமான டாக்டர் ஜோஸ் ரமோஸ் ஹோர்டா, 'தமிழர்கள் ஏன் தனிநாடு கோருகிறார்கள் என்பதை ஆளும் சிறீலங்கா அரசு தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டும், என்ன தவறு நடந்தது என்பதையும் கண்டறிய வேண்டும்.' என கூறினார்.

சிறீலங்காவின் நீதித்துறையால் சுனாமி பொதுக்கட்டமைப்பு உடைக்கப்பட்டதும், மாகாணசபையின் அப்பட்டமான தோல் வியும், ஒரு அரசியல் தீர்மானம் எட்டப்படும் வரை, பொருளா தார வளர்ச்சியை ஏற்படுத்த முடியாது என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

தமிழீழம் என்பது யதார்த்தத்திற்கு மாறான இலக்கு என்று நீங்கள் சொல்வதையும் மறுக்கிறேன். இனவாத சிங்கள மேலாதிக்கத்தினால் நிரந்தரமாக ஆளப்படும் சிறீலங்காவை ஒரு இனவாத அரசாகத் தொடர்வது யதார்த்தமற்ற இலக்காகும். தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளானார்கள் என்ற உண் மையை சர்வதேச சமூகத்தினுள் அதிகரித்து வரும் அதற்கான அங்கீகாரம் நமது சுதந்திரத்தை அடைவதற்கான எமது செயல் முறையை துரிதப்படுத்துகிறது. சட்டமும் தார்மீகக் கோட் பாடுகளும் 'மீண்டும் நிகழாது' என்பதை உறுதி செய்வதற்காக ஈடு செய் நீதியின் வடிவமாக, ஒரு சுதந்திர அரசை உருவாக் குவதே பொருத்தமானதாக தோன்றுகிறது.

இலங்கைத் தீவு இந்தியப் பெருங்கடலில் கேந்திர முக்கியத் துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருப்பதாலும், இலங்கைத் தீவின் கடலோரத்தில் மூன்றில் இரண்டு பங்கு தமிழர்கள்தான் வாழ்கிறார்கள் என்பதையும், பரிணமித்து வரும் அதிகார இயக்கவியலையும் கருத்தில் கொள்ள வேண்டும். உங்களுக்கு தெரியும், 1990 முதல், 30 க்கும் மேற்பட்ட நாடுகள் உருவாகி யுள்ளன. தமிழ் மக்களின் அரசியல் பெருவிருப்பினை அடை யும் திசையில் வரலாறு நகர்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

**9) கே: நீங்கள் சிங்களவர்களை வெறுக்கிறீர்களா? நீங்கள் ஒரு சிங்கள பௌத்தருடன் கடைசியாக எப்போது தொடர்பு கொண் டீர்கள்?**

பதில்: நானோ அல்லது ஏனைய தமிழ் தலைவர்களோ தமிழ் மக்களோ சிங்கள மக்களை வெறுக்கவில்லை. எமது போராட் டம் பேரினவாத இனப்படுகொலை சிறீலங்கா அரசுக்கு எதி ரானது. அமெரிக்காவில் உள்ள பல சிங்களவர்களுக்கு நான் சட்டப் பிரதிநிதித்துவராக வாதாடுகிறேன். என்னிடம் சட்ட பிரதிநிதித்துவம் கோரும் சிங்களவர்கள் தங்கள் குடும்ப விடயங்களுக்காக எனது ஆலோசனையை நாடுகிறவர்கள் அவர்களில் சிலர் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது, முழு நாட்டினதும் ஆட்சியை திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு வழங்கியிருக்க வேண்டும் என்று கூறி யுள்ளனர். அவர்களின் கருத்துப்படி அவர் நேர்மையுடனும் ஒழுக்கத்துடனும் நாட்டை ஆட்சி செய்திருப்பார். நியூயோர்க் நகரிலுள்ள புலம்பெயர்ந்த சிங்கள மற்றும் முஸ்லிம் தொழி லாள வர்க்கத்தினரிடையே எனது நற்பெயரை நீங்கள் சரிபார்த்துக் கொள்ளலாம்.

**10) கே: சிறீலங்காவின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சி குறித்து உங்கள் கணிப்பு என்ன?**

பதில்: தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியக் குற்றங்களுக்கும், தமிழர்களை இராணுவம் தொடர்ந்து அடி பணியச் செய்வதற்கும் ஆன இராணுவ செலவீனங்களே சிறீலங்காவில் தற்போதைய பொருளாதார பேரழிவிற்கு பெரிதும் பங்களிக்கிறது. ஐநா உயர்ஸ்தானிகர், செப்டம்பர் 6, 2022 தேதியிட்ட தனது அறிக்கையில், 'பாதுகாப்பு அமைச் சகத்திற்கு 354 பில்லியன் சிறீலங்கா ரூபாய்கள் (1.86 பில்லியன் அமெரிக்க டாலர்கள்) ஒதுக்கப்பட்டுள்ளது, இது 2022 ஆம் ஆண்டில் மொத்த அரசாங்க செலவினத்தில் 15வீதம் ஆகும். - எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றுடன் இணைந்து, பல தசாப்தங்களாக சட்டத் தின் ஆட்சி மதிக்கப்பெறாத நிலையானது ஊழலைப் புரை யோடச் செய்து சிறீலங்காப் பொருளியலை அழித்து விட்டது. சமீபகாலங்களில் இடம்பெற்ற இன்னுமொரு காரணி, பயனற்ற திட்டங்களுக்கு அதிக வட்டிக் கடன்கள் சீனாவிடம் இருந்து பெற்றவையாகும். மற்றும் கோவிட் தொற்றுநோய், உக்ரைன் போர் ஆகியவை ஏற்கனவே சீர்குலைத்த பொருளாதாரத்தை முற்றாக நசுக்கி விட்டன.

**11) கே: தற்போதைய சவாலை சமாளிக்க சிறீலங்கா மக்களுக்கு நீங்கள் எவ்வாறு ஆதரவளிக்க முடியும்?**

ப: தற்போதைய பேரழிவை தமிழர்கள் எவ்வாறு ஆதரித்து வெற்றிகொள்வார்கள் என்று இந்தக் கேள்வியை நான் எடுத்துக் கொள்கிறேன். நாம் ஏற்கனவே கூறியது போல் ஈழத் தமிழர் களின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்க பொதுவாக்கெடுப்பு நடத்தி தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண் பதுதான் முதல் தேவை. எங்களுடைய தற்போதைய வாக் கெடுப்பு முன்னெடுப்பு சிறீலங்கா அரசின் சம்மதத்தில் தங்கியி ருக்கவில்லை என்பதை நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். கொசோவோவில் சுதந்திரத்துக்கான வாக்கெடுப்பு செர்பியாவின் ஒப்புதல் இல்லாமல் நடத்தப்பட்டது.

ஈழத்தமிழர்களின் கோரிக்கைகளுக்கு அரசியல் தீர்வில்லாமல் சிறீலங்கா பொருளாதார ரீதியில் நிலைபெறும் நாடாக மாறாது. அத்தகைய தீர்வு அனைவருக்கும் அமைதியையும் செழிப் பையும் தரும். இது புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களையும் சிறீ லங்காவிலும் முதலீடு செய்யத் தூண்டும்.

**12) கே: இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதில் அங்கம் வகிக்குமாறு புலம்பெயர் தமிழர்களுக்கு சிறீலங்கா ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். உங்கள் கால்களை தரையில் ஊன்றி ஏதாவது செய்ய இது ஒரு சிறந்த வாய்ப்பு என்று நாங்கள் நம்புகிறோம். நீங்கள் சிறீலங்கா அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள விரும்புகிறீர்களா ?**

ப: முந்தைய கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட பதில்கள் இந்தக் கேள்விக்கும் பொருத்தமானவை என்று நினைக்கிறேன். நான் 1982ம் ஆண்டில் சிறீலங்காவை விட்டு வெளியேறிய போது, எனது ஓராண்டு முதுகலைப் பட்டப்படிப்பை முடித்துவிட்டு சிறீ லங்காவிற்குத் திரும்புவதே எனது நோக்கமாக இருந்தது. 1983 இனப்படுகொலைக்குப் பின்னர், எனது தகமைச் சான்றிதழ் களின் அடிப்படையில், வெளியில் இருப்பதன் மூலம் எமது மக்களின் விடுதலைக்கு காத்திரமான பங்களிக்க முடியும் என உணர்ந்தேன்.

தமிழர்களுக்கு நீதி கிடைக்கவோ அல்லது அவர்களின் அரசியல் பெரு விருப்பினை முழுமையாக வெளிப்படுத்தவோ இடமில்லை என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு, நான் தீவுக்கு வெளியே தொடர்ந்து இருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. நான் திரும்பி வந்து 'தரையில் காலூன்றுவேன்' என உறுதியாக நம்புகிறேன். அது சுதந்திரத் தமிழீழ மண்ணாக இருக்கும்.

## 25.12.2005 நினைவுநாள்



## மாமனிதர் ஜேசப் பரராசசிங்கம்

மாமனிதர் ஜேசப் பரராசசிங்கம் இலங்கை, மட்டக்களப்பு பகுதியை சார்ந்த தமிழ் தலைவர்களில் ஒருவரான இவர் டிசம்பர் 25 2005 அன்று படுகொலை செய்யப்பட்டார். மட்டக்களப்பு தேவாலயத்தில் நடந்த நத்தார் நள்ளிரவு திருப்பலிப் பூசையின் போது அரச ஆதரவுபெற்ற துப்பாக்கிதாரிகளால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார். மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்திரிகையாளர் அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதில் முன்னின்றுழைத்தவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கு முன்னின்று உழைத்த தலைவர்களுள் ஒருவர். தமிழ்த் தேசிய விடுதலைக்காக அறவழியில் போராடிய அன்னாருக்கு தமிழீழத் தேசியத் தலைவரால் மாமனிதர் விருது வழங்கப்பட்டது.









# தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் தூர நோக்குக் கொண்டவர்!

வி. ருத்திரகுமாரன்




26.11.2022

1958 ஆம் ஆண்டு தமிழர்கள் பெருமளவில் கொல்லப்பட்ட போது தலைவருக்கு நான்கு வயது. அப்பருவத்திலே தலைவர் தனது தந்தையிடம் ஏன் தமிழர்கள் திருப்பி அடிக்கவில்லை எனகேட்டவர்.

பல நாடுகளில் வாழும் தமிழர்கள் யாவரும் தமக்கு அங்கீகாரம் கிடைப்பதற்கும் தாம் தலைநிமிர்ந்து நிற்பதற்கும் தலைவரே காரணம் என்ற கருத்தைக் கொண்டவர்கள்."- வி. ருத்திர குமாரன்.

தலைவர் என்று உலகத்தமிழர்களால் அன்போடும், மரியாதை யோடும் அழைக்கப்படும் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் 68வது பிறந்தநாளையொட்டிய செய்தியை வெளியிடுவதில் நான் பெருமிதமும், மட்டற்ற மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

தலைவர் ஈழத்தமிழர்களின் நெஞ்சங்களில் மட்டுமல்ல, உலகத்தமிழர்களின் நெஞ்சங்களிலும் நிரந்தர இடத்தைப் பெற்றவர். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறீலங்கா அரசாங் கத்திற்கும் பேச்சுவார்த்தை நடைபெற்ற காலத்தில் பல நாடு களுக்கு பேச்சுவார்த்தை தொடர்பாக பயணம் செய்த போது பல நாடுகளில் வாழும் தமிழர்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. மலேசியத் தமிழர்கள் என்றாலும் சரி, சிங்கப்பூர் தமிழர்கள் என்றாலும் சரி, தென்னாபிரிக்க தமிழர்கள் என்றாலும் சரி யாவரும் தமக்கு அங்கீகாரம் கிடைப்பதற்கும் தாம் தலை நிமிர்ந்து நிற்பதற்கும் தலைவரே காரணம் என்ற கருத்தைக் கொண்டவர்கள்.

பேச்சுவார்த்தைக் காலத்தில் தலைவரோடு பழகும் வாய்ப்புக் கிடைத்தது. தலைவரது விருந்தோம்பலும் தோழமை உணர் வும் அவரிடத்தில் முன்னின்றன. நோர்வே ராஜதந்திரிக ளுடனான சந்திப்பில் தலைவரின் மொழிபெயர்ப்பாளராக செயற்பட்டேன். நோர்வே வெளிவிவகார அமைச்சருடன் நடைபெற்ற மதிய உணவின்போது நோர்வே நாட்டின் அரச பரம்பரையைப் பற்றி உரையாடினார். அவ்வுரையாடல், உலக வரலாறுகளில் தலைவருக்கு இருந்த புலமையைப் புலப்படுத் தியது.

தலைவர் தூர நோக்குக் கொண்டவர். விடுதலைப் போராட் டத்திற்கும், சுதந்திர தமிழீழத்திற்கும் கடலின் முக்கியத் துவத்தை தலைவர் நன்கு அறிந்திருந்தார். சிறீலங்காத் தீவின் வட - கிழக்கு நிலம் மட்டுமல்ல அந்நிலத்தை அண்டிய கடலும் தமிழர்களுக்கு உரித்தானது என்ற கருத்தையும் அதற்கான செயலையும் முதலில் எடுத்துரைத்து செயற்பட்டவர். தலைவர் தாயகத்தலைவர்கள் தங்களுடைய அரசியல் நடவடிக்கைகளில் தரைக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் போன்று கடலுக்கும் கொடுக்க வேண்டும். இன்றைய பூகோள அரசியலிலும், வர்த்தகத்திலும் கடலே முக்கியத்துவம் பெறுகின்றது. வட - கிழக்கை அண்டிய கடல் ஈழத்தமிழர்களின் இறைமைக்குட்பட்டது என்ற கருத்தை நாம் வலியுறுத்தும் போதும் அது தொடர்பான போராட டங்களில் நாம் ஈடுபடும்போதுதான் இந்துமா சமுத்திரம் தொடர் பான பூகோள அரசியலில் நாம் பார்வையாளர் நிலையிலிருந்து பங்காளர்களாக மாறலாம்.



தலைவர் எந்த அரசியல் நகர்விற்கும் பலம் முக்கியமானது என்பதில் உறுதியுடன் இருந்தார். தமிழீழ விடுதலைப்புலிகள் பலமாக இருந்தபடியால்தான் சிங்களம் மட்டுமல்ல, உலகமே கிளிநொச்சிக்குப் படையெடுத்ததை நாம் காணக்கூடியதாக இருந்தது. பேச்சுவார்த்தைக் காலத்தில் கிளிநொச்சி தென் னாசியாவின் தலைநகராக மிளிர்ந்தது.

தென்னாசியாவில் அரசியல் போராட்டங்கள் அகிம்சை வழியி லேயே மேற்கொள்ளப்பட்டன. இந்தியா என்றாலும் சரி, நேபால் என்றாலும் சரி, மாலைதீவு என்றாலும் சரி போராட்டங்கள் அகிம்சை வடிவிலே மேற்கொள்ளப்பட்டன. (சிறீலங்கா போராட டம் இன்றி சுதுந்திரம் பெற்றது).

இந்தியாவில் மகாத்மாகாந்தி அகிம்சை வடிவில் போராட்டத்தை மேற்கொண்ட போது நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தார். நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் ஆயுதப் போராட்டத்திற்கு தமிழகம் முக்கியமான தொரு ஆதரவுத்தளமாக இருந்தது. வைத்தியர் செண்பக இராமன் சுபாஷ் சந்திரபோஸின் தளபதியாகச் செயல்பட்டார். தலைவர் சுபாஷ் சந்திரபோஸை தன்னுடைய முன்மாதிரியாக ஏற்றுக்கொண்டார்.

1958 ஆம் ஆண்டு தமிழர்கள் பெருமளவில் கொல்லப்பட்ட போது தலைவருக்கு நான்கு வயது. அப்பருவத்திலே தலைவர் தனது தந்தையிடம் ஏன் தமிழர்கள் திருப்பி அடிக்கவில்லை எனக் கேட்டவர். தலைவருடைய அந்தக் கேள்வி தமிழர்களின் புதிய வரலாற்றுக்கு ஆரம்பப்புள்ளியாக அமைந்தது.

வரலாற்றின் நிர்ப்பந்தத்தின் காரணமாக தமிழர் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தனர். தலைவர் அந்தப் போராட் டத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்தார். உலக நீதிமன்றம், மேற்கு சஹாரா வழக்கில் அபாயங்கள், தியாகங்கள் நிறைந்த விடுதலைப் போராட்டம் உண்மையானதும், உன்னதமானது மென கூறிய வாசகங்களை இத்தருணத்தில் குறிப்பிடுவது பொருத்தமெனக் கருதுகின்றேன். Dr.Sunyatsen இன் சீன விடுதலைப்போராட்டம், ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க விடு தலைப் போராட்டங்களின் அடிப்படையில் தலைவர் ஆரம்பத் தில் கெரில்லா போராட்ட முறையை தேர்ந்தெடுத்தார். இந்திய அமைதிப் படையினர் திரும்பிப் போன பின்னர் கெரில்லா போர்முறை மரபுவழி போர் வடிவமாக பரிணாமம் பெற்றது.

2009ம் ஆண்டு தமிழினப் படுகொலையுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களை மௌனித்தார்கள். நாம் ஒரு சிறு இனம் என்றாலும் பல ஆயிரம் வருடங்களுக்கு மேலாகப் பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு இனம். நாம் இன அழிப்புக்குள் ளாக்கப்பட்ட இனம் என்றாலும் இன்று மீண்டும் எழுந்து நின்று இன அழிப்பிற்கான நீதிக்காக புதிய களங்களை திறந்து போராடுகின்ற ஒரு இனம். நாம் பாதிப்பிற்குள்ளான இனம் என் றாலும், பரிதாபத்திற்கு உள்ளான இனம் அல்ல. பலம் பலவடி வங்களைக் கொண்டது. இராணுவம் மட்டுமே பலம் என் பதல்ல. நாம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மக்கள். நாங்கள் இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கின்றோம். அந்த கேந்திர முக்கியத்துவத்தை மூலதனமாகக் கொண்டு எமது போராட்டத்தை தொடருவோம்.

வி. ருத்திரகுமாரன்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

# அங்கீகரிக்கப்படாத தேசத்தின் அங்கீகரிக்கப்பட்ட இராஜதந்திரி தேசத்தின் குரல் பாலா அண்ணா!

“பாலா அண்ணா” என ஈழத் தமிழ் மக்களினால் அன்போடும் பாசத்தோடும் அழைக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகரும், தத்துவா சிரியருமான அன்ரன் பால சிங்கம் அவர்கள் தமிழ் மக்களிடம் இருந்தும், உலகத்தில் இருந் தும் பிரிந்து சென்றுவிட்டார். தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்திற்குத் தன்னை அர்ப்பணித்த ஒரு மேதை இன்று உலகில் இல்லை.

‘தேசத்தின் குரல்’ என மகுடம் சூட்டப்பட்டுள்ள அரசியல் ஆலோ சகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பல்வேறு வடிவில் உல கிற்கு அறியப்பட்டவர். ஒரு ஊடகவியலாளராக, ஒரு படைப் பாளியாக, ஒரு தத்துவ ஆசிரியராக, ஒரு இராஜதந்திரியாக, ஒரு விடுதலை அமைப்பின் ஆலோசகராக, இவையாவற்றிற்கும் மேம்பட்டதாக ஒரு பண்பட்ட மனிதராக அவர் அடையாளம் காணப்பட்டவர். இதுவே அவரை ‘தேசத்தின் குரல்’ என்ற உயர் நிலைக்கு உயர்த்தியது.

‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கம் அவர்களின் அறிவு, ஆற்றல், ஆளுமை என் பவை ஒரு புறம் எனின், அவரின் தோழமை என்னும் இயல்பு அவரின் பண்பட்ட மனித தத்துவத் தின் உயர்ந்த வெளிப்பாடு. அவரால் அறியப்பட்டவர்கள் அவருக்கு பழக்கப்பட்டவர்கள் அவரின் தோழமையை அறிந் திருக்க முடியும், அனுபவித்தும் இருக்க முடியும்.

அவரால் அறியப்பட்ட ஒரு போராளியில் இருந்து, ஏன் ஒரு பொதுமகனில் இருந்து இராஜதந்திரிகள் வரையில் அவர் தோழமை கொண்டவராகவே இருந்துள்ளார். அவரின் இக் குண இயல்பு அவர் மீதான பற்றுதலையும், பாசத்தையும் ஒருபுறம் வளர்த்ததெனில் இன்னொருபுறம் அவர் மீதான மதிப்பையும், மரியாதையையும் உயர்த்தியது எனில் மிகையில்லை.

அவரது அறிவு, ஆற்றல், ஆளுமை என்பன பல தடவை வெளிப் படுத்தப்பட்ட துண்டு. இதேசமயம் அவர் தன்னைச் சார்ந்தவர் களையும் சரி, பிறரையும் சரி தம்மைச் சந்தித்த அனைவரை யும் அவர் தனது ஆளுமைக்குள் கொண்டு வரும் ஆற்றல் மிக்கவராகவே இருந்தார். இதனால் அவருடன் பழகியவர்கள், தொடர்பு கொண்டவர்கள் எப்பொழுதுமே அவருடன் நெருங் கியே இருந்தனர்.

அது மட்டுமல்ல, அவர் ஒரு பண்பட்ட மனிதர், பெருந்தகை, தன்னுடன் இருந்தவர்கள், பழகியவர்கள், அவற்றிற்கும் மேலாகத் தமிழ் மக்களின் துன்பதுயரங்களை விளங்கிக் கொண்டவர். அதற்கென தன்னால் உதவுவதற்கென இயன்ற வரை செய்வதற்கு முற்பட்டவர். ஆயினும் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் அதனைச் செய்வதற்குத் தயாராக இருக்க வில்லை.

தன்னுடைய உழைப்பு தேசத்திற்கானது என்ற பரந்த சிந்தனை கொண்டவர். இதனால் தனது உழைப்பிற்கான பயனை எதிர் பார்க்காதவர், கோராதவர், இத்தகையவரின் முப்பது வருடகால அரசியல் வாழ்வு குறித்து, மதிப்பீடுகள் தொடங்கப்பட்டு விட்டன. ஆயினும் தற்பொழுது அதுகுறித்த முடிவிற்கு எவரும் வந்து விடுதல் முடியாது.

‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கம் அவர்களின் இழப் பானது அவர் சார்ந்திருந்த அமைப்பிற்கானது அவரைச் சார்ந் திருந்தவர்களுக்கானது அவர்களினால் அது இட்டு நிரப்ப முடி யாதது ஈடுசெய்ய முடியாதது என்ற வாதம் பலரால் முன்வைக் கப்படுகின்றது.

ஆனால், உண்மையில் ‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கம் அவர்களின் இழப்பானது தமிழர் தேசத்திற்கானது. தமிழ் மக்களுக்கானது. தனிநபர்களுக்கானதோ, அன்றி ஒரு அமைப் பிற்கானதோ மட்டு மானதல்ல. ஆகையினால் இது தமிழர் அனைவருக்கும் ஆனது.

‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமிழர் தேசத்திற்காற்றிய பணி இரண்டு வகைப்பட்டது.

1. தமிழ் தேசத்தின், தமிழ் மக்களின் உரிமைக்கான கோரிக் கையை, நியாயப்பாட்டை தத்துவார்த்த அடிப்படையிலும், கொள்கை அடிப்படையிலும் தெளிவுபட சர்வதேச மட்டத்தில் நிலை நிறுத்தினார்.

2. தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை வழி நடத்திய அதன் தலைமைத்து வத்தை, அவ்அமைப்பைப் பலப்படுத்தினார், வளப்படுத்தினார்.

இவை இரண்டும், ஒன்றில் ஒன்று தங்கியிருந்தன. அதாவது தமிழர் தேசம் என்பதும் இதன் இருப்பும் விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தினதும், அமைப்பினதும் இருப்பிலும், வளர்ச சியிலுமே தங்கியிருந்தது என்பது ‘தேசத்தின் குரல்’ அன்ரன் பால சிங்கம் அவர்களினால் தெளிவாகவே உறுதி செய்யப் பட்டிருந்தது, நம்பப்பட்டது.

இதேசமயம் பௌத்த-சிங்களப் பேரின வாதம் இதிகாசங்களின் கற்பனை வாதத்திற்குள் மூழ்கிப்போய்க் கிடக்கின்றது என் பதையும் அது அதில் இருந்து விடுபட்டு இன்றைய அரசியல் யதார்த்தத்திற்குள் வரப்போவதில்லை என்பதையும் அவர் நன்கு விளங்கிக் கொண்டும் இருந்தார். அதாவது சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினை விடயத்தில் இறங்கி வந்து தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கப் போவதோ அன்றிப் பகிர்ந்தளிக்கப் போவதோ இல்லை என் பதை அவர் தெளிவாகவே உணர்த்தியிருந்தார்.

இந்நிலையில், அவர் ஆரம்பம் முதலே இலங்கையில் தமிழ் மக்களின் அடையாளத்தைத் தெளிவாகவே தத்துவார்த்த ரீதியில் வரையறை செய்யவும் அடையாளம் செய்யவும் முற் பட்டார். தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் திம்புப் பேச்சுவார்த்தையை நெறிப்படுத்தும் சந்தர்ப்பத்தை அவருக்கு வழங்கியபோது அதனை அவர் இலங்கையில் தமிழரின் அடையாளத்தை, இருப்பை உறுதிப்படுத்துவதற்கான தளமாக ஆக்கிக் கொண்டார்.

தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பன தமிழ் மக் களின் இனப்பிரச்சினைத் தீர்விற்கான அடித்தளமாக அன்று முதல் கொள்ளப்பட்டது. இன்று அது கேள்விக்கிட மற்றதொன் றாக, நியாயப்பாடுமிக்கதாக சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதொன்றாக நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

தேசத்தின் குரல்’ அன்ரன்பாலசிங்கம் அவர்கள் அடையாளப் படுத்திய இவ்விடயத்தை எவரும் புறம்தள்ளிவிட முடியாத தொன்றாக இருந்தது என்பதை நோர்வேயின் சிறப்புத்தூதுவ ரான ஹான்சன்பௌயர் அவர்கள் கூடச் சுட்டிக்காட்டியிருந்தார். “எமக்கு நல்ல நண்பனையும், தமிழ் மக்களின் உரிமைக்காக வாதாடிய யாராலும் தோற்கடிக்க முடியாத மிகப்பெரும் சக்தி யையும் இழந்துவிட்டோம்” என அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதாவது, தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தின் நியாயப்பாட்டை, அதற்கான அடிப்படையினைச் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளும் வகையில் தெளிவான நியாயப் பாட்டை வெளிப்படுத்தியவர். இலங்கையில் இரு அரசுகள் உருவாவது குறித்த சர்வதேச அரசுகளின் அபிப்பிராயம் என்பது பூகோள அரசியல் – இராணுவ நலன் கள் சார்ந்தவை.

ஆனால் இலங்கையில் தமிழ் மக்களின் உரிமை என்பது ஒரு தேசிய இனத்தின் அடிப்படை உரிமை சார்ந்தவை. இவ்விட யத்தில் சர்வதேசத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொடுத் தமைக்கு ‘தேசத்தின் குரல்’ பாலசிங்கம் அவர்களின் பங்கு, பணி மகத்தானது.

தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டமும் – அதன் தலைமைத்துவமும் கடந்த காலத்தில் அரசியல், இராஜதந்திர, இராணுவரீதியில் பெரும் சவால்களையும் நெருக்கடியும் சந்தித் ததுண்டு. ஒரு புறத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மைய சக்தியான விடுதலைப்புலிகளையும் அதன் தலைமை யையும் ஓரம் கட்டிவிடவும் அதனை அழித்துவிடவும் பெரும் சக்திகள் கூட பெரும் முயற்சிகள் மேற்கொண்டதுண்டு.

இவற்றைத் தேசியத் தலைமை அரசியல் – இராணுவ– இராஜ தந்திர வழி முறைகளில் எதிர் கொண்ட போது அரசியல் மற்றும் இராஜதந்திர வழிவகைகளை வகுத்துக் கொள்வதற்கான வாய்ப்பும் அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றிருந்த ‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அவ்வேளைகளில் ஆற்றிய பெரும் பணியானது தேசிய விடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்திய தோடு, விடுதலை அமைப்பின் வெற்றிகரமான நகர்வுகளுக்கும் வழி ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

இதேவேளை இன்று தமிழ் மக்களின் உரிமைக்கான போராட் டமானது, இனப்பிரச்சினை என்ற வடிவத்தில் சர்வதேசத்தின் கவனத்தைக் கவர்ந்துள்ள நிலையில், தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தைத் தெளிவான தடத்தில் சர்வ தேசத்தின் முன் கொண்டு செல்வதற்கான இராஜதந்திர வழி முறையை அவர் ஏற்படுத்திக் கொடுத்துச் சென்றுள்ளார் எனக் கூறின் அது மிகையாகமாட்டாது.

இராஜதந்திர நகர்வுகளும் அரசியல் அணுகுமுறைகளும் கள யதார்த்தம், சர்வதேச சூழ்நிலை என்பனவற்றிற்குஏற்ப மாற்றம் காண்பவை, செய்யப்படவேண்டியவை என்பது பொதுவான தொன்றே. ஆயினும், இராஜதந்திர நகர்வுகள், சூழ்நிலைக் கேற்ப மாற்றம் காணப்பட வேண்டியவை ஆயினும் போராட்டத் தளத்தின் அடிப்படையில், மாற்றம் ஏற்படாதவாறு உறுதியாக அதனை தத்துவார்த்தை அடிப்படையில் இட்டுக்கொடுத்ததில் ‘தேசத்தின் குரல்’ பாலசிங்கம் அவர்களின் பாத்திரம் மிகவும் முக்கியமானதாகும்.

இதேவேளை ‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கம் அவர் களின் அரசியல், இராஜதந்திரம் சார்புலமை, சமாதானத்தின் பால் கொண்டிருந்த பற்றுறுதி பேச்சுவார்த்தை மேசைகளில் அவர் காட்டிய ஆர்வம் என்பன அவரை ஒரு அங்கீகாரம் பெறா ததொரு நாட்டின் அங்கீகாரம் பெற்றதொரு இராஜதந் திரியாகவே ஆக்கியிருந்தது.

குறிப்பாக நோர்வே உள்ளிட்ட பல ஐரோப்பிய நாட்டுப் பிரதி நிதிகள் இக்கௌரவத்தை அவருக்கு வழங்கியிருந்தனர். அவருடைய இராஜதந்திர நகர்வுகள், வெற்றி கொள்ளப்பட முடியாத விவாதத்திறன், எவ்வேளையிலும் உண்மை பேசும் உயர் பண்பு, அவற்றிக்கும் மேலாக அவரின் தோழமைப் பாங்கு என்பன அதற்கான அங்கீகாரத்தை அவருக்குப் பெற்றுக் கொடுத்திருந்த தெனலாம். அவரை இராஜீகரீதியில் சந்தித்த பலர் பின்னர் நட்புறவுடன் பழக்கத்தை வளர்த்துக்கொண்டனர்.



‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எம் தேசத் திற்கு விட்டுச் சென்றவற்றில் மற்றுமொரு சொத்து தமிழரின் விடுதலைப்போராட்டத்தின் வரலாற்றுப் பதிவான “போரும் சமாதானமும்” என்னும் நூலாகும். விடுதலைப்புலிகள் அமைப் பின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் கூறும் இந்நூலுடன் அவரின் ‘விடுதலை’ மற்றும் அவரின் பாரியார் அடேல் பாலசிங்கம் அவர்கள் தனது கணவரின் ஒத்துழைப்புடன் எழுதிய ‘சுதந்திர வேட்கை’ என்பன தமிழ் மக்களின் விடு தலைப்போராட்ட வரலாற்றில் முக்கிய வரலாற்றுப் பதிவுகள் ஆகும்.

இந்நூல்கள் தமிழ் மக்களின் – விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றை மட்டுமல்ல, தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் விடுதலை உணர்வை, அவரின் தீர்க்க தரிசன மான, உறுதியான முடிவுகள், போராட்ட வரலாற்றின் திருப் பங்களையும் கூறுவதோடு, விடுதலைப்போராட்டத்தில் தேசத் தின் குரலான அன்ரன் பாலசிங்கம் அவர்களினதும் பங்கு பற்றியும் வெளிப்படுத் துபவையாக உள்ளன. தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் குறித்த வரலாற்று நூல்களாகவே இவை மதிப்பிடத்தக்கவை யாகயுள்ளன.

இந்தவகையில் ‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தனது பன்முகப்பட்ட ஆளுமையை தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்திற்காக அர்ப்பணிப்புச் செய்தார். அத்தகையவரின் இழப்பானது ஈடு செய்ய முடியாதது என்பது கேள்விக்கு இடமற்றது. ஆனால் ஒருவரின் வாழ்வுடன் ஒரு தேசத்தின் வரலாறு முடிந்து போய் விடுவதில்லை என்பதன் அடிப்படையில் அவர் விட்டபணியைத் தொடர்வதே அவரின் உழைப்பிற்குத் தமிழ் மக்கள் செலுத்தும் நன்றிக்கடனாக இருக்கும்.

2006 ஆம் ஆண்டு தேசத்தின் குரல் ஓய்ந்தபோது வன்னியி லிருந்து வெளிவந்த ஈழநாதம் பத்திரிகையில் அதன் பிரதம ஆசிரியர் ஜெயராஜ் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை இது.



# "தேசத்தின் குரல்" அன்ரன் பாலசிங்கம் பற்றிய புரிதல்!

வடகிழக்கு இணைந்த நிலப்பரப்பு தமிழர் தாயகமாகும். இவ்விணைப்பு பாலசிங்கம் அவர்களின் பிறப்பிலுமுண்டு. இவர் பிறப்பே தாயகக் கோட்பாட்டைச் சுமந்துள்ளது. பொதுவாக மக்கள் வயச்சிந்தனையாளர்களே ஊடகப் பணியில் தம்மை இணைப்பார்கள். வளரும் நிலையில், மக்களை நோக்கிய பார்வையைப் பெறுகிறார்கள்.

வளர்ந்த இடமான கரவெட்டி, இடதுசாரி சிந்தனைகளின் விதைநிலம். சமூக உட்கொடுமைகளுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த மாக்சிச வாதிகள் நிறைந்த சிவப்பு மண் அது.

கருத்துக்கள் பாலர் மீதும் பரவியதால், மக்கள் நலச் சிந்தனைகள் முன்னுரிமை பெற்றன.

வேற்றுமொழிச் சிந்தனைகளும், செய்திகளும் இவரால் தமிழாக்கமடைந்து, வீரகேசரி மூலம் மக்களைச் சென்றடைந்தது. மக்களுடன் நேரடி இணைப்பை உருவாக்கும் ஊடகச் சாதனமே இவரின் ஆத்மார்த்தத் தெரிவாக விருந்தது. அவை அளித்த பயிற்சியும், மாக்சிச புரிதலும் ஆளுமை திறனாக்கத்திற்கு பெரிதும் உதவி இருக்க வேண்டும்.

செயல்முறையில் மாக்சிசத் தத்துவத்தை பிரயோகித்த மேதை லெனினின், தேசிய இனங்கள் தொடர்பான சுயநிர்ணய உரிமை குறித்து கவனிக்கப்பட வேண்டிய தேவை கருதி, கூடுதல் அக்கறை கொண்டிருக்க வேண்டும்.

தேசிய இனங்கள் மீதான அரச அடக்குமுறை விரிவடையும் போது முழு இலங்கைப் புரட்சி பற்றியதான விளக்கங்கள் கனவுலகப் புரட்சிக்கே வழிவகுக்குமென்பதையும் "பாலர்" புரிந்துள்ளார்.

யதார்த்தங்களை மறுதலித்து, தத்துவங்களை நியாயப்படுத்த மேற்கொள்ளப்படும் குருட்டுத்தனமான புரட்சியை இவர் நம்பவில்லை.

இவர் எழுதிய "சோசலிச தமிழீழத்தை நோக்கி" என்கிற தேசிய விடுதலைப் போராட்டத்தின் முதன்மையான நூலில், அதற்கான விஞ்ஞானபூர்வ விளக்கத்தை தெளிவாக முன்வைத்துள்ளார்.

இவர் பல தத்துவ, சித்தாந்தங்களை தெளிவுற கற்றுணர்ந்தாலும் அவற்றை பிரபாகரன் அவர்கள் மீதோ அல்லது அவரின் விடுதலை இயக்கத்தின் மீதோ வலிந்து புகுத்த முயலவில்லை.

தன்னியல்பாக எழுந்த போராட்ட வளர்ச்சிப் போக்கினை அதன் உள்ளார்ந்த குணமாற்றத்தின் வழியில் நகர விட்டு, மண்ணின் வேரறிந்த அரசியல் தளமொன்றினை உருவாக்கினார்.

சில ஈழ விடுதலை இயக்கங்கள், தம்மை மாக்சிச வழி வந்தவர்களாகப் பிரகடனப்படுத்தியவாறு அந்தச் சித்தாந்தங்களை வலிந்து திணிப்பதிலேயே (Super Impose) முனைப்புக் காட்டின.



இலங்கையின் இடதுசாரிக் கட்சிகள் விட்ட தவறுகளை இவர்களும் செய்தனர். நடைமுறையினூடு, தத்துவங்களை அதன் வரலாற்று முன்னோக்கிய நகர்வோடு இணைப்பதில் திரு பாலசிங்கம் அவர்கள் வெற்றி கண்டுள்ளார் என்பதனை சமகால நிகழ்வுகள் சுட்டி நிற்கின்றன.

83 இனப்படுகொலையின் பின், ஊதிப் பெருத்த இயக்கங்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள், ஈரோஸ் மற்றும் அதிதீவிர இடதுசாரிகளான தமிழீழ தேசிய விடுதலை முன்னணி போன்றவை உறுப்பினர்கள் சேர்க்கையில் மிகுந்த நிதானத்துடன் செயற்பட்டன.

லண்டனில் உருவான ஈரோஸ் இயக்கத்தினர், மாக்சிச வழிமுறையில் வகுக்கப்பட்ட கொள்கைப் பிரகடனத்துடன் களமிறங்கி முற்போக்குச் சிந்தனை பெற்ற புத்திஜீவிகளை தம்முடன் இணைப்பதில் அக்கறை கொண்டார்கள்.



சித்தார்ந்தத் தெளிவு பெற்ற, உறுதியான 50 பேர் கொண்ட புத்திஜீவிகள், போராட்ட இயக்கத்தினை வழிநடத்தும் மூலக்கருவாக இருப்பார்களென்ற கருத்து ஈரோஸ் ஸ்தாபகரால் அன்று முன்வைக்கப்பட்டது.

"தனி நபர் நிறுவனத்தினை நிர்மாணிப்பார். நிறுவனமானது தலைமையினை உருவாக்கும்" என்பதே ஈரோஸ் இயக்க ஸ்தாபகர் திரு. இரத்தினசபாபதி அவர்களின் கூற்று. ஆயினும் ஈரோஸைப் பொறுத்தவரை, இக்கூற்றானது இறுதிவரை சாத்தியப்படாத தொகுதி விடயமாகி விட்டது.

இதேபோன்று என்.எல்.எவ்.டி (NLFT) இயக்கமானது திரு.விசுவானந்ததேவன் தலைமையில் மாசேதுங்கின் தத்துவச் சிந்தனையின் அடியொற்றி, போராட்டம் பற்றிய தமது கருத்தியலை முன்வைத்தது. இவர்கள் தமது தோழர்களை அரசியல் மயப்படுத்துவதிலேயே அதிக காலத்தைச் செலவிட்டுள்ளனர்.

இடதுசாரிப் பாரம்பரியத்தில் உருவான இவ்வியக்கத் தலைவர், முன்னைய இடதுகளின் அதே வழிமுறைகளைக்கையாள முற்பட்டார். குமுதினிப் படகு படுகொலையில் அவரும் இறந்து போனார்.

இவற்றுள் புலிகள் இயக்கமானது, அரச இயந்திர அடிவருடிகளைக் களையெடுப்பதினூடாகத் தமது ஆரம்ப நகர்வுகளை மேற்கொண்டது.

70 களின் முற்பகுதிகளில் தமிழ் அரச பிரதிநிதிகளும், தமிழ் காவல்துறையினரும் இணைந்து ஆயுதப் போராட்ட முனைப்பினை முளையிலே கிள்ளி எறியும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திய வரலாறு சகலருக்கும் தெரியும்.

79 வரை களையெடுப்புக்களும், பின்தளப் பண்ணைகள் உருவாக்கமும், இயக்கச் செயற்பாட்டினை நிதியினை அரச இயந்திரங்களிடமிருந்து புரட்சிகர வன்முறை வழிமூலம் பெறுதலும் இடைவிடாது நிகழ்ந்து கொண்டிருந்தன.

அடுத்த கட்ட வளர்ச்சி நிலையின் திருப்பு முனையில், திரு அன்ரன் பாலசிங்கம் அவர்களின் வருகை, புலிகளின் வரலாற்றில் அரசியல் முக்கியத்துவம் பெறுகிறது. அரசியல் பரிமாண மாற்ற நிகழ்வுகள் பாலசிங்கத்தின் இணைவுடன் புதிய அரசியல் கருத்தியல் தளமொன்றினை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குள் உருவாக்குவதை அவதானிக்கலாம்.

களை நீக்கத்திலிருந்து தொடங்கி, கெரில்லாப் போராட்ட முறைமைக்கு வளர்ச்சியுற்று, தற்போது மரபுவழி இராணுவ கட்டமைப்பினைக் கொண்டதொரு தேசிய இராணுவமாக புலிகள் உருமாற்றமடைந்து விட்டார்கள்.

இப்படி முறை வளர்ச்சியின் இயங்கியல் ஓட்டத்தில் தத்துவாசிரியரின் பங்களிப்பு, கெரில்லா போராட்ட வளர்ச்சியுடன் ஆரம்பமானதெனக் கொள்ளலாம்.

அவரின் கெரில்லா போராட்டம் குறித்தான சிறு நூலொன்றையும் அவர் சார்ந்த இயக்கம் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் பின் தளமிட்டிருந்த காலகட்டத்தில் இவர் எழுதிய "சோசலிசத் தமிழீழத்தை நோக்கி" என்ற நூல், அங்குள்ள இடதுசாரி கட்சியினரால் பெரிதும் விரும்பப்பட்டு, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை குறித்தான தெளிவான விளக்கப் புரிதலுக்குப் பொருத்தமான நூலாகக் கணிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதனை நேர்காணலொன்றில் புலிகளின் கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் பல விடுதலை இயக்கங்கள் நிலைகொண்டுள்ள காலத்தில், புலிகள் மீதான இந்திய உளவுத்துறையின் அழுத்தம் பாரியளவில் இருந்தது. தொலைத் தொடர்புச் சாதனங்களைப் பறிப்பதும், போராளிகளின் நடவடிக்கைகளை மட்டுப்படுத்துவதுமான பல விதமான புலிகள் விரோதப்போக்குகளை அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

மறுபுறமாக இந்தியாவைப் பயன்படுத்தப் போவதாகக் கூறிய மாக்சிச இயக்கங்கள், இந்தியாவின் பிராந்திய வல்லரசு நலன்களையும் தமது நலனாக இணைத்துக் கொண்டார்கள். அது சோகமான வரலாறு.

இருப்பினும் தமது இலட்சியத்தில் திடமான பற்றுறுதி கொண்ட புலிகள் இயக்கம் குறித்து இந்தியா அவதானமாக இருந்தது.

சில மாற்று இயக்கங்களைத்தூண்டி, "தேசத்தின் குரல்" அன்ரன் பாலசிங்கம் ஒரு சி.ஐ.ஏ. உளவாளி என்ற போலிப் பரப்புரையை முடுக்கி விட்டனர்.

சமகால அரசியல் கள நிலவரக் காட்சிகளை கோர்வையாக்கினால் தமது மக்களின் விடுதலையை வென்றெடுக்க எந்த ஏகாதிபத்தியங்களின் அச்சுறுத்தல்களிற்கும் அடிபணிய புலிகள் தயாரில்லை யென்பதை உணர்ந்து கொள்ளலாம்.

இப்போலிப் பரப்புரையின் பிதாமகர்கள், தற்போது ஏகாதிபத்தியங்களுடன் கூட்டுச் சேர்ந்து, விடுதலைப் போரினை நசுக்க முயல்வதனை புரிந்தால் சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள் யாரென்பது தெரியும்.




தனது பிராந்திய நலன்சார் வெளியுறவுக் கொள்கைக்கு கட்டுண்டு போக மறுத்த புலிகளை அச்சுறுத்த, "தேசத்தின் குரலை" நாட்டை விட்டகற்றியது இந்தியா. அவரோடு சந்திரகாசனையும் வெளியேற்றி புலிகளை அமெரிக்க ஆதரவாளர்களாக்க முயற்சித்தார்கள். ஆயினும் புலிகள் தடுமாறவில்லை.

சகல சேறுகளும் பூசியாயிற்று. இனி பூச ஏதுமற்ற நிலையில் இந்திய – இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டது.

பெங்களூரில் அரசியல் போராளி பாலசிங்கத்தின் அறிவாயுதம் கொண்டு அதனையும் எதிர்கொண்டனர் புலிகள்.

யுத்தம் மூண்டது. உதவி செய்வதாக நடித்த தலைவலி தானாக ஒதுங்கிக் கொண்டது.

ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கெதிராக உள்நாட்டு எதிரியான சியாங்கே சேக்குடன் கூட்டுச் சேர்ந்த மாவோவின் தந்திரோபாய நகர்வினைப் பிரயோகித்து, பிரேமதாசாவுடன் உடன்படிக்கை கண்டார் "தேசத்தின் குரல்".

பிராந்திய வல்லாதிக்க அமைதிப் படையை வெளியேற்றிய பின், தற்காலிக சமரசம் கொண்ட இன மேலாதிக்க எதிரியுடன் சமர் புரிந்தனர் புலிகள்.

போராட்டச் சக்தியினை பெரிய அழிவொன்றிலிருந்து மீட்டெடுத்த அன்ரன் பாலசிங்கம் அவர்களின் அறிவாயுதப் பங்கு மிகப் பெரியது. அடுத்ததாக 2001 ஆம் ஆண்டு புலிகளால் பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தமானது, போராட்டத்தினை சர்வதேசமயப்படுத்த வேண்டிய தேவை கருதி உருவாக்கப்பட்டதொரு முன்னகர்வு உத்தியாகும்.

முரண்பாடுகளைச் சரியாகக் கையாண்டு, தேசிய விடுதலைப் போரினை முன்னகர்த்தும் பிரபாகரன் அவர்களின் முதன்மையான அரசியல் போராட்டத் தளபதியாக "தேசத்தின் குரல்" பாலசிங்கம் விளங்கினார்.

மேற்குலகின் காலநீட்சித் தந்திரத்தினை எதிர்கொண்ட புலிகள், திரு. அன்ரன் பாலசிங்கத்தினூடாக தமிழ் மக்களின் விடுதலை வேட்கையை, தன்னாட்சிப் பிறப்புரிமையை பேச்சுவார்த்தை மேடைகளில் உலகறியச் செய்தனர்.

பேச்சுவார்த்தைச் சடங்குகள் இனி நடைபெறும் வாய்ப்புக்கள் மிக அரிதாகத் தென்பட்டாலும் தமிழீழ நாட்டுருவாக்க கால கட்டத்தில் "பாலரின்" பங்களிப்பு உணரப்படப்போகிறது.

அவர் இன்று இல்லை. இருப்பினும் அவர் ஆளுமைத் திறனை அவரோடு இருந்து உள்வாங்கிய தலைமை, அதனையும் எதிர்கொள்ளும்.

நன்றி: -சி.இதயச்சந்திரன்- வீரகேசரி வார வெளியீடு (24.12.06)

# “போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்த பெருமைக்குரியவர் புதுவை இரத்தினதுரை”

தமிழ் வாசகர்களுக்கு புதுவை அண்ணருக் குமான அறிமுகம் தேவையில்லை. வீச்சும், மூச்சுமான அவரது படைப்புக்களுக்கு எமது விடுதலைப்போரில் தனியானதோர் இட முண்டு.

சொல்லப்போனால் விடுதலைப்போரின் வர லாற்றுடன் சேர்ந்து அவரது கவிதைகளும் பயணித்துள்ளன எனலாம்.

புதுவை அண்ணருக்கு வாய்த்துள்ள அற்புத மான கவி ஆற்றலும், அனாசயமான சொல் வளமும் அவரை பெரும் கவிஞர்களது வரிசை யில் சேர்த்துள்ளது. இவற்றுடன் அவர் தன் னை இணைத்துக் கொண்ட இலட்சிய வாழ் வும் அவரது படைப்புக்களில் சேர்ந்துள்ளது. இவையே அவரை “காலத்தின் குரலாகப் பேசும்” கவிஞராக ஆக்கியது எனலாம்.

சிலவேளைகளில் எனக்கென தனியாகக்கூட தலைவர் அவர்கள் வாசித்து காட்டியுள்ளார்.

இலக்கிய வித்தகரும், பெரும் கவிஞருமான அவரது நூலுக்கு கருத்து எழுதுவதற்கு






விடுதலைப் போராடடம் போரியலில் முனைப் புப்பெற்ற 1987க்கு முந்திய காலத்தில் அவரது கவிதைகள் ஒரு தேசம் என்ற கருத்தின் தோல் வியை உரைத்தன. எம் தேசியத்து எழுச் சியின் நம்பிக்கையைக் கூறின.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு காலத்தில் அவரது பாடல்கள் காடுகளின் கரந்துறை விடுதலை வாழ்வியலுடன் பயணித்தன.

யாழ்ப்பாணத்தில் பதுங்குகுழி வாழ்க் கைக்கும் அவரது கவிதைகள் பழக்கமாயின. விமானத்தின் குண்டு வீச்சுக்களும், பீரங் கிகளின் எறிகணை வீச்சுக்களும் அவரது கவிதைப் பொருளாயின. அவற்றின் படு கொலை வீச்சுக்கண்டு வெம்பி, வெடித்து கோபம் கொண்டு சாபமிட்டன.

யாழ்ப்பாணத்தைவிட்டு விடுதலைப்போரியல் தலைமை இடம்பெயர்ந்த போது புதுவை அண்ணரின் கவிதைகளும் அழுதபடியே சேர்ந்துவந்தன. ஆனால் நம்பிக்கை தளராத வரிகளுடன் விடுதலைக்கனவு குலையாத பாடல்களாய்.

பொருட்தடை, மருந்துத்தடை, போக்குவரத் துத்தடையென எல்லாத் தடையினுள்ளும் கிடந்தழுந்திய எம்மக்களுடன் சேர்ந்திருந்தன புதுவை அண்ணரின் கவிதைகள். வன்னி யினுள்ளே நடந்தேறிய விடுதலை வேள் வியில் சேர்ந்தொலித்தன அவரது பாடல் களும்.

இராணுவக் கொலை வலயத்தினுள் பயணிக் கும் இளம் வீரருடன் சேர்ந்து புதுவை அண் ணரின் பாடல்களும் பயணித்தன. எம்மக் களுக்கு ஆறுதல் சொல்லின... போரிட அழைத்தன... போரிட்டன... வெற்றிச் செய்திகளும் சொல்லின... விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் பற்றி மட்டுமல்லாது, தமிழீழ கட்டமைப்பு, எமது தேசத்து நில புலங்கள், மக்களது கலாச்சார வாழ்வியல்கள், தமிழீழப் பெண்களது புரட்சிகர போரியல், சர்வதேச அரசியலுடனான எம்மின வாழ்வு என புதுவை அண்ணரது படைப்புக்கள் பன் முகப்பட்ட வாசிப்பனுபவத்தை தருபவை.

புதுவை அண்ணரது கவிதைகள், பாடல்கள் பற்றி எம்முள்ளே பேசப்படும் வேளைகளில் “காலத்தின் குரல்கள்” என்று கூறுவேன். எமது விடுதலைப்போர் கடந்து வந்த பாதையின் வீரமும், சோகமும், கோபமும், மகிழ்ச்சியும், பெருமிதமுமென மாறி மாறிய உணர் வுகளைக் கொண்ட காலங்களைக் கடந்துள் ளோம். அந்தக்கால உணர்வுகளின் குரலாக புதுவை அண்ணரின் படைப்புக்கள் பதிவு பெற்றுள்ளன என்பது எனது கருத்து.

இங்கு நூலுருப் பெறும் உலைக்களம் அவ் வகையில் எழுந்த உணர்வு வரிகளின் தொகுப்பு. அந்தந்த காலத்தய விடுதலைப் போரின் களநிலைகளைத் தழுவிய உணர் வின் குரல்கள்.

இந்த உலைக்களத்தின் சிறப்பு என நான் பார்ப்பது இது வெறும் புதுவை இரத்தினதுரை என்ற தனி ஒருவனின் உணர்வின் குரலாக




மட்டும் அமைந்து விடாததுதான். மாறாக உலைக்களத்தை ஆழ்ந்து, விரும்பி வாசிக் கும் ஒவ்வொருவருக்கும் பொருந்திப் போகும் உணர்வுகளின் வெளிப்பாடுகளை அவற்றில் காணலாம். போராளி நிலையிலோ, பொது மகனின் நிலையிலோ அல்லது படித்தவரின் நிலையிலோ, பாமரரின் நிலையிலோ எந்த நிலையில் நின்று பார்க்கும் போதும் அவர வரின் உணர்வின் வரிகளாக உலைக்களம் பொருந்தி வரும்.

ஆக்கிரமிப்பாளர்கள் பயங்கரவாதமென வர் ணிக்கும் விடுதலைப் போரியல் நடவடிக் கைகள் உலைக்களத்தில் பல இடங்களில் பேசப்பட்டுள்ளன. அந்நடவடிக்கைகளின் பின்னே உள்ள அர்ப்பணிப்புக்களையும், எம்மினத்தின் உணர்வுகளையும், அரசியல் அர்த்தங்களுடன் உலைக்களத்தில் பதிவாக் கியுள்ளார்.

எமது தலைவர் அவர்கள் உலைக்களத்தை ஒவ்வொரு வாரியாக ஏற்றி, இறக்கி, தணித்து வாசிக்கும் வேளையில் அருகில் இருந்து கேட்கும் வாய்ப்பை பெற்றிருக்கிறேன்.

தலைவர் அவர்கள் சிறந்த வாசகர் என்பதற்கு மேலாக உலைக்களத்தின் கருத்தோட்டத்தில் மீதான ஈர்ப்பே அதனை அவரை அப்படி வாசிக்க வைத்திருக்குமென நம்புகிறேன்.

“போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்த பெருமைக்குரியவர்” எனவும், “எம் விடுதலைப் போராட்ட வாழ்வையும், வரலாற் றையும் தமிழீழ இலக்கிய இயக்கத்திற்குள் முதன்மைப்படுத்தி தமிழ்த் தேசிய பிரக் ஞையை விழிப்புறச்செய்ய உழைத்தவர்.” எனவும் எம் தேசியத் தலைவர் அவர்களால் விதந்து பாராட்டுப்பெற்ற புதுவை அண் ணரைப் பற்றி நான் சொல்ல என்னதான் உள்ளது?

வாசகன் என்ற தகுதிநிலை போதுமெனக் கூறிய புதுவை அண்ணரது வார்த்தைக்கு கட்டுண்டு எழுதியுள்ளேன்.

எமது விடுதலைப்போர் எதிர்கால மாண வர்களுக்கான ஆய்வுப் பொருளாகும் காலம் வரும். அவ்வேளையில் விடுதலைப் போராட் டம் கடந்துவந்த வரலாற்றுப் பாதையின் போக்குகளையும், இந்த போருடன் வாழ்ந்த மானிடரின் மன உணர்வுகளையும், சொல் லும் பெட்டகமாக உலைக்களம் திகழும் என நம்புகிறேன்.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”

அன்புடன்
ச.பொட்டு அம்மான்
பொறுப்பாளர்
புலனாய்வுத் துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்

முக்கிய குறிப்பு :-

2009 ஆண்டு சர்வதேச துணையுடம் சிங்கள அரசின் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலில் மே மாதம் 2009 இல் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மௌனிக் கப்பட்ட பின்னர் 146,679 தமிழர்கள் வன்னி பிரதேசத்திலிருந்து வலிந்து கானாமல் ஆக்கப் பட்டார்கள் இவர்களில் புதுவை இரத்தின துரை அவர்களும் அடங்குவார்கள் இவர் களுடன் காணாமல்போன எம் தமிழ் உறவு களுக்கு என்ன நடந்தது என்று சிங்கள அசரே பொறுப்பு கூற வேண்டும்




Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com


வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START
PAST DUE NOTICE
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%
கடனுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
Stop collection calls, legal action & garnishments
உங்கள் சொத்துக்கள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP)
மாதாந்த ரீதியில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out bankruptcy
வங்குரோத்து சட்டங்களில் மாற்றங்கள். மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
NEW Changes from Bankruptcy Act. Call me for Details.
Suren Sornalingam
Certified Insolvency Counsellor
DSC DEBT SOLUTION CANADA
55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON
M1P 4X4
Tel: 647-274-2832
Fax: 647-794-1991
web: www.debtsolutioncanada.ca


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


GOODLIFE
FLOORING
MEGA
SALE
GoodLife
Flooring Inc.
Hardwood • Laminate • Vinyl
Tile • Carpet • Stairs • Kitchen
Countertops • Painting
Hardwood $2.99 / sq. ft
Vinyl $ 1.99 / sq. ft
Laminate $ 1.99 sq. ft
goodlifeflooringinc@gmail.com
1275 Morningside Ave Unit14, Scarborough, ON M1B3W1
www.goodlifeflooring.ca
416.293.0550 647.287.9979

# “எல்லாக் காட்டிலேயும் சிங்கம் தான் ராஜா, ஆனால் எங்கள் காட்டில் புலிதான் ராஜா”

## தேசத்தின் குரல்

எல்லாக் காட்டிலேயும் சிங்கம்தான் ராஜா. ஆனால், எங்கள் காட்டில் புலிதான் ராஜா! (தேசத்தின் குரல் ஆண்டன் பாலசிங்கம் அவர்கள் லண்டன் பேட்டி)

‘ஒரு முறை தலைவர் பிரபாகரன் என்னிடம் சொன்னார்– ‘ஓய்வென்பது நமக்கு மரணத்தில்தான் சாத்தியம்!’ என்று. அதுதான் சத்தியம்!”

வசந்த காலத்தின் கைகளைக் குலுக்கி விடைபெறுகிறது குளிர் காலம். தெற்கு லண்டனில், மனைவி அடேல் பாலசிங்கத்துடன் எளிமையாக வாழ்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகரான ஆண்டன் பாலசிங்கம்!

சிறுநீரகக் கோளாறு, நீரிழிவு என உடலைத் துன்புறுத்தும் நோய்களுக்கிடையிலும், ஓயாத உழைப்பு, ஓய்வில்லாத பயணங்கள், இயக்கப்பணிகள் என உற்சாகமாக இருக்கிறார் தமிழ் ஈழத்தின் “சிந்தனைச் சுரங்கம்”!

விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான தனது பிணைப்பு பற்றிப் பேச ஆரம்பித்தார் ஆண்டன் பாலசிங்கம்…

எழுபத்தெட்டாம் வருடம்… லண்டன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக இருந்தபோதுதான், முதன்முறையாக அடேலைச் சந்தித்தேன். ஒருமித்த கருத்துடைய நாங்கள் பல்வேறு அரசியல் இயக்கங்களில் பங்குபெற ஆரம்பித்தோம். தென்னாப்பிரிக்கா, பாலஸ்தீனம், ஜிம்பாப்வே போன்ற நாடுகளின் விடுதலைக்கு ஆதரவான போராட்டங்களிலும், அமெரிக்கக் காலனி ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் தீவிரமாகப் போராடி வந்தோம். இந்த நிலைமையில்தான், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் என்னைத் தொடர்பு கொண்டார். உலகிலுள்ள பல்வேறு ‘கெரில்ல’ விடுதலைப் போராட்டங்களைப் பற்றியும், அவற்றின் வரலாறுகளையும் தமிழில் மொழி பெயர்த்துத் தரும்படி கேட்டார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசியல் பயிற்சி வகுப்புகள் நடத்த அழைப்பு விடுத்தார். நான் முதன்முதலாக பிரபாகரனை சென்னையில்தான் சந்தித்தேன். அதன் பிறகு, வருடந்தோறும் சென்னைக்கு வந்து சில மாதங்கள் தங்கி, போராளிகளுக்கு அரசியல் பயிற்சி வகுப்புகள் நடத்த ஆரம்பித்தேன். அப்படி ஆரம்பித்தது எங்கள் நட்பு!



இத்தனை வருட உறவில், எனக்கும் பிரபாகரனுக்கும் கருத்து வேறுபாடுகள் வந்திருக்கின்றன. ஆனால், எங்களுக் கிடையிலான நல்லுறவில் எப்போதும் பாதிப்பு ஏற்பட்டதில்லை. காரணம், நாங்கள் மிகச் சிறந்த நண்பர்கள்.

விடுதலைப் புலிகளின் சிந்தனை வடிவம், லட்சியம், அரசியல் கொள்கை ஆகியவற்றை வகுத்துக் கொடுத்தது நான்தான். ஆனால், போரியல் ரீதியான வளர்ச்சியில் இந்த இயக்கத்தை நெறிப்படுத்தித் திட்டமிட்டு, ஆயுதப் போராட்டத்தின் தந்தையாக விளங்குபவர் பிரபாகரன். என்னுடைய அரசியலும், அவரது போரியலும் இணைந்துதான் எமது விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. தலைவர் என்கிற ரீதியில் அவருக்குதான் நாங்கள் வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

இந்த இயக்கத்தில் நான் ஒரு தொண்டன். எல்லாக்காட்டிலேயும் சிங்கம்தான் ராஜா. ஆனால், எங்கள் காட்டில் புலிதான் ராஜா!” என்கிறார் அழகான சிரிப்புடன்.

கேள்விகளை முன்வைக்கிறோம். சில கேள்விகளுக்குச் சிரிக்கிறார். சில கேள்விகளைத் தவிர்க்கிறார். ஆனால் எது குறித்துப் பேசினாலும், அதன் வரலாறும், அது தொடர்பான புள்ளிவிவரங்களும் கொட்டுகின்றன

“முதன்முதலாக விடுதலைப் புலிகளை ஒரு போராளி அமைப்பாக அங்கீகரித்ததோடு, ஈழப் பிரச்னையில் பேச்சுவார்த்தைகளைத் துவக்கி வைத்த இந்தியா, தற்போது ஈழப் பிரச்னையிலிருந்து விலகி இருப்பதைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?”

“புலிகள் இயக்கத்தின் தோற்றத்துக்கு முன்பிருந்தே இந்தியா, ஈழத் தமிழ் மக்கள் மீது அனுதாபமும் கருணையும் காட்டி வந்துள்ளது. அதற்குக் காரணம், ஈழத்தில் இருந்தாலும் இன ரீதியாக நாங்கள் இந்தியர்கள்தான்! எங்களது மூல வரலாறு இந்தியாவிலிருந்துதான் ஆரம்பமாகிறது.

எண்பத்து மூன்றாம் வருடம், இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக ஒரு மிகப் பெரிய வன்முறை கட்ட விழ்த்துவிடப்பட்டு, பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். உடைமைகள் சேதப்படுத்தப்பட்டன. அது தமிழ்நாட்டில் பெருங் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. ஆர்ப்பாட்டங்களின் மூலமும், பேரணிகள் மூலமும் தமிழக மக்கள் தங்கள் ஈழத்தமிழர் ஆதரவு உணர்ச்சிகளைக் காட்டினார்கள். அப்போதுதான், ஈழத் தமிழர் பிரச்னை என்பது ஏதோ இலங்கைத் தீவுக்குள் அடங்கும் பிரச்னை அல்ல அதன் விளைவுகள் இந்தியாவின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற உண்மையை உலகம் உணர்ந்தது.

அதன் பிறகு, இந்திய அரசு ஈழத் தமிழர் பிரச்னையில் நேரடியாகத் தலையிட ஆரம்பித்தது. இந்தச் சூழ்நிலையில்தான், ஈழத் தமிழர் பாதுகாப்புக்கு ஒரு கவசமாக எமது விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், வேறு சில போராளிக் குழுக்களுக்கும் ஆயுதம் கொடுத்து, இராணுவப் பயிற்சி கொடுத்து எங்களை வளர்த்தது இந்தியா. இது வரலாற்று உண்மை!

அதை நாங்கள் எப்போதும் மறந்ததில்லை. இப்படியாக எங்களுக்குப் பேருதவிகள் செய்து, எங்களை ஒரு விடுதலை அமைப்பாக அங்கீகாரம் செய்து, திம்பு பேச்சு வார்த்தையில் பங்கு பெறச்செய்ததும் இந்தியாதான். அதன் பிறகு பல்வேறு காரணங்களால், இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சில முரண்பாடுகள் எழுந்தன (இந்த இடத்தில், கவனத்தோடு சில கடந்த கால நிகழ்வுகளைத் தவிர்க்கிறார்).

அதனால், இடைவெளிகள் தோன்றின. சில மனக்கசப்பான சம்பவங்கள் நிகழ்ந்தன. ஆனாலும், ஒட்டுமொத்தமாகச் சொல்லும்போது, இந்தியா அன்றிலிருந்து இன்றுவரை எப்போதுமே ஈழத் தமிழர்கள்பால் அனுதாபத்தோடுதான் நடந்து வருகிறது. இந்த நிலை தொடர வேண்டும், ஈழத் தமிழர்களின் நியாயமான உணர்வுகளை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்பதே எம் விருப்பம்.”

“இந்தியா மற்றும் புலிகள் உறவில் முரண்பாடு ஏற்பட முக்கியமாக என்ன காரணம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?”

“தமிழீழம் சுதந்திர நாடாக உருவாக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது விடுதலைப் புலிகள் இயக்கம். சிங்களப் பேரினவாதிகளிடம் இருந்து எம் மக்களுக்கு எந்த நியாயமும் கிடைக்காது என்று நாங்கள் உறுதியாக நம்பினோம். அதனால்தான் எம் மண்ணை மீட்டெடுத்து, எமக்கான சுதந்திரத் தமிழீழத்தை உருவாக்குவதில் தெளிவாக இருந்தோம். ஆனால், இந்திய அரசு இதை விரும்பவில்லை.

தமிழீழத்தில் ஒரு தனியரசு உருவானால், அது தமிழ்நாட்டிலும், இந்தியாவின் மற்ற சமூகங்களிடத்திலும் பிரிவினை எண்ணத்தைத் தோற்று விக்கும் என்ற அச்சத்தினால், எமது லட்சியத்தை அவர்கள் ஏற்க மறுத் தார்கள். இந்த அடிப்படையில்தான் முரண்பாடு எழுந்தது.”

“தற்போது இந்திய அரசின் அணுகுமுறையில் மாற்றம் வரும் என்று நினைக்கிறீர்களா?”

“இந்தியா நேரடியாக இந்தப் பிரச்னையில் இராணுவ ரீதியாகத் தலையிட்டு, புலிகளுக்கு எதிராக ஒரு பெரும் இராணுவ நடவடிக்கையை எடுத்துப் பெரும் தோல்வியைத்தான் சந்தித்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய இராணுவத்தால் நசுக்க முடியவில்லை. மற்றபடி புலிகள் இயக்கம், இந்தியாவைப் பகைத்துக்கொள்ள விரும்பியதில்லை. எங்களுக்கு எதிராக யுத்தம் திணிக்கப்பட்ட காரணத்தால்தான் எதிர்த்துப்போராட நிர்ப்பந்திக்கப்பட்டோமே தவிர, நாங்கள் இந்தியாவுக்கு எதிராக ஆயுதங்களைத் தூக்குவதற்கு ஒருபோதும் விரும்பியதில்லை.

ஏனென்றால், தமிழீழத்தைத் தாய்நாடாகப் பார்க்கும் நாங்கள், இந்தியாவைத் தந்தை நாடாகத்தான் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் மத்தியில் நல்ல நட்புறவு ஏற்பட வேண்டும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். அப்படியான ஒரு சூழ்நிலை நிச்சயம் விரைவில் ஏற்படும் என்பதுதான் எனது கருத்து.”

“ஈழப் போராட்டத்தில், உங்களது பங்களிப்பில் நெகிழ வைத்த தருணம் என்று எதைக் கருதுகிறீர்கள்?”

“இந்திய அமைதிப்படை ஈழத்தில் இருந்தபோது நடைபெற்ற துயரச் சம்பவம்தான் என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது.

எண்பத்தேழாம் வருடம், அக்டோபர் இரண்டாம் தேதி பருத்தித்துறை கடற்பகுதியில் வைத்து குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட பதினைந்து முக்கியப் போராளிகள் சிறீலங்கா கடற்படையினரால் நிராயுதபாணிகளாகக் கைது செய்யப்பட்டு, பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருந்தார்கள். இந்திய அரசுடனும், இலங்கைக்கான இந்தியத் தூதுவரிடமும் பேசி அவர்களை விடுவிக்கும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டு இருந்தது.

நான் இந்தியத் தூதரிடம் பேசியபோது, இலங்கை இராணுவத்துடன் பேசி அவர்களை விடுதலை செய்து விடலாம் என்று நம்பிக்கை தெரிவித்தார். நான் பலாலி இராணுவ முகாமில், சிங்கள ராணுவத்தின் வசமிருந்த எம் போராளிகளை இந்திய அமைதிப்படை அதிகாரிகளின் உதவியுடன் சந்தித்தேன். எம் போராளிகள் அங்கு குற்றவாளிகளைப் போலத்தரையில் உட்கார வைக்கப்பட்டிருக்க, அவர்களை நோக்கித் துப்பாக்கி முனைகளைத் திருப்பியவாறு சிங்கள இராணுவத்தினர் நின்றிருந்தனர். நான் போராளிகளிடம் பேசினேன். அவர்கள் மகிழ்ச்சியுடனும், கலக்கமின்றியும் தாங்கள் விடுவிக்கப்பட்டு விடுவோம் என்ற முழு நம்பிக்கையுடனும் இருந்தார்கள்.

குமரப்பாவும், புலேந்திரனும் அதற்குச் சமீபத்தில்தான் காதல் திருமணம் செய்துகொண்டவர்கள். அவர்கள் தங்கள் மனைவியருக்கு, ‘கவலைப்பட வேண்டாம். விரைவில் வந்துவிடுவோம்’ என்கிற தகவலை என் மூலம்தான் சொல்லியனுப் பினார்கள். ஆனால், மறுநாளே நிலைமை மோசமானது. இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் அதுலத் முதலி, போராளிகளை கொழும்புவுக்குக் கொண்டுவந்து விசாரணைக்கு உட்படுத்த இரகசியத் திட்டமிட்டிருப்பதாக, இந்திய இராணுவ அதிகாரிகள் என்னிடம்



தெரிவித்தனர்.

நான் மறுபடியும் போராளிகளைச் சந்தித்தேன். அப்போது அவர்கள், தலைவர் பிரபாகரனுக்கு ஒரு இரகசிய கடிதத்தை என்னிடம் தந்து அனுப்பினர். நான் அந்தக் கடிதத்தை அன்றிரவே தலைவரிடம் சேர்த்தேன். இயக்க மரபுப்படி, எதிரிகளிடம் சிக்காமல் வீர மரணம் அடைய ஏதுவாக, தங்களுக்கு சயனைட் குப்பிகளை வழங்கக் கோரி எழுதிய கடிதம் அது. அதைப் படித்ததும் பிரபாகரனின் கண்கள் கலங்கின. உதடுகளைக் கடித்தபடி சற்று நேரம் யோசித்தவர், இந்திய அரசுடன் மேலும் பேசி, உடனடியாகப் போராளிகளை மீட்கும்படி சொன்னார். நான் மீண்டும் முயன்றேன். ஆனால், என் முயற்சி எதுவும் பலன் அளிக்கவில்லை. இந்தியத் தூதரும் தன்னால் எதுவும் செய்ய முடியாத அளவுக்கு நிலைமை ஆபத்தாகிவிட்ட தாகத் தெரிவித்தார்.

மறுநாள், ஒரு விசேட இராணுவ விமானத்தை அதுலத் முதலி, பலாலிக்கு அனுப்பிவைத்துள்ளார் என்றும், அன்று மாலை ஐந்து மணிக்கு எமது போராளிகள் பலவந்தமாக விமானத்தில் ஏற்றப்படுவார்கள் என்றும் இந்தியத் தூதர் என்னிடம் கூறினார்.

நான் உடனடியாக விரைந்து சென்று, பிரபாகரனிடம் தகவலைத் தெரிவித்தேன். துயரமும், கவலையும், கோபமும், விரக்தியுமாக பல்வேறு உணர்வலைகள் கலந்ததால், பிரபாகரனின் முகம் விகாரமாக மாறியது. தனது மெய்ப்பாதுகாவலர்களான புலி வீரர்களை அழைத்து, அவர்களது கழுத்துகளில் தொங்கிய சயனைட் விஷக் குப்பிகளைச் சேர்த்தெடுத்து, என் கழுத்திலும், மாத்தையாவின் கழுத்திலும் மாலையாக அணிவித்தார். எப்படியாவது அந்தக் குப்பிகளை எமது போராளிகளிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

அன்று மதியம் உணவுப் பொதிகளுடன் பலாலி தளம் சென்று, எமது போராளிகளுடன் நிகழ்த்திய இறுதிச் சந்திப்பின்போது தலைவரின் வேண்டுகோளை நான் நிறைவு செய்தேன். எதிரிகளிடம் சிக்கிச் சாவதைவிட, தங்களின் உயிரைத் தாங்களே மாய்த்துக்கொள்ள, அந்தப்பதினைந்து போராளிகளும் சயனைட் குப்பியைக் கடித்தார்கள். சிங்கள இராணுவத்தார் துப்பாக்கி பேனட்டாலும், லத்தியாலும் அவர்களின் தொண்டைக் குழிக்குள் குத்தி, விஷம் இதயத்தில் பாய்வதைத் தடுக்க முயன்றபோதும், எமது மிக முக்கியமான பத்து வேங்கைகள் அந்த இடத்திலேயே வீர மரணம் எய்தினர். ஐந்து பேர் மட்டும் பிழைக்கவைக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராட்ட இலட்சியத்துக்காக நான் பட்ட அனுபவங்களில், இதுவே எனது ஆன்மாவை உலுக்கிய மிக வேதனையான சம்பவமாகும்!”



சக்தி ஊடகத்திற்கான நேர்காணல் தொகுப்பு



# ஆழத்துயர் புதைத்து மீளல்

வானக்கூரையின் கீழேயொரு வாழ்வுசமைத்து
வாசலெங்கும் பூவாய் மலர்ந்திருந்தோம்.
காற்றுக்கு கையசைத்து
குயிலுக்கு குரல் வழங்கி
மழையின் பாதங்களுக்கு கொலுசு மாட்டி
சின்ன ஜீவிதமெனினும் சிரித்திருந்தோம்.
சுமையற்றிருந்ததால்
வலியற்றிருந்தது எம் வாழ்வு.
வெளியெ தெரியவரதா வெளிச்சமாய்
அழகெழுத்திடந்தது அன்றாடம்.
இடையில் வந்தனதான்
இத்தனை இடியும் வதையும்.
காலவெள்ளம் கரைக்கக் கரைக்க
வாழ்வின் சுவர்கள் வலிமையிழந்தன.
இடிமேல் இடியிறங்க
குட்டிச்சுவரானது சிதிலமுற்ற சுவரை
பூகம்பப்பேய் பிய்த்தெறிந்தது இன்று.
'சுனாமி'
என்ற பெயர்கொண்டு அழைத்தாலும்
எமக்கிது எமன்.
வாழ்வைக் குதறிய வல்லூறு.
26.12.2004 ஞாயிற்றுக்கிழமை
அன்றும் வழமைபோற்தான் விடிந்தது.
எந்த அசுமாத்தமுமின்றிக் கிடந்தது கடல்.
மடியேறுவோரைச் சுமந்தும்
கரைவாழுவோருடன் மகிழ்ந்தும்
படகோடும் வலையோடும் கலகலத்தபடி
'கனககுதுகலம்' பாடியது கடல்.
உள்ளே மீன்களும்
வெளியே பறவைகளும்
கடலின் பாடலுக்குத் தாளமிட்டன.
எல்லாம் வழமைபோற்தான் வடிவுகாட்டின.
எவரறிவார் இப்படியும் இடிவிழலாமென்று?
வந்தது இடி.
என்ன நடக்குதென எவருக்கும் தெரியாமல்
வந்ததும் போனதுமான சில கணங்களில்
வரைபடமே மாறிவிட்டது.
இழகுமுகம் மாறி அழுகைமுகமானது கரை.
விடிந்தபொழுது இருண்டுபோனது.
கடலள்ளிப்போனது
எங்கள் காவிரிப்பூம்பட்டினங்களை.
கழிக்குள் அள்ளுண்டோரின்
அபயக்குரல்களை உள்ளேயமுக்கி
உயிர்கொண்டுபோனது அலை.
ஊர்கள்
உறவுகள்
வேர்கள்
விழுதுகள்
பூக்கள், பிஞ்சுகள், காய்கள், பழங்களென
பசியாறிப்போனது பாழ்பட்ட கடல்
எதையும் விடவில்லை எமன்.
ஓடிச்சென்று பார்த்தவர் முன்னே
ஒன்றுமிருக்கவில்லை.
முகம் சிதைந்த கரையும்
உயிர்குடித்து வீசிய உடல்களும்
இந்தா எடுத்துப்போ என்பதாய் கிடந்தன.
ஒற்றைக்குருவி தனித்திருந்து தேம்புதல்போல்
ஆயிரமாயிரம் உயிரற்ற சடலங்கள் முன்னே
ஒரு சில உயிருள்ள சடலங்கள் அழுகின்றன.
எல்லோரும் ஊமையராய்
எல்லோரும் வலுவற்றவராய்
எழுந்துலவும் மரங்களெனத் திரிகின்றனர்.
இனி என்ன வந்தென்ன?
இந்திரபுரிகள் இடிந்துவிட்டனவே
நிலவிற்குளிக்கும் சிற்றில்களும்
உள்ளிருக்கும் உயிர்களும் போயினவே.
அழகு போனது
அம்பாப்பாட்டு போனது
கூத்துப் போனது
கும்மாளம் போனது
கட்டுச்சோறு காட்டி கரைவந்து
கையசைக்கும் காதலியர் போயினர்.
மடிநிறைந்து கரைதிரும்ப ஓடிவரும்
உரிஞ்சான்குண்டிச் செல்வங்களில்லையே.
கடல்வற்றி நிலமான விந்தையும்
கறுப்பு நிறமாகி அலைவந்த அதிசயமும்
புரிவதற்கும் அறிவதற்கும் நெடுநாளாகும்.
அறியப்படாமலும் போகலாம்.
விஞ்ஞான சூத்திரங்கள் விடுவிக்கப்படும்போது
விதியா இது சாதியா என்பது விளங்கும்.
என்ன நடந்தாலும்
இனிப் போனவுயிர் வருமா
தொலைந்த வாழ்வு திரும்புமா?
முள்முடி சூடி
முதகிற் பாரச்சிலுவை சுமந்த
பாவப்பட்ட மக்களின் பயணப்பாடு முடிந்தது.
இயேசுவே!
எம்மையேன் இரட்சிக்க மறந்தீர் சுவாமி.
ஆலமுண்ட நீலகண்டனே!
எம்மைச் சாவு தின்றபோது தாங்காதிருந்ததுக்கு
அன்றுமட்டும் உமக்கென்ன அலுவலிருந்தது பிரபு.
அல்லாவே!
பிள்ளைகளைக் கைவிட்டதேனோ?
புத்தபெருமானே!
வெள்ளம் வருகுதென்றாயினும்
சொல்லவேண்டாமோ?
எல்லோரும் ஒதுங்கிக்கொண்டீர்கள்
நாங்கள்தான் தனித்துப்போனோம்.
வேண்டாம் இனியுமுகங்கள் விளையாட்டு.
துயராற்றி நாங்களே நிமிர்ந்தாலன்றி
சோகம் தீராது.
இது பூப்பறிக்கும் தேசமாயின்
பலகாலம் அழுதபடி கிடந்தாலும் பழுதில்லை.
போரிடும் தேசமல்லவா எம்பூமி.
நிச்சயம் நமிர்ந்தாகவேண்டும்
இல்லையேல் நிர்மூலமாகி விடுவோம்.
சேத நிலவரத்தை பார்வையிடுவதுபோல
தேச நிலைமைகளையும் கணக்கிட்டுப்போகலாம்.
நாடிபிடித்தறிய நல்லவேளை எனக் கணித்து
கூடிக்குலவ வரலாம்.
குண்டெங்கே வைக்கலாமேன அறிய
தொண்டரென்று துரோகிகளும் வரலாம்.
நாங்கள் நிமிர்ந்தாக வேண்டும்.
ஆழத்துயரெனினும் அதைப்புதைத்து
மீளவேண்டும் விரைவில்.
தொடரும் சோகங்களை கற்களாக்கி
ஏணிப்படியொன்று இணக்குவோம்.
வேரறுந்தாலும் முளைகொள்ளும்
அறுகம்புல்லின ஜாதி நாம்.
மேலே வேர் கொள்வோம்.
இத்தனை வேகத்தில் சோகம் மீளுவோமென்பது
கோபத்தைக்கூடத் தரலாம்.
எம் பிள்ளைகளின் வாழ்வுக்காக
இனியும் இருக்கிறதல்லவா மீதிப்பயணம்?
எனவே சோகத்தைத் மொலைப்போம்
யாகத்தீ வளர்ப்போம்.

உலைக்களம் - வியாசன்





# தமிழீழ உட்கட்டுமானம்

## STRUCTURES OF THAMILEELAM



**சுயநிறைவான தன்னில்தானே தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாகவேண்டும் என்பதே, எனது விரும்பம்: மக்கள் தம்மைத்தாமே ஆளும் உரியையுடைய சனநாயக ஆட்சி முறையையே நான் விரும்புகின்றேன். இந்தப் புதிய சமூகத்தில், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ வேண்டும்.**

**தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வெளியீடு**




### நீர்முகாமைத்துமும் விவசாயத்தைக்கட்டுப்படுத்தவலும்

இயற்கையின் குறைபாடான வரட்சியையும், வெள்ளத்தையும் வெற்றிபெற விவசாயியின் கருவியாக (வழிவகை) நீர்ப் பாசனமும், வடிகால், வாய்க்கால், அமைப்புமேயாகும். பயிர் களின் விளைச்சலைக் கூட்டவும் இவைகளை நியாயமாகப் பாவிக்கலாம். இந்தப் பாவனைக்குப் பெயர்தான் நீர்முாமைத் துவம் தூரதிஷ்ட வசமாக திருப்தியான முறையில் இந்த விவ சாயிகளோ அல்லது ஆளும் மேலாண்மையில் உள்ளோரோ இதனை அடையாளம் காணவில்லை. இதுதான் சோகமா யிருக்கிறது.

இலங்கையில் 2 ஏக்கர் தொடக்கம் 5 ஏக்கர் வரை பெரிய நீர்ப் பாய்ச்சப்பட்ட காணிகளை அனேகமாக குடியேற்றக்காரர் களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அனேக குடியேற்றக்காரர்கள் விவ சாயப் பின்னணியில் வரவில்லை. விவசாயத்தைப்பற்றி அறிந்த சிலரும் தங்கள் முன்னோரால் செய்யப்பட்டு வந்த எந்த வொரு அக்கறையும் காட் டவில்லை. ஏனெனில் முதலாளி மாருக்குக் காணிகள் வழங்கப்பட வில்லை. விஞ்ஞான விவசாயம் இதற்குள் உட்புகவில்லை.

விவசாயத்திற்கு கொடுக்கப்பட்ட காணிகள் ஒரே தொகையாகவும், ஒவ்வொரு விவசாயியும் தன் னுடைய பங்கு தன் னுடைய பங்குக் குப் பக்கத்தில் செல்லும் பகிர்ந் தளிக்கும் வாய்க் காலில் இருந்து நேராக நீர்ப்பாசனம் பெறலாம். இருந்தும் விவசாயி தன்னுடைய பங்கை சிறிய வேலை செய்யத் தகுந்த பகுதிகளாக மண்ணினால் அணைகட்டிப் பிரித்தார். அப்படிப் பிரிக்கப்பட்ட பங்குகளுக்கு நீர்ப்பாய்ச்ச வாய்க்கால் இல்லை. வடிகாலில் இருந்து பாயும் நீர் ஒரு விவசாயியின் நிலப் பிரதேசத்தின் கடைசிப் பகுதி வரை பரிக்கப்பட்ட பல பகுதி களுக்கு செல்லவேண்டியிருந்தது. இதனால் ஆரம்பப் பகுதியி லுள்ளவற்றிற்கு தேவைக்குக் கூடுதலாகக் நீர் கிடைத்தது. கீழ்யுள்ள பகுதிகள் வடி வாய்க்காலுக்கு அண்மையில் இருந் தன. பின் தொடரும் வடிவாய்க் காலுக்கு கிட்டவுள்ள பகுதிகளில் தொடர்ச்சியாக நீர் காணப்பட்டது. இங்கு நீர் மட்டம் உயர்ந்து நீர் தேங்கி நிற்கக் காரணமாகிவிட்டது. ஆகவே கீழ்யுள்ள நீரில் பிராணவாயு குறை வாகயிருப்பதனால் பயிர் களைத் தாக்கின. மேல் பகுதியில் உள்ள கூடுதலான நீர் விவசாயத்தினால் பெறும் வருவாயைக் குறைக்கும். அதே சமயம் கீழ்யுள்ள பகுதிகள் செரிமாணம் செய்ய முடியாமல் கஷ்டப்படுகின்றது. இதனால் கூடுத லான நீரினால் தீமையே விளையும் என்பது தெரிகின்றது.

வாய்க்கால் இல்லாமையும் தீமையே உண்டாகும். போதுமான அளவு நீர் பயிர்களுக்குக் கிடைக்காவிட்டால் பயிர்கள் தாக்கத் திற்குள்ளாகின்றன. விவசாயத்திற்குச் சீரான முறையில் நீர் விநியோகித்தல் அவசியமானது. நீர் விவசாயத்தின் மற்றொரு வருவாய் என எண்ணிச் சீரான முறையில் கட்டுப்படுத்தல் வேண்டும்.

நீர்ப்பாசனத் திட்டத்தில் உள்புகும் நீர் பகிர்ந்து அளிக்கும் போது சில சமயம் 50 வீதம் வீணாவதாக எண்ணப்பட்டது. தவறுத லான பாவனையினால் விவசாயம் செய்யப்படும் பகுதிக்குள் செல்லும் நீரினால் அளப்பரிய நட்டமும் உண்டாகும். மிகவும் பிழையாகக் கண்காணிக்கப்படும் திட்டங்களில் 20 - 30 வீதமளவில் நீர் மிகவும் கூடுதலாக விரையமாகின்றது. நீர் விரயத்தைப்பற்றி கூடுதலான அறிவு பெறப்படுவதாலும், நீர்-பயிர் உறவைப்பற்றி உணர்வதாலும் நீர் முகாமைத்துவம் மிக மிக அவசியமானது என்பதாகும். சரியான நேரத்தில் சரியான கணக்கின் பிரகாரம் நீர் விநியோகிக்கவும் பாவனைக் கஷ்டங் களைக் முறைக்கவும் நடவடிக்கை எடுப்பது தேவைப்படு கின்றது.

சீரான நீர் முகாமைத்துவத்திற்கு விவசாயியும் மேலாண் மையில் உள்ளோரும் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நீர் - பயிர் உறவுமுறை மிகவும் புதிய விடயம் எனவும் விவசாயத்தில் பயிற்றப்பட்ட அலுவலர்களே தேவையான அறிவு பெறவில்லை எனவும் நம்பப்பட்டது. நிச்சயமாக இலங்கையில் இதே நிலைதான். ஆகவே இவ்வறிவு தேவைப்படும் சகலரும் பெறக்கூடியதாக வழிவகைகள் உடன் எடுக்கப்படல் வேண்டும். பின்வரும் விடயங்களில் ஆராய்ச்சி செய்தல் வேண்டும்.

1. மண்-நீர்-பயிர் உறவு.
2. மண்ணுள் நீர் உட்புகும் தன்மை.
3. நீர் தேவை.
4. நீராவி போக்கு ஏற்படுத்தல் (ஆவியாக்குதல்).
5. நேரக்கணிப்பும், கணக்கின்படி நீர் விண்ணப் பித்தலும்.
6. திறமையான நீர்த் தேக்கம்.
7. வடிகால், வாய்க்கால்.

புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்த கட்டுப்பாடு உள்ளபடியால் செயல்முறைப் பகுதிகளைக் கொண்டு ஆரம்பித்தல் சிறப்பு. முறையிலேயே இப்பகுதிகளை முழு வெற்றியளிக்கக்கூடியதாக செய்யாவிட்டால் ஆர்வம் காட்டுவோரும் ஆர்வத்தை இழந்து விடுவார்கள். இவைகளை நடாத்தும் அலுவலர்கள், நிச்சய மாகத் திறமையானவர்களாக இருத்தல் வேண்டும்.

நீர் முகாமைத்துவத்தைத் திறம்படச் செய்தால் நிச்சயமாக கூடுதலான அளவு காணிகளை நீர்ப்பாசனத்தின் கீழ் கொண்டுவர முடியும்.

தொடரும்...

விளம்பரம்
என்பது
உங்கள்
வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு

437.345.4203

# இனவாத அரசியலை அம்பலப்படுத்திய சுனாமி!

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களினதும் - சிறீலங்கா சனாதிபதி திருமதி சந்திரிகா அம்மையார் அவர்களினதும் தலைமைத்துவ ஆற்றல் களையும், குணவியல்புகளையும் ஒப்பிட்டு மதிப்பீடு செய்யும் ஒரு அளவுகோலாக சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னான அவர்களின் செயற்பாடுகளை சர்வதேச சமூகம் எடைபோட்டுப் பார்க்கின்றது.

அந்தப் பேரழிவில் சிக்கி உயிரிழந்த தமிழ் - முஸ்லிம் - சிங்கள மக்கள் அனைவர்க்கும் அனுதாபம் தெரிவித்து தலைவர் பிரபாகரன் அறிக்கை விட்டதிலிருந்து, நிவாரண உதவிகள் இன பேதமில்லாமல் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்று பாதிக் கப்பட்ட எல்லோர்க்கும் ஆதரவாக பொதுவாகக் குரல்கொடுத்து உன்னத மனிதாபிமான நிலைப்பாட்டை அவர் எடுத்திருந்தார்.

அலை அடித்து ஓய்ந்த உடனே, மிக விரைவாக, மீட்பு நடவடிக் கைகளில் ஈடுபட்டு பொறுப்புணர்வுடன் செயற்திறமை காட் டியது, இந்தப் பிராந்தியத்திலேயே புலிகள் இயக்கம்தான் என் பது இன்று ஒரு பொதுவான கருத்தாகிவிட்டது.

சந்திரிகா அம்மையாரும், சிங்கள உறுமய கட்சியினரும் இதை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு அந்த உண்மை ஏகமனதாக உணரப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கத்தின் கடற்புலி வீரர்களை, காவல்துறை உறுப் பினர்களை, போராளிகளை மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உள்ளிட்ட மனிதநேய உதவி அமைப்புகளின் தொண் டர்களை உடனடியாகவே களமிறங்கி மீட்பு நடவடிக்கையில் ஈடுபட தலைவர் உத்தரவிட்டிருந்தார்.

விளைவு! வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களே வியந்து - பாராட்டும் அளவுக்கு ஒரு அற்புதமான இடர்கால மீட்புப் பணியை புலிகள் இயக்கம் செவ்வனே நிறைவேற்றியுள்ளது. உயிர் ஆபத்திற்குள்ளும் தங்களை மீட்கவந்த புலிவீரர்களை அந்த மக்கள் நன்றியுடன் நினைவு கூருகின்றனர்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் சிங்களப் படையினர் குறுக் கிட்டு, குழப்பங்களை விளைவித்தபோதும் பொறுமைகாத்து மக்கள் பணியாற்றும்படி தலைவர் போராளிகளுக்கு உத்தரவிட் டிருந்தார்.

சில இடங்களில் அலைநீரில் சிக்கிய சிங்களப் படையாட்களை மீட்டு இராணுவத்திடமே ஒப்படைத்த சம்பவங்களும் நடந்தேறி யுள்ளன. அதேசமயம், கிழக்கு மாகாணத்தில் இனபேதம் காட்டாமல் பாதிக்கப்பட்ட அனைத்துச்சமூக மக்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிவாரண உதவிகளை வழங்கி தலைவரின் மனிதாபிமான நிலைப்பாட்டை - நிறைவேற்றிச் செயற்பட்டது.




கிளிநொச்சி வந்து தலைவர் பிரபாகரனைச் சந்தித்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான உயர்மட்ட குழு வினருடனும் இனபேதமற்ற தனது மனிதாபிமான நிலைப் பாட்டையே தலைவர் முன் வைத்திருந்தார். அத்துடன் அனர்த்த முகாமைத்துவத்துடன் சமாதான முயற்சிகளையும் இணைத் துச் செயற்படுத்துவதே சிறந்தது என்றும் ஆலோசனை கூறி யுள்ளார்.

சுனாமி அனர்த்தத்திற்குள் சிங்கள அரசைப்போன்று இன ரீதியான அரசியலைப் புகுத்தும் சிறுமைத் தனத்தை புலிகள் இயக்கம் செய்யவில்லை.

பெருந்தொகைப் படையினர் இயற்கைச் சீற்றத்தில் பலியாகி யிருந்த போதும் - அதைப் பிரச்சாரப்படுத்தி குதூகலிக்கும் நாகரீகமற்ற அரசியலை புலிகள் இயக்கம் செய்யவில்லை.

அத்துடன் அழிவடைந்த பகுதிகளைப் பார்வையிடவந்த உலகத்தலைவர்களை முல்லைத்தீவு செல்லவிடாது தடுத்து அவர்களைச் சங்கடப்படுத்திய சிங்கள அரசின் இனவாதச் செயற்பாட்டை பெரிய விடயமாக எடுத்து அந்த உலகத் தலைவர் களை மேலும் சங்கடத்துக்குள்ளாக்காமல் அரசியல் நாகரீகத் துடன் புலிகள் இயக்கம் நடந்துகொண்டது.



இதேவேளை, கடந்த வருடம் தென்னிலங்கையில் பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு சிங்கள மக்கள் பெரும் பாதிப் படைந்தபோது அங்கே நிவாரணப் பொருட்களுடன் சென்ற புலிகள் இயக்கம் சிங்கள மக்களுக்கு உதவிய மனிதாபிமான செயற்பாட்டையும் உலகம் அவதானித்தபடியே இருந்தது.

இவ்விதமாக, தேவை ஏற்படும்போதும், தேசிய அளவில் நெருக் கடிகள் ஏற்படும்போதெல்லாம் புலிகள் இயக்கம் அரசியல் நாக ரீகத்தையும் - மனிதாபிமான நிலைப்பாட்டையும் கடைப் பிடித்தபடி பண்பாக நடந்துகொண்டதை உலகசமூகம் அறியும்.

இவையெல்லாம் தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் அபாரமான தலைமைத்துவ ஆளுமை யினதும், சீரிய உயர் பண்புகளினதும் அரசியல் வெளிப் பாடுகளே என்பதை உலக சமூகம் எடைபோட்டிருந்தன.

ஆனால், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா அம்மையாரோ இதற்கு முரணானதொரு அரசியல் செயற்பாட்டையே இந்த இடர்கால நெருக்கடி வேளையிலும் நடாத்தி வருகின்றார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உடனடி மீட்பு நடவடிக்கைகளை அரசு சரியாக நடாத்தியிருக்கவில்லை என்று ஊடகங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

அரச தலைவியின் ஆளுமையின்மையும், அதன் விளைவான அரச இயந்திரத்தின் அசமந்தப்போக்குமே இந்த செயற்திறனின் மைக்கு முக்கிய காரணங்கள் என்பது உலக ஊடகங்களின் கருத்தாகும்.

அம்பாறை மாவட்டத்தின் அரச அதிபராக உள்ள சிங்கள அதிகாரி அனர்த்தம் நடந்தும் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கவில்லை. அம்பாறையில் சிங்கள மக்கள் பாதிக்கப்படவில்லை என்பதே அவரின் இந்த புறக்கணிப்புக்குக் காரணம். இது தொடர்பாக முஸ்லிம் அரசியல்வாதிகளின் கடுமையான அழுத்தத்தின் விளைவாக முஸ்லிம் அதிகாரி ஒருவர் அம்பாறையின் மேலதிக அரச அதிபராக நியமிக்கப் பட்டார். அவரின் தலைமையிலேயே அம்பாறையில் அரச இயந்திரத்தின் இடர்காலப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்தகையதொரு தேசிய அனர்த்தவேளையிலும் ஒரு சிங்கள அதிகாரி மனிதாபிமானமில்லாமல் தனது இனவெறி உணர்வை செயலில் காட்டியிருந்தபோதும் அவருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் சந்திரிகா அம்மையார் எடுக்க வில்லை. இது அம்மையாரின் இனவெறி உணர்வையே வெளிப்படுத்துகின்றது என்பதே உண்மையாகும்.

திருகோணமலை மாவட்டத்திலும் இதே நிலைமைதான் இருந்தது. அரச நிவாரணங்கள் இனரீதியாக வரையறுத்து - பாகுபாடாகவே நடந்தன. தமிழ்மக்களுக்குச் சென்ற நிவாரணப் பொருட்கள் படையினராலும் - ஜே.வி.பியினராலும் - சிங்களக் காடையர்களாலும் வழிமறிக்கப்பட்டு திசைதிருப்பப்பட்டன. இத்தகைய குற்றச் செயல்களுக்கும் எந்தவித சட்ட நடவடிக் கைகளையும் அம்மையாரின் அரசு எடுக்கவில்லை.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளை அண்மித்திருந்த சிங்கள மக்கள் இந்த மீட்பு நடவடிக் கைகளிலும் - நிவாரண முயற்சிகளிலும் மனிதாபிமானமாக நடந்துகொண்டனர் என்பதும் முக்கிய செய்திகளாகும்.

இலங்கைத்தீவை சுனாமி தாக்கியபோது தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு மாநிலங்களே பெரிதும் பாதிக்கப்பட்டன. இந்த உண்மையைக்கூட ஏற்கமறுத்த அம்மையார் தென்னிலங் கைதான் அதிகம் பாதிப்படைந்ததாக ஊடகங்களுக்குத் தெரிவித் திருந்தார்.

உலகநாடுகள் வழங்கிய உதவிப் பொருட்களைக்கூட பாதிக் கப்பட்ட மக்களுக்கு சமமாகப் பிரித்தளிக்க அவர் தவறிவிட்டார். இந்த இயற்கை அனர்த்தவேளையிலும் சிங்களவர் - தமிழர் என்று பிரித்துப் பார்த்து தனது இனவாதச் செயற்பாட்டையே காட்டியுள்ளார்.

முப்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருந்தும் - இலட்சக் கணக்கான மக்கள் வீடுகளை இழந்திருந்தும் - பில் லியன் ரூபா சொத்தழிவு ஏற்பட்டிருந்த இந்த துயர நேரத்திலும் அம்மையார் அவர்கள் புலிகள் இயக்கத்திற்கு ஏற்பட்ட இழப் புகளை மிகைப்படுத்தி - மகிழ்ச்சி தெரிவித்து - கருத்துக்களை கூறிக்கொண்டிருந்தார்.

தலைவர் பிரபாகரன் இறந்து விட்டார் - கடற்புலிகள் அழிந்து விட்டனர் என்று தமது பேரினவாத ஆசைகளை வெளிப்படுத்தி - கேவலமான அரசியலையே சிங்கள அரசு நடாத்திக்கொண் டிருந்தது.



உலகநாடுகளின் நிதி உதவியுடன் 15 நகரங்களை புனரமைக் கப் போவதாக சந்திரிகா அம்மையார் அறிவித்திருந்தார். அதில் ஒன்றுகூட முல்லைத்தீவு மாவட்டத்திற்கோ - யாழ்ப்பாண மாவட்டத்திற்கோ ஒதுக்கப்படவில்லை.

மனிதாபிமானப் பயணம் மேற்கொண்ட உலகத் தலைவர் களை வன்னிப்பகுதிக்கு வரவிடாமல் தடுத்து அநாகரீக அரசிய லையே அம்மையார் நடாத்தியுள்ளார்.

இவையெல்லாவற்றையும் உலகசமூகம் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கின்றது. இத்தகைய காட்டுமிராண்டி மனநிலையுடன் இருக்கும் ஒரு ஆட்சிப்பீடத்திடமிருந்து தமிழ் மக்கள் எவ்வாறு அரசியல் உரிமைகளை அமைதிவழியில் பெற முடியும்!? என்று உலகசமூகம் உணர்ந்திருக்கும்.

ஒருபுறத்தில் தேசிய ஆளுமையையும் - செயல்திறமையையும் கொண்ட ஒரு தலைமை செயற்பட்டுக் கொண்டிருக்கும் அதே வேளை இன்னொரு புறத்தில் இனவெறி உணர்வையும் - சோம்பேறித் தனத்தையும் கொண்டதொரு அரைகுறைத் தலைமை இலங்கைத்தீவில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது என்ற உண்மையை உலகசமூகம் அவதானித்தபடி உள்ளது.

-எல்லாளன்.

விடுதலைப்புலிகள் (மார்கழி 2004 – தை, 2005)

# மாவீரர் கனவுகளை நனவாக்கும் பொறுப்பை நமது மாவீரர்கள் அடுத்த தலைமுறையிடம் விட்டுச் சென்றுள்ளார்கள்!

## பிரதமர் உருத்திரகுமாரன் வி. ருத்திரகுமாரன்

27.11.2022

இன்று தமிழீழத் தேசிய மாவீரர் நாள்.

தமிழீழத் தேசத்தின் விடுதலைக்காய் தமதுயிரை ஈகம் செய்த நமது வீரமறவர்களின் நினைவுகளை நாம் நமது இதயக் கோவில்களில் வைத்துப் பூசிக்கும் நாள்.

தமிழீழ மக்கள் தேசிய விடுலையையும் சமூக விடுதலையையும் அடைந்தவர்களாய், தமது தாயகப்பூமியில் சிங்களத்தின் இனவழிப்புக் குறித்த அச்சம் அற்றவர்களாக, சமூகநீதி நிலவும் சமுதாயமொன்றில் இன்புற வாழவேண்டும் என்ற கனவுடன் களமாடி வீரச்சாவடைந்த நமது தேசப்புதல்வர்களின் நினைவு நாள்.

நமது சிறிய தமிழீழத் தேசத்தினை உலகவரைபடத்தில் நிலைநிறுத்தி, நமது தேசத்தின் சுதந்திர வேட்கையை தமது வீரத்தாலும், ஈகத்தாலும் வரலாற்றில் பதித்து விட்டுச் சென்ற உத்தமர்களின் திருநாள்.

மாவீர்கள் தமிழீழ மக்களின் மூச்செங்கிலும் நிறைந்துள்ளார்கள்.

தமிழீழ மண்ணெங்கும் விதைந்துள்ளார்கள்.

தமிழீழ கடலெங்கும், வான்பரப்பெங்கும் நீக்கமறப் பரந்துள்ளார்கள்.

தமிழீழ தேசத்தின் காவல் வீரர்களாய், நமது தேசத்தினை எதிரிகள் எவரும் அடிமை கொண்டு விடாதவாறு சுதந்திரக் கனலை மூட்டி விட்டவர்களாய் எம்முடன் அவர்கள் இறுகப் பிணைந்துள்ளார்கள்.

தமது வீரர்களை வழிபடும் மரபினைக் கொண்ட தமிழ் மக்கள் இன்று நமது வீரர்களைத் தாம் தமது வாழ்வில் கண்ட தெய்வங்களாக உருவகித்து வழிபடுகின்றனர்.

சங்ககால மரபு கண்ட நடுகல் வழிபாட்டுக்கு சமகால எடுத்துக் காட்டாக நமது தமிழ் மக்கள் மேற்கொள்ளும் மாவீரர் வழிபாடு அமைகிறது.

மாவீரர்களை நினைவு கொள்ளும் இன்றைய நாளில் நாம் மாவீரர்களின் கனவுகளை நம் மனதில் இருத்தி, அவர்தம் கனவுகளை நனவாக்க நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகளை நம் மனதிலிருத்த வேண்டியது மிக அவசியமானதாகும்.

நமது தேசத்துக்காக தம்முயிர் ஈந்த மாவீரர்களை இன்றைய மாவீரர் நாளில் வணங்கி அவர்கள் நம் தேசத்துக்காக செய்த பணிக்கு, ஈகத்துக்கு வணக்கமும் நன்றியும் தெரிவிக்கும் நாளாக மட்டும் இன்றைய நாளை நாம் அணுகக்கூடாது.

மாவீரர் நாளில் மாவீரர்களுக்கு செய்யும் வணக்கத்துடன் நமது தேசத்துக்கான, நமது மாவீரர்களுக்கான கடமைகளை நாம் ஆற்றி விட்டோம் எனத் திருப்தி அடையவும் முடியாது.

ஆடி அமாவாசை நாளில் தந்தையினையும், சித்திரை பௌர்ணமியில் அம்மாவையும் நினைவு கூர்ந்து நன்றி தெரிவிப்பதுபோல், மாவீரர் நாளில் மாவீரர்களை நினைவு கூர்ந்து நன்றி தெரிவிக்கும் நாளாக மட்டும் நாம் இந்நாளைக் கருதி விடக்கூடாது.

நாம் மாவீரர்களை வணங்குவது, போற்றுவது ஒரு சடங்கு வழிப்பட்ட நடைமுறையாக மட்டும் குறுகி விடக்கூடாது.

மாறாக மாவீரர் கனவுகளை நனவாக்குவது குறித்த சிந்தனையையும் செயற்பாட்டையும் கூர்மையடைச் செய்யும் நாளாக மாவீரர் நாளை நாம் நமக்குள் வரித்துக் கொள்ள வேண்டும்.

மாவீரர் கனவுகளை நனவாக்கும் பொறுப்பை நமது மாவீரர்கள் நமது தலைமுறையிடம் விட்டுச் சென்றுள்ளார்கள் என்ற பொறுப்புணர்வுடன் நாம் அனைவரும் செயற்பட வேண்டும் என்ற உள்ளுணர்வை மாவீரர் நாள் நமக்குள் ஏற்படுத்த வேண்டும்.

இன்றைய நாளில் நாம் மாவீரர்களுக்கான சுடரை ஏற்றி வணக்கம் செலுத்தும் போது மாவீரர்களின் கனவுகளை நனவாக்குவதற்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றுவோம் என நமக்குள் நாமே உறுதி பூண்டு கொள்வோம்.

இந்த உறுதியுடன், உலகில் தமிழ் மக்கள் வாழும் இடமெங்கும் நமது மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் மக்களுடன் இணைந்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கமும் தலைசாய்த்து நமது மாவீரர்களுக்கு தனது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

அன்பான மக்களே,

இன்றைய மாவீரர் நாளில் மாவீரர் கனவுளை நனவாக்குவது




குறித்த சிந்தனையை நாம் கூர்மைப்படுத்த வேண்டும்.

மாவீரர்களின் கனவு என்பது சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசை தமிழீழத் தாயகப்பிரதேசத்தில் அமைக்க வேண்டும் என்பதே.

இக் கனவு உலகில் தமிழ் மக்களுக்கு என ஓர் அரசு அமைய வேண்டும் என்ற விருப்பினால் மட்டும் தோன்றியதொன்றல்ல.

சிங்கள தேசத்தின் இனவழிப்பில் இருந்து ஈழத் தமிழ்த் தேசம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாக இருந்தால், தமிழீழ மக்களுக்காக ஒரு தனியரசு அமைக்கப்படுவதனைத் தவிர வழியேதுமில்லை என வரலாறு காட்டி நின்ற வழியே தமிழீழத் தனியரசினை அமைப்பதற்காக 60,000 க்கும் மேற்பட்ட மாவீரர்கள் தம்முயிரை ஈகம் செய்வதற்குக் காரணமாக அமைந்தது.

இன்றைய சூழலிலும் சிங்களத்தின் இனவழிப்பில் இருந்து தமிழீழ மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தமிழீழத் தனியரசைத் தவிர வழியேதுமில்லை என்பதே நடைமுறை உண்மையாக இருக்கிறது.

தமிழீழம் சாத்தியமில்லை எனக் கூறுபவர்கள் எவராலும் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் சிங்களத்தின் கட்டமைப்புச் சார்ந்த இனவழிப்பில் இருந்து தமிழீழ மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழியையோ தீர்வையோ காட்ட முடியவில்லை.

தமிழீழ மக்களின் தாயகப்பிரதேசத்தைக் கபளீகரம் செய்து, தமிழீழ மக்களின் தேசிய தனித்துவத்தை சிதைத்து, தமிழீழ தேசத்தை இனவழிப்புக்கு உள்ளாக்கும் தனது திட்டத்தை தடுக்கக் கூடிய எந்தவொரு அரசியல் ஏற்பாட்டையும் சிங்கள பௌத்த இனவாதம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

இதனால், ஈழத் தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாப்பதற்கானதொரு ஏற்பாட்டை சிங்கள சிறீலங்கா அரசுடன் பேச்சுக்களை நடாத்தி, அதன் சம்மதத்துடன் அடைந்து விடலாம் என எவரும் எதிர்பார்ப்பின் அது இலகு காத்த கிளியின் கதையையே நமக்கு நினைவூட்டும்.

தமிழீழ மக்கள் சிங்களத்தின் இனவழிப்பில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஏற்பாடான தமிழீழத் தனியரசானது உள்ளூர் நிலைமைகளில் இருந்து மட்டும் உருவாகக் கூடியதல்ல.

மாறாக, இது அனைத்துலக அரசியற்சூழல், மற்றும் இந்து மகாசமுத்திரத்தினதும், தென்னாசியப்பிராந்தியத்தினதும் புவிசார் அரசியற்சூழலிருந்து ஊற்றெடுக்க வேண்டியது. தற்போது நம் முன்னால் உள்ள கடமையானது புவிசார் அரசியல் சூழல் எவ்வாறு எமது அரசியல் நலன்களுக்கு இசைவாக அமைவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதும் அனைத்துலகச்சூழல் உருவாகும் போது சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசை அமைக்கக்கூடிய சூழலை பேணுவதும் அதனைத் தக்க வைப்பதுமாகும்.

இதற்கு, தமிழீழ தேசம் தனது தேசத்தகமையைப் பாதுகாப்பது மிகவும் அடிப்படையானதாகும்.

தமிழீழத் தாயகத்தை கபளீகரம் செய்தும், அதனைத் துண்டாடியும், சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டும் தமிழர் தாயகத்தின் தொடர்ச்சியை இல்லாதொழிப்தற்குச் சிங்கள இனவாதப்பூதம் பகீரத முயற்சிகளைச் செய்து வருகிறது.

குறிப்பாக, தமிழர் தாயகத்தின் வடக்கு, தெற்குப் (தென் தமிழீழம் - கிழக்கு மாகாணம்) பகுதிகளை இரு கூறாக்குவதில் சிங்களம் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

1948 ஆம் ஆண்டு இலங்கைத்தீவு பிரித்தானியரிடமிருந்து ‘சுதந்திரம்’ அடைந்த போது கிழக்கு மாகாணத்தில் 1 வீதமாக இருந்த சிங்கள மக்களின் தொகை இன்று 30 வீதத்துக்கும் அதிகமாக உள்ளது. கிழக்கு மாகாணத்தை நிலரீதியாக மட்டுமன்றி அரசியல்ரீதியாகவும் ஆக்கிரமிப்பதற்கும் சிங்களம் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. இதற்காக தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியில் திட்டமிட்ட முறையில் முரண்பாடுகளையும் ஏற்படுத்தி வந்திருக்கிறது.

தமிழ் - முஸ்லீம் முரண்பாட்டைத் தூண்டி விடுவதன் ஊடாக சிங்கள அரசுடன் இணைந்து மற்றத் தரப்பை வெற்றி கொள்ள முடியும் என்றதொரு மாயையை இரண்டு தரப்பின் மத்தியிலும் ஏற்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது.

இதன் ஊடாக, தமிழத் தேசிய அரசியலை கிழக்கு மாகாணத்தில் பலவீனப்படுத்தி, சிங்கள தேசியக் கட்சிகளின் கீழ் தமிழ் . முஸ்லீம் மக்களைக் கொண்டு வரும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. இதேபோல, வடக்கு மாகாணத்திலும் தமிழ் மக்கள் மத்தியில் சாதி, சமய, பிரதேச வேறுபாடுகளைத் தூண்டி விடுவதன் மூலம் தமிழ்த் தேசிய அரசியலைப் பலவீனப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் சிங்கள பௌத்த இனவாதம் செயற்பட்டு வருகிறது.

தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் சிங்கள அரசின் சூழ்ச்சி குறித்து மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். குரங்கு அப்பம் பிரித்த கதையில் வரும் குரங்கு போலத்தான் சிங்கள அரசு செயற்படும் என்ற விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

தமிழீழ மக்கள் ஒரு தேசமாக நன்கு வலுப்பட்டு, உருத்திரண்டு நின்று தமிழீழ மக்களின் அரசியற்பிரச்சினைக்கு தமிழீழத் தனியரசே தீர்வாக அமையும் என்பதனை வலியுறுத்தி நிற்பதே அனைத்துலகச்சூழல் எமக்குச் சாதகமாக அமையும் காலத்தில் நமது விடுதலையை வென்றெடுக்கத் துணை நிற்கும்.

அன்பான மக்களே,

தமிழீழத் தனியரசின் உருவாக்கம் அனைத்துலக நிலைமைகளுடன் தொடர்புபட்டது என்பதனால் அனைத்துலக அரங்கில் நமக்கான வாய்ப்புக்கள் எவ்வாறு உள்ளன என்பது குறித்தும் நாம் இத் தருணத்தில் சிந்தித்தல் பொருத்தமாக அமையும்.

2009 ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பின் ஊடாகத் தமிழீழ மண் சிங்களத்தின் முழுமையான ஆக்கிரமிப்

புக்கு உள்ளான காலத்தில் உலகம் ஒற்றை அதிகாரமைய உலக ஒழுங்கின் கீழ் இருந்தது.

ஒற்றை அதிகாரமைய அரசியல் ஒழுங்கில் அரசற்ற தேசங் களுக்கான அனைத்துலக அரசியல் வெளி மிகவும் மட்டுப்பட் டதாகவே பொதுவாக இருக்கும். அரசியல் ஒழுங்கைத் தலைமை தாங்கும் வல்லரசுகளோடு அரசற்ற தேசங்களது நலன்கள் ஒத்துப் போகாதுவிடின் அத் தேசங்களின் போராட் டங்கள் தோற்கடிக்கப்படுவது இயல்பானதொன்றாக அமைந்து விடும்.

1991 ஆம் ஆண்டின் முன்னே உலகம் இரட்டை அதிகார மையம் கொண்டதாக இருந்த காலத்தில் போராடும் சிறிய தேசங்களுக்கு பல்வேறுவகையான வாய்ப்புகள் இருந்தன.

அனைத்துலக அரசுகள் தமது அதிகாரத்துக்காக இரட்டை மையமயப்பட்டு போகும்போது இவற்றுக்கிடையே கிடைக்கும் சில வெளிகளைப் போராடும் தேசங்கள் பயன்படுத்தும் வாய் புகள் இருந்தன.

தற்போது உலகம் ஒற்றை அதிகார மையம் கொண்ட அரசியல் ஒழுங்கில் இருந்து விடுபட்டு இரட்டை அதிகார மையம் நோக் கியோ அல்லது பல அதிகார மையம் நோக்கியோ திரளும் அரசியல் போக்கு உருவாகியுள்ளது.

ரஸ்யா – உக்ரேய்ன் போரின் தொடர்ச்சி இப் போக்கை மேலும் வளர்த்து விடக்கூடிய நிலைமைகளைக் கொண்டுள்ளது.

அனைத்துலகரீதியாகவும், பிராந்தியரீதியாகவும் உருவாகி வரும் இரட்டைமைய வலுப்பரீட்சைக்கான உதாரணங்களாக இலங்கையில் அமெரிக்கா- இந்தியா எதிர் அணியிலும் சீனா, உக்ரெய்ன் யுத்தத்தில் ரஸ்யா எதிர் மேற்குலகம், தென்சீனக் கடலில் அமெரிக்கா எதிர் சீனா போன்றவற்றைக் கூறமுடியும். ஒற்றை அதிகார மையம் வலுவிழந்து இரட்டை அதிகார மையம் ஏற்படும்போது பலமிக்க அரசுகளுக்கிடையே ஏற்படும் முரண்பாடுகள் போராடும் தேசங்களுக்குப் புதிய அரசியல் வெளிகளை உருவாக்கும் வாய்ப்புக்களைக் கொண்டவையாக அமையும்.

இத்தகையதொரு சூழல் தமிழீழ தேசத்துக்கும் வாய்ப்புக்களை உருவாக்கும்.

இவ் வாய்ப்புக்களைச் சரிவரக் கையாள்வதற்குத் தமிழீழ தேசத்திடம் ஒன்றுபட்ட வலுவான அரசியல் தலைமை இருத்தல் அவசியமானதாகும்.

தற்போதைய சூழலில் தாயகத்திலும் சரி, புலம்பெயர்ந்த நாடு களிலும் சரி ஒன்றுபட்ட அரசியல் தலைமை இல்லாதுள்ளமை தமிழீழ மக்களின் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு முன் னெடுத்துச் செல்வதற்கும், அனைத்துலக நாடுகளை தமிழர் நலன் சார்ந்து கையாள்வதற்கும் முட்டுக்கட்டையாக இருக் கிறது.

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டின்பாற்பட்டு தாயகத்திலும் புலம் பெயர் மக்கள் மத்தியிலும் செயற்பட்டு வரும் அமைப்புகள் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டின் வழிநின்று ஒன்றுபட்டுச் செயற் படுவதற்கான வழிவகைகள் குறித்துச் சிந்திக்க வேண்டும்.

தாயகத்திலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் செயற்படும் அரசியல் அமைப்புகள் அரசியல் முடிவுகளை ஒன்றுபட்டு எடுப்பதற்காக ஒன்றுபட்ட உயர் தேசிய அரசியல்பீடமொன்றை அமைத்தல் பயன் தரும். தாயகத்தின் அரசியற் சூழலும் புலம் பெயர் அரசியற்சூழலும் அரசியல் வெளி சார்ந்து வேறுபட்டதாக உள்ளமையால் இத் தேசிய அரசியல் உயர்பீடம் தாயகத்துக்கும் புலம் பெயர் நாடுகளுக்கும் தனித்தனியாக அமையலாம்.

இவ்விரு அரசியல்பீடங்களும் தமக்குள் புரிந்துணர்வான உறவைப் பேணித் தமிழ் மக்கள் சார்பில் அரசியல் முடிவுகளை எடுக்கலாம்.

தாயகத்தில் தனித் தமிழீழம் கோருவதற்கான அரசியல்வெளி சிங்களத்தால் மறுக்கப்படுவதால் திம்புக் கோட்பாடுகளையும், விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன் னாட்சி அதிகார சபையில் முன்வைக்கப்பட்ட விடயங்களையும் அரசியல் வழிபாட்டுக் கோட்பாடுகளாகக் கொள்ளலாம். இத் தகைய ஒற்றுபட்ட தேசிய உயர் அரசியல்பீடம் அமைக்கப் படுவது குறித்து தமிழ் அரசியல் அமைப்புகள் தமக்குள் உரை யாடலை காலதாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும் என்ற வேண்டுதலை இன்றைய மாவீரர் நாளில் முன்வைக்கிறோம்.

மேலும், தமிழர் தேசத்தை வலுவாக்கும் பொருட்டு தமிழர் தேசிய நிதியம் ஒன்றை நம்பகத் தன்மையுடனும் வெளிப் படைத்தன்மையுடனும் ஆரம்பித்துச் செயற்படுத்த வேண டியதும் காலத்தின் தேவையாக உள்ளது. சிறீலங்கா அரசு பொருளாதார நெருக்கடியில் சிக்கி, அதன் விளைவாக ராஜபக்ச சகோததர்கள் உத்தியோகபூர்வமாக ஆட்சிப்பீடத்தில் இருந்து இறங்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் நடைமுறையில் அவர்களது ஆட்சியே நடைபெற்று வருகிறது.

சிறீலங்காவின் பொருளாதார நெருக்கடி இப்போது சற்றுத் தணிந்தது போலத் தோன்றினாலும் இந் நெருக்கடி ஆழப் புரையோடியுள்ளது என்பதும் அது நீண்டகாலம் தொடரும் என்பதும் பல நிபுணர்களின் கணிப்பாக இருக்கிறது.

இந் நெருக்கடிக்கு தமிழின அழிப்புப் போரின் போதும் அதன் பின்னரும் மேற்கோள்ளப்பட்ட இராணுவச் செலவுகள் முக்கிய பங்கு வகித்தன என்பதனை சிறீலங்கா அரசு மறைத்தே வரு கிறது. இதனை அம்பலப்படுத்த வேண்டியது அவசியமான தாகும் .

இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்களுக்கு உதவிகள் தேவைப்படும்போது அனைத்துலகப்பொறிமுறையொன்றின் ஊடாக அவற்றை நேரடியாக அனுப்பி வைப்பதற்கான ஏற் பாடுகளை செய்ய வேண்டியதும் அவசியமாக உள்ளது.

அன்பானவர்களே,

நமது மாவீரர்களை நினைவு கூரும் இந்நாளில் நமது மாவீரர்களை ஈன்ற பெற்றோர்களையும் நாம் ஆரத் தழுவிக் கொள்வோம்.

மாவீரர்களின் பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகள் வீரத்தாலும் ஈகத்தாலும் தமிழீழ மண் ணை பெருமையடையச் செய்துள்ளனர். அவர்களது ஈகம் என்றும் வீண் போகாது.

இவர்கள் ஏற்றி வைத்த விடுதலைத் தீ எமது தேசத்தை விடுவிக்கும். ஈழமணித் திருநாடு சுதந்திரக்காற்றைச் சுவாசிக்கும்.

தமிழரின் தலைவிதி தமிழரின் கையில் தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

இவ்வாறு நா.தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திர குமாரன் அவர்களது மாவீரர் நாள் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## 16.12.2005 படுகொலை



## பாலியல் வன்கொடுமை

இளையதம்பி தர்சினி – படையினர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திப் படுகொலை இளையதம்பி தர்சினியை 2005, டிசம்பர் 16 ஆம் நாள் இலங்கை இராணுவம் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திப் படுகொலை செய்தது. புங்குடுதீவில் நிலைகொண்டிருந்த கடற்படையினர் 16.12.2005 அன்று தர்சினியை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர். பின்னர் அவரைக் கொலை செய்து முகாமுக்கு அருகிலிருந்த பாழடைந்த கிணறொன்றினுள் வீசினர். கொல்லப்படுவதன் முன், அவர் பலரால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு இருப்பதற்கான தடயங்களையும், உடலின் பல இடங்களில் நகக்கீறல்கள், பற்கடிகளும் காணப்பட்டிருந்ததுடன், அவரது ஒரு மார்பு மிக மோசமாகச் சிதைக்கப்பட்டிருந்ததாகவும் வைத்தியசாலைச் சான்றிதழ் உறுதிப்படுத்தியது. ஆயினும் வழமைபோல் படையினர் எவரும் தண்டனை பெறவில்லை.





இளையதம்பி தர்சினி
(1985 - 16.12.2005)
புங்குடுதீவு)


தமிழீழம்
நெய்தல் குடியில்
இடியாக வந்த
ஆழிப்பேரலை
நினைவுப்பகிர்வு
டிசம்பர் 26, 2023
ஆழிப்பேரலை போல் 100
மடங்கு அழிவை
தந்த ஆக்கிரமிப்பு
படை